வளரும் தமிழகம்.. வளர்ந்தோங்கும் நூலகங்கள்...

பொது நூலகச் செய்திமடல்

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

பொது நூலகத் துறை வெளியீடு

ஜூலை - செப்டம்பர் 1996

With Best Compliments from:

மக்கள் குரல்
MAKKAL KURAL

Tamil Daily

The Voice of the People

20 years in the service of the people.

20 years of dedicated service. To the Nation. To Tamil Nadu. And to the people. Through constructive criticism. Visionary views. Objective approach to every public problem. Eschewing egoistic, narrow-minded approach.

In short, editorial excellence.

For further details, please contact :

Advertisement Manager

MAKKAL KURAL

Tamil Daily

1, First Main Road, United India Colony, Kodambakkam, Madras 600 024.
Phone : 483118, 4836464, Fax : 044-4832833

T-UN-650

பொருளடக்கம்

1.	வாழ்த்துச் செய்திகள்	2
2.	நூலகச் செய்திமடல்	17
3.	வீட்டிற்கோர் புத்தகசாலை	19
4.	தமிழ்நாட்டில் பொது நூலகப் பணியின் வளர்ச்சி	20
5.	நூலகமும் மனிதவளமேம்பாடும்	29
6.	21 ஆம் நூற்றாண்டில் நூலகம்	34
7.	அறியாமை அகலக் கற்கை நன்றே	38
8.	நூல்களே எதிர்கால வழித்தடங்கள்	43
9.	உங்கள் நூலகம்	46
10.	குட்டிப் பல்கலைக் கழகங்கள்	47
11.	புகைப்படக் காட்சிகள்	48
12.	வருங்காலத்தில் பொது நூலகர்	54
13.	காந்திமண்டப நூலகம்	58
14.	நூலகமே உற்ற துணை	63
15.	நூலகம் ஒரு கோவில்	64
16.	சமுதாயத்தை மேம்படுத்தும் குழந்தைகள் நூலகம்	67
17.	நூலகர்களின் வட இந்தியப் பயணம்	71
18.	நல்ல நூல் - நல்ல நண்பன்	75
19.	நூலக ஆட்சி முறை	78
20.	நூலகம்	81
21.	நூலகத்தந்தை டாக்டர் எஸ்.ஆர் அரங்கநாதன்	82
22.	நூலகர் அறிமுகம் - படிவம்	86
23.	நூலகம் வாரீர் ! நூல்களைப் பாரீர் !!	87
24.	திருக்குறளின் பெருமை	88
25.	தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை - எட்டு குறிக்கோள்கள்	93
26.	நூலகப் பெட்டகம்	94
27.	வலுவான சமுதாயம் படைக்க நூலகம்	95

தலைமை பதிப்பாசிரியர்

திரு. **இரா. கண்ணன்,**

பொது நூலக இயக்குநர்

பதிப்பாசிரியர் குழு

திருமதி. **சுசிலா கணேசன்**
துணைபொது நூலக இயக்குநர்

திருமதி. **செரீன் அகமது**
துணைபொது நூலக இயக்குநர்

திரு. **ந. ஆவுடையப்பன்**
கன்னிமாரா பொது நூலகர்

திரு. **சி. கோபால்**
உதவி பொது நூலக இயக்குநர்

திரு. **கொ. செ. ஞானதேவ்**
நூலகர்



மு. கருணாநிதி
முதலமைச்சர்

வாய்மையே வெல்லும்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009

நாள் 25.9.1996.

வாழ்த்துச் செய்தி

"நாலைந்து வீதிகளுக் கொன்று வீதம்
நல்லதுவாய் வசதியதாய்"

- நூலகங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றார் புரட்சிக் கவிஞர்.

"வீட்டிற்கொரு நூலகம் தேவை"

என்றார் பேரறிஞர் அண்ணா.

நூலகங்கள், உலகப் பேரறிஞர்களின் சிந்தனைச் செல்வங்களை, தத்துவமுத்துக்களை, தொழில் நுட்பச் சிறப்புக்களை, வகை வகையாய்த் தொகுத்து வழி வழியாய்க் காத்து இளம் தலைமுறையினர்க்கு என்றும் வழங்கி வருகின்ற கருத்துக் கருவூலங்களாகத் திகழ்பவையாகும். ஆகவேதான் தமிழ்நாடு அரசின் பொது நூலகத் துறை தமிழகம் முழுவதிலும் நூலக வசதிகளைப் பெருக்கித் தமிழக முன்னேற்றத்திற்குப் பெரும் பங்காற்றி வருகின்றது. நூலகப் பணிகளுக்கு மேலும் மெருகூட்டும் வகையில் முத்திங்களிதழாக வெளியிடப்படும் "நூலகச் செய்தி மடல்" - சிறப்புடன் திகழ உளமார வாழ்த்துகிறேன்.

(மு. கருணாநிதி)

பெறுநர்:
திரு இரா. கண்ணன், எம்.ஏ., பி.எட்.,
இயக்குநர்,
பொது நூலகங்கள்,
சென்னை-600 002.



க. அன்பழகன், எம்.ஏ.,
கல்வி அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 3.9.1996

வாழ்த்துச் செய்தி

**"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".**

என்றார் திருவள்ளுவர். படிக்கப் படிக்கத்தான் அறிவு வளரும். நூலகம் பலர் படிப்பதற்கு ஏற்ற இடமாக அமைய வேண்டும் மனித மனத்தில் தோன்றும் எண்ணங்களின் ஏணிப்படிகள் நூலகங்களே. நாடெங்கும் நூலகங்கள் பரவலாக உருவாகி வளர்ச்சி பெற்று சமூகத்திற்குச் சிறந்த தொண்டாற்ற வேண்டும்.

பொது நூலகங்களைச் சிறப்பாக நடத்திவரும் பொது நூலகத்துறை, நூலகங்களின் பயனை அனைவரும் துய்க்க ஆவன செய்தல் வேண்டும். நூல்களின் வாயிலாக சமுதாய நலனுக்கு வேண்டிய உயர்ந்த கொள்கைகளையும், பொது அறிவை வளர்க்கும் செய்திகளையும் நாட்டு மக்கள் அறிய வேண்டும். இச்செயலைப் பொதுநூலகத் துறை செய்யும்போது நாடு உண்மையான முன்னேற்றம் காணமுடியும்.

இப்படிப்பட்ட நற்செயலைச் செய்யும் முகத்தான் பொது நூலகத்துறை "நூலகச் செய்தி மடல்" என்னும் முத்திங்கள் இதழ் ஒன்றை வெளியிட உள்ளது என்ற நற்செய்தி தித்திப்பாக உள்ளது. இம்மடல் நூலகம் சார்ந்த அனைத்துச் செய்திகளையும் தாங்கிவர வேண்டும், வாசகர்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என விழைகிறேன். இப்படிப்பட்ட நற்செயலுக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என நம்புகிறேன். இம்மடல் தொடர்ந்து நூலகத்தின் பயன்களையும் சிறப்புக்களையும் தாங்கிநின்று நாட்டோர்க்கு நற்பணியாற்ற வாழ்த்துகிறேன்.

இம்மடலைச் சிறப்பாக வெளியிட முன்வந்துள்ள பொது நூலகத் துறையைப் பாராட்டுகிறேன்.

க. அன்பழகன்



முனைவர் மு. தமிழ்க்குடிமகன்,
எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்
பண்பாட்டுத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 31.5.96

வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு அரசின் கீழ் செம்மையாகச் செயல்பட்டு வரும் பொது நூலகத் துறை 'நூலகச் செய்தி மடல்' ஒன்றை முத்திங்கள் இதழாக வெளியிடச் செய்துள்ள முயற்சியைப் பாராட்டுகிறேன். இவ்விதழ் பொலிவோடும் புதுமையோடும் வெளிவர என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மு. தமிழ்க்குடிமகன்

க.அ. நம்பியார், இ.ஆ.ப.
தலைமைச் செயலாளர்

தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 17.6.96

வாழ்த்துச் செய்தி

தமிழ்நாடு அரசின் கீழ்ச் செயல்பட்டு வரும் பொது நூலகத்துறை **'நூலகச் செய்தி மடல்'** ஒன்றினை முத்திங்கள் இதழாக வெளியிட உத்தேசிப்பது குறித்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பொது நூலகப் பணி மேன்மேலும் வளர்ந்து நாட்டு மக்களின் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் நிலையிலும், தொழிலாளர்கள், விவசாயிகள், மகளிர் மற்றும் குழந்தைகள் கல்வி வளர்ச்சியிலும் உறுதுணையாக இருக்கும் என நம்புகிறேன்.

முத்திங்கள் இதழ் வெளியீட்டு விழா இனிது நடைபெற எனது உளங்கனிந்த வாழ்த்துகள்.

க.அ. நம்பியார்



சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப.
அரசுச் செயலாளர்

கல்வி, அறிவியல் மற்றும்
தொழில் நுட்பவியல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 18.6.1996

''படிப்பாற்றல் என்றும் நலன் பயக்கும் - அஃதின்றி
நடப்பாற்றல் என்றும் இல''.

நவில்தொறும் நலம் பயக்கும் நல்ல நூல்களை நாட்டில் பரவிடச் செய்து, நற்பணியாற்றி வரும் பொது நூலக இயக்ககம், வெளியீட்டுத் துறையிலும் தடம் பதித்து **''நூலகச் செய்தி மடல்''** எனும் முத்திங்கள் இதழினை வெளியிட இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறேன். நூலகத் துறை பற்றிய செய்திகளை வழங்குவதோடு, புத்தகப் பூங்காவில் பூக்கும் புதிய மலர்களையும் அறிமுகம் செய்து, பொது மக்களிடையே படிக்கும் பழக்கத்தையும், விழிப்புணர்வையும், கல்விப் புரட்சியையும் (Literacy Revolution) உருவாக்க இந்தச் ''செய்தி மடல்'' பெரிதும் துணை புரியும் என நம்புகிறேன்.

நூலகத் துறையின் முயற்சி வெல்லவும், ''நூலகச் செய்தி மடல்'' முனைப்புடன் செயல்படவும் உளமார வாழ்த்துகிறேன்.

சா.பா. இளங்கோவன்

டாக்டர் சி. பழனிவேலு,
இயக்குநர்

ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம், சென்னை - 6.

நாள் : 3.7.1996

வாழ்த்துச் செய்தி

மனித இனம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து பெற்ற பட்டறிவு, பகுத்தறிவால் பெற்ற முன்னேற்றத்தின் தொகுப்பே புத்தகங்கள்; அவைதாம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள்.

வளங்களில் எல்லாம் தலையாயது மனித வளம், மனித வள மேம்பாட்டிற்கு ஆதாரமாக அமைவது நல்ல நூல்கள். எனவேதான் நல்ல நூல்களுக்கு இடப்படும் மூலதனம் வேறு எந்தத் துறையிலும் இடப்படும் மூலதனத்தைவிட அதிக லாபத்தை - அதிக பயனை அளிப்பதாக அறிஞர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

வீடுகள் தோறும் நூலகம் வேண்டும்; வீதிகள் தோறும் நூலகம் வேண்டும்; நாடு வளம் பெற புத்தக சாலைகள் யாண்டும் வேண்டுமென்பது அறிஞர்கள் ஆய்வுரை.

''கற்றது கைம்மண் அளவு'' கற்க வேண்டியது உலகளவு; இன்றல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நிலை. தான் கற்க வேண்டியவை இன்னும் உலகளவு என்று தமிழே வடிவாய் உருவெடுத்த ஔவைப் பாட்டியின் ஏக்கமிது.

இன்று நாம் அறிந்துள்ள துறைகளை மனித இனம் 2000 ஆண்டுகட்கு முன்பு அறிந்திருக்கவில்லை. இலக்கியத்திலும், அறிவியலிலும், மருத்துவத்திலும், வான சாத்திரத்திலும் இப்படி எந்தத் துறையை எடுத்தாலும் இத்தனை நூல்களும் அன்றில்லை.

நாள் இதழ், பருவ இதழ்கள் இல்லை. ஆராய்ச்சி இல்லை. ஆராய்ச்சிக் கட்டுரைகள் இல்லை; கண்டுபிடிப்புகள் இல்லை. இருந்தும் அன்று அனைத்தும் அறிந்தவராகக் கருதப்பட்ட ஔவையார் வாக்குதான் 'கற்றது கைம்மண் அளவு' என்பது.

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டை நோக்கி நடைபோடுகின்ற நாம் இன்று அறிந்து கொள்ள வேண்டியவை ஏராளம். எண்ணற்ற துறைகள்; உலகில் ஒவ்வொரு மூலையிலும் ஆராய்ச்சி; அற்புத ஆராய்ச்சிப் படைப்புகள்; ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. 'அறிவு வெடிப்பு (Knowledge Explosion) இடைவிடாது நடந்து கொண்டேயிருக்கிறது. இன்று நாம் கற்றது கைம்மண் அளவு இருக்குமா ? கைம்மண் அளவு இருக்கும் என்றால் கல்லாதது உலகளவல்ல; அண்டத்தளவு - அறிவு அண்டத்தளவு விரிவடைந்திருப்பதால் !

கற்க வேண்டும்; ஓராண்டல்ல; ஈராண்டல்ல; ஒவ்வொரு ஆண்டும் கற்க வேண்டும். பத்தாண்டல்ல; இருபது ஆண்டல்ல; சாந்துணையும் கற்க வேண்டும். இன்றல்ல. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவரின் வாக்கிது.

''மூன்று வயதில் அல்ல; ஐந்து வயதில் அல்ல, பிறந்தது முதலே கற்க வேண்டும்'' என்பது இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய கூற்று: அரிஸ்டாட்டிலின் ஆணித்தரமான அறிவுரை. கருவிலேயே குழந்தைக்குக் கற்றல் நிகழ்கிறது என்பது இன்றைய மருத்துவர்களின் கணிப்பு. கருவறையிலிருந்து கல்லறை வரை கற்றல் நிகழ்ந்தாக வேண்டும்.

வாழும் நாளெல்லாம் கற்றல் நாளாக வேண்டும். கற்றல் கல்வி நிறுவனங்களில் மட்டும் என்றால் வாழும் நாளெல்லாம் கற்றல் நாளாகாது; கற்றல் நாளாக வேண்டும். என்ன வழி ?

ஒவ்வொரு நாளையும் ஒவ்வொருவருக்கும் கற்றல் நாளாக ஆக்கத்தான் தமிழகமெங்கும் பொது நூலகங்கள்.

பட்டி தொட்டிகளில் வாழும் ஏழை எளியோரும் குறிப்பாகப் பெண்களும் நூலகப் பயனைத் துய்க்க மேற்கொள்ளும் முயற்சிகள் ஏராளம்.

அந்த வகையில் தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறையின் மற்றுமொறு சீரிய முயற்சி ''நூலகச் செய்தி மடல்'' ஒன்றினை முத்திங்கள் இதழாக வெளியிட இருப்பதாகும்.

பொது நூலகத் துறையின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் தாங்கி வெளிவரவிருக்கும் இந்த இதழ், நூலகத் துறையைப் பற்றிய பல்வேறு அருஞ்செயல்களையும் மக்களுக்கு எடுத்துக் காட்டி, நூலகங்களை மாணவர்களும், ஆசிரியர்களும், ஏனைய பொதுமக்களும் மேன்மேலும் சீரிய முறையில் பயன்படுத்த ஊக்கமளிக்குமென எண்ணுகிறேன்.

நூலகத் துறையின் இம்முயற்சி வெற்றி பெற்று முத்திங்கள் இதழாக வெளிவரவிருக்கும் இந்தச் செய்திமடல் விரைவில் திங்கள் இதழாக ஏற்றம் பெற்று வெளிவர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

சி. பழனிவேலு



சு. பரமசிவன், எம்.எஸ்சி., எம்.எட்.,
மாநிலத் திட்ட இயக்குநர்
மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம்
கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.

நாள் : 18.6.96

வாழ்த்துச் செய்தி

அன்புக்குரிய திரு. கண்ணன்,

மரத்தின் கோட்டத்தை (கோணலை) நேர்செய்யப் பயன்படுவது 'எற்றநூல்' எனப்படும் நூலாகும். அதுபோல மாந்தரின் மனக்கோட்டத்தை நேர் செய்யப்பயன்படுவது சான்றோர் எழுதிய புத்தகங்களாகிய நூல்கள் என்பது நன்னூலாசிரியர் கருத்து. அறிஞர், ஆன்றோர், அறிவியலார் முதலிய சிறந்த பெரியோர்களின் கருத்துகளை அவர்களின் தலைமுறைக்குப் பின்வரும் வமிசா வழியினரும் அறியுமாறு காத்தளிக்கும் கருவூலங்கள் நூலகங்கள்.

இவை அறிவுச் சுரங்கங்கள், ஞானக் கருவூலங்கள், மாந்தர்க்கு உலகைக் காட்டும் பலகணிகள். அத்தகைய நூலகங்கள் சிறக்க பொது நூலகத்துறை சார்பாக 'நூலகச் செய்திமடல்' வெளியிடவிருப்பது குறித்து மெத்தவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இம்மடல் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறவும் அவர்களிடையே சிறந்த விழிப்புணர்வை உண்டாக்கவும், நூல்களை நாடிப் படிக்கும் ஆர்வத்தைப் பெருக்கவும் பயன்பட வாழ்த்துகிறேன்.

இம்மடல், பேரறிஞர் அண்ணாவின் 'வீட்டிற்கோர் புத்தகசாலை' என்ற இலக்கை எட்டப் பணிபுரியுமாறு அமைய எனது உளமார்ந்த நல்வாழ்த்துகள்.

சு. பரமசிவன்,



ரெ. நாராயணசாமி,

தொடக்கக்கல்வி இயக்குநர்

கல்லூரி சாலை,

சென்னை - 6.

அன்பார்ந்த திரு கண்ணன்,

நூலகங்கள் இன்றைய படித்த மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் ஒரு அம்சமாக விளங்குகிறது. எல்லா தரப்பட்ட வயதினரும் பயன்படுத்தும் நூலகங்கள் பொது நூலகத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. நூலகங்கள் படிப்போருக்கு நூல் அறிவு என்பதை விட அனுபவ பூர்வமான, வாழ்க்கைக்குப் பயன்படும் ஓர் அறிவினைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கலாம். அப்படிப்பட்ட முறையில் பொது நூலகத்துறையால் நடத்தப்படும் நூலகங்களில் பயன்பெறும் லட்சக்கணக்கான வாசகர்கள் பொது நூலகத்துறை வெளியிடும் நூலகச் செய்தி மடல் எனும் முத்திங்கள் இதழால் பயன்பெறுவர் என்பதில் பெருத்த மகிழ்ச்சி அடையலாம். இம் முத்திங்கள் இதழ் சிறப்பு பெற்றுத் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் அறிவு தாகத்தைப் பூர்த்தி செய்ய வாழ்த்துகிறேன்.

அன்புடன்

(ரெ. நாராயணசாமி)

சீ. இலட்சுமி, எம்.ஏ., பி.எட்.,
இயக்குநர்
பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி

கல்லூரிச் சாலை,
சென்னை - 600 006.

நாள் : 17.6.1996

வாழ்த்துச் செய்தி

'மாந்தர் மனக்கோட்டம் தீர்க்கும் - நூல்' என்று நூலின் பெருமையைக் குறிப்பிடுகிறது, தமிழ் இலக்கண நூலாகிய நன்னூல். எனவேதான் ஔவைப் பாட்டி 'நூல்பலகல்' என்று கூறினார் போலும்.

வான்புகழ் வள்ளுவப் பெருந்தகையும், ''கற்றனைத் தூறும் அறிவு'' என்று கூறி மேலும் மேலும் கற்க வேண்டும் என்கிறார்.

கற்கும் உணர்வைத் தூண்டும் கருவியாக நூல்கள் விளங்குகின்றன. அற்றம் காக்கும் கருவியாகிய அறிவை வளர்க்கும் நூல்களைப் பணம் கொடுத்துச் சொந்தமாக வாங்கிப் படிக்கும் வசதி இல்லாத எண்ணற்ற ஏழை எளியமக்களுக்கு உறுதுணையாக விளங்குகிறது, தமிழ்நாடு அரசின் பொது நூலகத்துறை.

சமுதாயத்தில் பல்வேறு பிரிவு மக்களுக்கும் பொருந்தக்கூடிய பல்வேறு வகை நூல்களையும் தம்மகத்தே கொண்டு, மாநில மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழிகாட்டி வருகின்றன, பொது நூலகத் துறையின் நூலகங்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த பொது நூலகத் துறையின் பெருமைக்குரிய பணிகளைத் தொகுத்து வெளியிடும் முகத்தான் **''நூலகச் செய்தி மடல்''** ஒன்றினை முத்திங்கள் இதழாக அத்துறை வெளியிடவிருப்பது அறிந்து மகிழ்கிறேன்.

இதழ் மலர்ந்து மணம்பரப்பிப் புகழ் சேர்த்திட உளமார வாழ்த்துகிறேன்.

சீ. இலட்சுமி,

நூலகச் செய்தி மடல்

மடல் - 1 ஜூலை - செப்டம்பர் 1998 அரும்பு - 1

நூலகச் செடிமலர்

கல்வித்துறையில் மறுமலர்ச்சி எப்படி நிகழ வேண்டுமோ அப்படியெல்லாம் நிகழும் வாய்ப்பு இப்போது கிட்டியுள்ளது. ஆம், அப்படிப்பட்ட மறுமலர்ச்சி பொது நூலகத்துறையிலும் தேவை தானே,

''படித்தல் வேண்டும் படித்தல் வேண்டும்
நூல் பல படித்தல் வேண்டும்.
பேண வேண்டும் பேண வேண்டும்
நம் பண்பாட்டைப் பேண வேண்டும்''

பண்பாட்டின் வாயில் நூலறிவு. அதுவே அறிவின் வளர்ச்சி; அறிவியல் வளர்ச்சி; ஆக்கத்தின் வளர்ச்சி; இந்திய திருநாட்டின் வளர்ச்சி. மூலிகை மூலம் பெட்ரோல் தயாரிக்கும் நிலை வரை வளர்ச்சி.

இப்படிப்பட்ட வளர்ச்சியை ஏற்படுத்த முனையும் பொது நூலகத்துறை, பொதுமக்கள் நூலகத்தின் பயன்கள் முழுவதையும் துய்க்கும் வகையில் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அறிஞர்கள், புலவர்கள், ஆராய்ச்சி யாளர்கள் ஆகியோர்களின் கருத்துக் கருவூலங்களை நூலகங்களுக்கு எடுத்துச் செல்லும் நற்செயலைச் செய்து வருகிறது.

இதற்கு மேலும் ஒருபடியாக 'நூலகச் செய்திமடல' என்னும் இந்த முத்திங்கள் இதழை நூலக வாசகர்களுக்குப் பயனளிக்கும் வகையில் ஜூலை - செப்டம்பர் காலாண்டு முதல் தொடங்குகிறது. கன்னி முயற்சி தான்; ஆற்ற வேண்டிய கடமைகள் ஏராளம்.

விழிப்புணர்ச்சி, மறுமலர்ச்சி, சமூகப் பார்வை, சமதர்ம நோக்கு ஆகியவைகளைக் கடமைகளாகக் கொண்டு செயல்பட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய - 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்ற சிறப்பான உன்னதமான கருத்தை உலகுக்கு வழங்கிய 'தென்னாட்டுக் காந்தி 'பேரறிஞர் அண்ணா அவர்களின்

'பிறந்த திங்களாகிய
செப்டம்பரில் மலர்கின்றது இம்மலர்.
எனவே, சிறப்பாக மணம் வீசும் என்று
நம்புகிறேன்.

இம்மலர் மலர்வதற்கு உற்ற வழித்துணையாக இருந்து எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வரும் - கல்வியே தமது மூச்சாக நினைக்கும் எங்களது கல்வி அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களுக்கும் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கி வரும் மதிப்பிற்குரிய கல்விச் செயலர் திருமிகு சா.பா. இளங்கோவன், இ.ஆ.ப. அவர்களுக்கும், கல்வித்துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். பொது நூலக வாசகர்களுக்கும், மற்றவர்களுக்கும் கல்கண்டாகத் தித்திக்கும் வகையில் இந்த இதழின் மூலம் புதுமைகள் காண விழைகின்ற எங்களது முயற்சிக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' இவ்விதழ் சிறப்பாக வருவதற்கு உதவிய வெளியீட்டுக் குழுவிற்கும், துறைசார் அலுவலர்களுக்கும் வடிவமைத்து அச்சிட்டு வழங்கும் 'பாரி அச்சக' த்தாருக்கும் நன்றியினைக் கூறும் முகத்தான் அனைவரின் தொடர் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கிறோம்.

அன்பன்

(இரா. கண்ணன்)
பொது நூலக இயக்குநர்

சென்னை - 2.
9.9.1996





வீட்டிற்கோர் புத்தகசாலை

நாட்டு மக்களிலே மிகப்பெரும்பாலானவர்களுக்குக் கூரிய வாள்-பலமான கேடயம்-அஞ்சாநெஞ்சு; ஆனால் அந்த வீரனின் விழி பழுது. இந்நிலை நாட்டுக்குச் சிறப்பு அளிக்காது. நல்லாட்சிக்கு வழிகிடைக்காது. நாட்டுநிலை உலகநிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டு நிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தக சாலை என்ற இலட்சியம் - நாட்டுக் கோர் நல்லநிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்திற்கு அடிப்படை.

எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில் - இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா - அவர்களின் வீடுகளாவது நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துகள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால் இல்லையென்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆக வேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டு நிலை கண்டு உலகம் மதிக்க வேண்டுமானால், இந்தச் சூழ்நிலைமாறியாகவேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி சற்று முயன்று பாடுபட்டால் நமது நாட்டிலே நிச்சயமாக மனவளத்தைப் பெருக்கிட முடியும்.

வீட்டில் அலங்காரத்தையும், விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகசாலை சிறிய அளவிலாவது அமைக்கப்பட நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும்; அக்கறை காட்ட வேண்டும்; அறிவு ஆயுதமாகிவிட்ட நாள்களில் வாழும் நாம், இனியும் இந்தக்காரியத்தைக் கவனியாதிருப்பது நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

புத்தகசாலை அமைக்கும்போது, ஏற்கனவே நமது மக்களின் மனத்திலே ஊறிப்போய் உள்ள அர்த்தமற்ற, அவசியமற்ற, கேடு செய்யக் கூடிய எண்ணங்களை நிலைநிறுத்தக் கூடிய ஏடுகளைச் சேர்க்கக்கூடாது; சேர்த்தால் மனவளம் ஏற்படாது; மனம் சதுப்பு நிலமாகும் பழமைப் புழுக்கள் நெளியும் இடமாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும் போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு அந்தஇடம் தரப்பட வேண்டும். உணவு, உடை அடிப்படைத் தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்பட வேண்டும்.

–அறிஞர் அண்ணா

தமிழ்நாட்டில் பொது நூலகப் பணியின் வளர்ச்சி

இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்

தோற்றம் :

1947 - ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 - ஆம் நாள் நமது நாடு விடுதலை அடைந்தது. நாம் பெற்ற நாட்டுரிமையோடு நமக்கு உரிமைகளும், கடமைகளும் வந்தன. அந்த உரிமையின் அடிப்படையில் மக்களுக்காக மக்களால் நடத்தும் அரசு உருவாகியது.

நாட்டுமக்கள் அனைவரும் கல்வி அறிவு பெறவேண்டும் என்ற கருத்தோடு மத்திய அரசும், மாநில அரசும் பல முயற்சிகள் எடுத்தன. அந்த முயற்சிகளின் பயனாக வயது வந்த குழந்தைகள் அனைவரும் கட்டாயக் கல்வி பெறும் திட்டம், பள்ளியில் படிக்க முடியாத வர்களுக்காக வயதுவந்தோர் கல்வி, சமூகக்கல்வி, தொழிலாளர்கல்வி, விவசாயக்கல்வி, பள்ளிசாராக்கல்வி என்ற பல திட்டங்களை மக்களுக்கு நமது அரசு அளித்து வருகிறது.

நாட்டுமக்களுடைய கல்வியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும் நிலையிலும், தொழிலாளர்கள், விவசாயிகள், மகளிர் மற்றும் குழந்தைகள் கல்வி வளர்ச்சிக்காகவும், மக்கள் வாழ்நாள் முழுவதும் தொடர்கல்வி பெறவும் மாநிலம் முழுவதும் நூலகப் பணிகள் சிறப்பாக நடக்கவும் தமிழ்நாடு அரசு 1948 - ஆம் ஆண்டில் தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தை இயற்றியது. பல கல்வி நிறுவனங்களுக்குத் தொடர்பாளராயிருந்தவரான 'திரு. அவினாசிலிங்கனார்' அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த பொழுது இச்சட்டம் இயற்றப்பட்டது.

நூலகச் சட்டம் :

1948 - ஆம் ஆண்டு இயற்றப் பட்ட அந்தத் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1950 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தமிழ்நாட்டில் நடைமுறைக்கு வந்தது. சுதந்திர இந்தியாவிலேயே இந்தச் சட்டம் ஒரு முன்னோடிச் சட்டமாகச் செயல்படத் துவங்கியது. கல்வித்துறையை நிர்வகித்து வந்த பொதுக் கல்வி இயக்குநர் நூலகத் துறைக்கும் இயக்குநராகப் பொறுப்பேற்று நூலகப் பணியைச் சிறப்பாகச் செயல்படுத்தி வந்தார்.

அரசின் நேரடிப் பார்வையில் இருந்த சென்னை 'கன்னிமாரா பொது நூலகம்' மாநில மைய நூலகமாகத் திகழ்ந்தது. ஒவ்வாரு வருவாய் மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட நூலக ஆணைக்குழு ஏற்படுத்தப் பட்டு, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு நூலகம் ஏற்படுத்தப்பட்டு, அதனைத் தொடர்ந்து பேரூர்களிலும், சிற்றூர்களிலும், கிராமங்களிலும் பெரும் அளவில் கிளை நூலகங்கள் நிறுவப்பட்டன.

தமிழ்நாட்டோடு இணைந்த கன்னியாகுமரி மாவட்டத்திற்குத் தமிழ்நாடு நூலகச் சட்டம் நீடிக்கப்பட்டு நாகர்கோவிலில் உள்ள கவிமணி நூலகம் 17.8.1977 முதல் அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தற்போது பணியாற்றும் பணி முனைகள் விவரம் :

மாநில மைய நூலகம்	:	1
மாவட்ட மைய நூலகங்கள்	:	19
கிளை நூலகங்கள்	:	1545
பகுதிநேர நூலகங்கள்	:	1069
நடமாடும் நூலகங்கள்	:	9

நிதி நிலைமை :

நூலகப் பணியை வளர்க்கும் பொருட்டுக் தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 - ன்படி ரூபாய்க்கு மூன்று பைசா வீதம் நூலகவரி வசூலிக்க வழி செய்தது. இந்த நூலக வரியை உள்ளாட்சி நிறுவனங்கள், மாநகராட்சிகள் வசூலிக்கும் சொத்துவரி அல்லது வீட்டு வரியின் மேல், 'மேல்வரியாக' (Surcharge) வசூலித்து மாவட்ட நூலக ஆணைக் குழுக்களுக்குச் செலுத்தி வருகின்றன.

இணைமானியம் :

மக்கள் தரும் நூலக வரிக்குச் சமமாகச் சட்ட பூர்வமாக இணை



மானியத்தை அரசு அளித்து வந்தது. நூலகப் பணியைக் கிராமப்புற மக்களுக்கும் விரிவுபடுத்திட மாநில ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் அரசு நிர்வகிப்பு மானியம் அளித்து வருகிறது.

மேற்காணும் நிதி வரவினங்களைக் கொண்டு வளர்ந்துவரும் நூலகப்பணி வளர்ச்சிகளைச் செவ்வனே செய்துவர இயலவில்லை. இதன்படி ரூபாய்க்கு மூன்று பைசாவாக வசூலித்து வந்த நூலகவரியை 1972 - ஏப்ரல் முதல் ரூபாய்க்கு ஐந்து பைசா வீதம் உயர்த்தியது. அரசு வளர்ச்சித் திட்டங்களும், தகவல் முன்னேற்றங்களும் கணிப்பொறி வளர்ச்சி பெருகியுள்ள இக்கால கட்டத்தில் இந்தக் கூடுதல் நூலக வரிவசூல் மூலம் கிடைக்கும் தொகை நூலக வளர்ச்சிப் பணிகளுக்குப் போதாமையால் அரசு 1.4.92 முதல் மேலும் நூலகவரியை ரூபாய்க்குப் பத்து பைசாவாக உயர்த்தியது. இது நூலகப்பணி முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கிறது.

தனி நூலகத்துறை :

நூலகப் பணி நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரத் தொடங்கியது. பொதுக் கல்வித்துறையைக் கவனித்து வந்த இயக்குநர் நூலக வளர்ச்சிக்கு வித்திட்டவர் ஆவார். அவரது



தலைமையின் கீழ் பணிபுரிந்து வந்த மாவட்டக் கல்வி அலுவலர்கள் நூலகப் பணி பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு செயல்பட்டனர்.

மக்கள்தொகை வளர வளர, கல்வி வளர்ச்சி பெருகப் பெருக மக்களிடையே படிக்கும் ப்ழக்கமும் வளர்ந்தது. புதிய தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணமும், விழிப்புணர்வும் மக்களிடத்தில் ஏற்பட்டதால் நூலகப் பணிகளையும் மேம்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்விதமான பணிகளைக் கவனிக்க ஒரு தனித்துறையைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தியது. இந்தத் தனித்துறை 1972 - ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 1 - ஆம் தேதி முதல் **தமிழ்நாடு பொது நூலகத்துறை** - என்னும் பெயரில் செயல்படத் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து மாவட்ட அளவில் நூலகப் பணியைக் கவனிக்க 1977 ஜனவரி 3 - ஆம் நாள் முதல் மாவட்ட நூலக அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர்.

நூலகப்பணி மேலும் வளர நூலகப் பணியாளர்களை உற்சாகப் படுத்த வேண்டும் என்ற குறிக்கோளுடன் தமிழக அரசு 1.4.1982 முதல் நூலகப் பணியாளர்கள் அனைவரையும் அரசு ஊழியர்களாக அறிவித்தது. இதன் பயனாக 3,200 பணியாளர்கள் அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டனர்.

நலிந்த நூலக ஆணைக்குழுக்களுக்குச் சிறப்பு மானியம் :

தற்பொழுது நூலக நிதியிலிருந்து நூல்கள் வாங்கப்பட்டு வருகின்றன. அரசு 1984 - 85 முதல் ரூ.11.00 இலட்சம் நிதிவழங்கி நலிந்த நூலக ஆணைக் குழுக்கள் அனைத்தின் வளர்ச்சிக்கும் உதவி வருகிறது.

கட்டடங்கள் :

இன்று பல மாவட்ட மைய நூலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவருகின்றன. எல்லாக் கிளை நூலகங்களும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டும் என்னும் குறிக்கோளுடன் கட்டடம் கட்டுவதற்கு இலவசமாக நிலம் கிடைக்க பெற்ற எல்லா இடங்களிலும் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2000 ஆம் ஆண்டு முடிகின்ற பொழுது அனைத்து மாவட்டங்களிலும் உள்ள நூலகங்கள் அனைத்தையும் சொந்தக் கட்டடத்தில் இயங்கச் செய்ய வேண்டும் என்னும் உயரிய குறிக்கோளோடு மிக விரைவாகப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

நூலகவியல் பயிற்சி நிலையம் :

நூலக ஆணைக்குழுக்களில் பணிபுரியும் பயிற்சி பெறா மூன்றாம் நிலை நூலகர்களுக்கு நூலகவியலில் (சான்றிதழ்) பயிற்சி தரும் பொருட்டுப் பயிற்சி வகுப்புகள் சென்னையில் பொது நூலக இயக்கத்தில் நடைபெற்று வருகின்றன. இதுவரை 45 பயிற்சி வகுப்புகள் நடைபெற்றுள்ளன. தற்பொழுது இப்பயிற்சி வகுப்புகள் துணைப் பொது நூலக இயக்குநர், இரண்டு உதவி விரிவுரையாளர்கள் ஆகியோரைக் கொண்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இராஜாராம்

நூலை நேசி !

நூலை நேசிப்பவனுக்கு நண்பர்கள் தேவையில்லை. அறிவுரை கூறுவோர் வேண்டாம், மகிழ்ச்சியூட்ட தோழர்கள் அவசியமில்லை, சுகம்தர சுற்றமும் வேண்டாம்.

\- பரோ.

உள்ளத்தைத் தொட. . .

ஒரு நூல் அதை எழுதியவனின் உள்ளத்திலிருந்து பிறந்திருந்தால் நிச்சயம் அது படிப்பவன் உள்ளத்தையும் தொடும்.

கார்லைல்.



மோகன்ராய் அறக்கட்டளை நிதியுதவியின் மூலம் புத்தறிவுப் பயிற்சி வகுப்புகள் மாவட்டந்தோறும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தனியார் நூலகங்களுக்கு அரசுமானியம் :

தமிழ்நாட்டில் உள்ள தனியார் நூலகங்களுக்கும் அரசு மானியம் வழங்கி வருகின்றது. இம்முறையில் 'தஞ்சாவூர் சரபோஜி மன்னர் சரஸ்வதி மகால் நூலகம்', சென்னை மறைமலையடிகள் நூலகம், டாக்டர் உ.வே. சாமிநாதஅய்யர் நூலகம் போன்ற பல தனியார் நூலகங்களுக்கும் அரசு மானியம் வழங்கி வருகின்றது.

ஊர்ப்புற நூலகங்கள் :

தமிழக அரசு தீட்டிவரும் பல நல்ல முன்னேற்றத் திட்டங்களின் பயன்களை அறிந்து, அவற்றை எளிதில் அடையும் வகையில், பொது மக்களின் படிக்கும் ஆர்வத்தை அதிகமாக்கவும், நிறைவு செய்யவும் வேண்டும் என்ற குறிக்கோளோடு 625 ஊர்ப்புற நூலகங்களைத் திறப்பதற்கான அரசு ஆணை அண்மையில் பிறப்பிக்கப் பட்டுள்ளது. பொது மக்களின் அன்பான வேண்டுகோளின் அடிப் படையிலும், பலதரப்பட்ட மக்களுக்கும் பயன் அளிக்கும் முறையிலும் ஊர்ப்புற நூலகங்கள் செயல்பட உள்ளன. இந்த நூலகங்களின் வளர்ச்சியில் பொது மக்களின் ஈடுபாடும், ஆர்வமும் அதிகம் இருக்க வேண்டும். இக்குறிக்கோளின்படி ஊர்ப்புறக் கிளை நூலகங்கள் ஒவ்வொன்றும் உடனடியாகச் செயல்படுவதற்கு வாடகை இல்லாத கட்டடம் ஒன்றும், 5 சென்ட் இலவச காலிமனையும் தேவைப்படுகின்றன. மேலும் குறைந்தது 200 நூலக உறுப்பினர்கள் சேர்க்கப்படவும், கிளை நூலகம் நன்கு செயல்படத் தேவையான மேஜை, நாற்காலி போன்ற தளவாடப் பொருள்களை அன்பளிப்பாகப் பெறவும் முயற்சிகள் செய்யப்பட வேண்டும். பொது நூலகத்துறை 2000 நூல்களையும், பொது மக்களின் விருப்பத்திற்கேற்ப நாளிதழ் களையும் வாங்கி வழங்கும். இந்நூலங்களை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

மகளிர்களுக்கெனத் தனிநூலகம் :

மகளிர்களுக்கெனத்தனி நூலகம் தொடங்கப்படவிருக்கின்றது. மகளிர் அனைவரும் தங்களுக்கெனவே தொடங்கப்பட இருக்கும் இந்த நூலகத்தை அதிகநேரம் பயன்படுத்திட வேண்டும் என்ற குறிக்கோளுடன் முயற்சிகள் செய்யப் படுகின்றன.

'நூலகத்துறையின் பலவிதமான பணிகள்'

இயங்கும் நூலகப்பணி :

கிளை நூலகங்கள் திறப்பதற்கு வாய்ப்பில்லாத இடங்களுக்கெல்லாம் இயங்கும் ஊர்தி மூலம் எடுத்துச் சென்று நூல்களை இரவலாகக் கொடுத்துப் படிக்கும் உயர்வான எண்ணத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தி வருகிறோம். இத்திட்டம் மிகமிக பயன் அளிப்பதாக உள்ளது. இதனால் வாசகர்கள் மிகுந்த அளவில் பயன் பெற்று வருகின்றனர்.

மருத்துவமனையில் நூல் வழங்கும் திட்டம் :

மருத்துவமனையிலிருக்கும் நோயாளிகள் தங்களது நோயின் கொடுமையை மறந்திருக்கவும், தங்களின் சிந்தனைகளை நூல்களிலே செலுத்திப் பயன் பெறவும் அவர்களின் படுக்கைக்கே சென்று நூல்களை வழங்கிடும் திட்டம் 14.3.1960 - இல் சென்னை பொது மருத்துவமனையில் தொடங்கி வைக்கப் பட்டது. இத்திட்டத்தின்படி சென்னையில் மட்டும் அல்லாமல் தற்பொழுது அனைத்து மாவட்டங்களின் மருத்துவமனைகளிலும் கிளை நூலகங்கள் தொடங்கப்பட்டுப் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

சிறைச்சாலையிலும் நூல் வழங்கும் திட்டம் :

கைதிகள் சிந்திக்கவும், தெளிவு பெறவும், சீர்திருந்தவும், கவலையை மறக்கச் செய்யவும் கூடிய சிறந்த அறிவு நூல்களை அவர்களுக்குச் சிறைச் சாலையில் பணிபுரியும் காவலர்கள் மூலம் இயங்கும் நூலகப் பிரிவினால் அவ்வப் போது நூல்கள் வழங்கும் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டம் சென்னை, சேலம், திருநெல்வேலி, கடலூர் போன்ற இடங்களில் நன்கு நடைபெற்று வருகிறது.

நூலும் விவேகமும்

ஒரு நல்ல புத்தகத்தை நாசமாக்குவதை விட ஒரு மனிதனை நாசமாக்குவதே மேல். மனிதனை அழிப்பதால் விவேகமுள்ள பிராணி ஒன்று அழிகிறது. ஆனால் புத்தகத்தை அழிப்பதால் விவேகமே அழிகிறது.

\- மில்டன்

காவலர் குடியிருப்பு இடங்களில் நூலகங்கள் :

காவலர்கள் தங்களுக்குக் கிடைக்கும் நேரத்தை அறிவு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள உதவும் வகையில் அவர்கள் குடியிருக்கும் இல்லங்களுக்கு அருகிலேயே நூலகங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் முதலில் சென்னையில் தொடங்கப் பட்டுப் பின்னர் மாவட்டங்களில் பலரும் பயன் பெறும் வண்ணம் நீட்டிக்கப்பட்டு வருகிறது.

பார்வையற்றோர் பயன்பெற நூலகம் :

பார்வையற்றோர் பயன்பெற அவர்களுக்கெனத் தனிப்பிரிவு ஒன்று சென்னை மாவட்ட மத்திய நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒலி நாடாக்களின் மூலம் அறிவியல் கருத்து களையும் தகவல்களையும் கேட்டு அறிந்து கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்புதவி நூல் பிரிவு :

மாவட்ட மத்திய நூலகங்களின் தனிச் சிறப்பாகக் குறிப்பு நூல் பிரிவுப் பகுதி ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு மிக விலை உயர்ந்த நூல்களும், கிடைப்பதற்கு அரிதான நூல்களும் வைக்கப்பட்டுள்ளன. எல்லாப் பிரிவினரும் அதாவது மருத்துவத் துறையினர், பொறியியல் துறையினர், விவசாயத் துறையினர் போன்ற அனைத்துத் துறையினரும் இந்தப் பிரிவில் அமர்ந்து தங்களுக்குத் தேவையான கருத்துகளைப் பெறலாம். ஆராய்ச்சிக்கான நூல்களைப் பெற்றுக் குறிப்புகள் எடுக்க மிகச்சிறந்த அமைதியான இடமாக இந்த இடம் விளங்கி வருகின்றது.

மாணவர் பகுதி :

மாவட்ட மத்திய நூலககங்களில் மாணவ, மாணவியர்களுக்காக இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. மேல்நிலைப் பள்ளி, கல்லூரி பட்டப் படிப்பு, முதுநிலை பட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள் அனைவரும் படிப்பதற்கும், குறிப்புகள் எடுப்பதற்கும் பாட நூல்கள் வைக்கப்பட்டு இப்பகுதி சிறப்பாகச் செயலாற்றி வருகிறது.



நிறுவன உறுப்பினர் திட்டம் :

ஒவ்வொரு மாவட்ட மத்திய நூலகத்திலும் ரூபாய் நூறு மட்டும் செலுத்தி நிறுவன உறுப்பினர்களாகச் சேர்ந்து, நூறு அல்லது ஐம்பது நூல்களைப் பெற்றுச் செல்லும் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இதில் அனைத்துப் பள்ளிகளும், மேல்நிலைப் பள்ளிகளும் நிறுவன உறுப்பினர்களாகி நூல்களை எடுத்துச் சென்று தங்கள் மாணவ மாணவிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

குடிமைப் பணித் தேர்வு கல்வி மையங்கள் :

குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் வெற்றிபெற வேண்டும். அரசுத் தேர்வாணையம் மூலமும் பலர் தேர்வுபெற வேண்டும். இவற்றிற்குத் தேவைப் படும் அனைத்து நூல்களையும், பருவ இதழ்களையும் வாங்கி அவைகளைப் பொருள் வாரியாக அடுக்கிவைத்துத் தேவையான நூல்களை விரைவில் கண்டுபிடித்து எடுத்துக் கொடுப்பதற்கு ஏற்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திங்கள் தோறும் குறிப்பிட்ட துறையில் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு சொற் பொழிவுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெற வழிகள் செய்யப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக, அனைவரும் எவ்வித வேறுபாடுகளும் இன்றி நூலகத்தின் இப்பகுதியைப் பயன்படுத்தி அறிவுச் செல்வங்களைப் பெறலாம். இப்பகுதி சிறப்பாக நடை பெற்று வருகிறது. மாணவர்கள் இப்பகுதியைப் பயன்படுத்துவது விரிவாகிக் கொண்டே இருக்கின்றது.

இப்பிரிவுகளில் தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தொகுதி 4 ஆம் பிரிவு தேர்வுகள் முதல், மத்திய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் குடிமைப் பணி தேர்வுகள் உட்பட அனைத்துத் தேர்வுகளிலும் பங்குபெறுவோர் பயன்பெறத் தக்க வகையில் நூல்கள் அனைத்தும் உள்ளன. அத்தகைய பிரிவு தமிழகத்தில் பல மாவட்டங்களில் செயல்படுகின்றன.

சென்னை நூலக தொடர்பு இணைப்பு (மாலிப்நெட்)

சென்னை மாவட்ட மைய நூலகம் சென்னை நூலக தொடர்பு இணைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் கிடைக்கப் பெறாத பருவ இதழ்கள், வேறு எந்த நூலகங்களில் கிடைக்கும் என்ற விவரத்தை மாலிப்நெட் (Madras Library Network) என்ற கணிப்பெறி அமைப்பு மூலம் நூலகத்தில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.

இவ்வசதி தேவநேயப்பாவாணர் மாவட்ட மைய நூலகத்தில் செய்து

தரப்பட்டுள்ளது. இவ்விணைப்பு மூலம் சென்னையில் உள்ள 42 பல வகைப்பட்ட நூலகங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தகவல் பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. அவை 14 Basic Sciences Libraries, 13 Engineering Colege Libraries, 11 Medica' College Libraries and 4 Biological Science: Libraries ஆகும். ஆராய்ச்சி மாணவர் களுக்கும், பொறியாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும், விஞ்ஞானி களுக்கும், நூலக வல்லுனர்களுக்கும் தகவல் அறிய விருப்பம் உள்ளவர் களுக்கும் இக் கணிப்பொறி தகவல் அமைப்பு பெரிதும் பயன்படும். இதன்மூலம் 2610 பருவ இதழ்கள் பற்றிய விவரங்களை அறிந்துக் கொள்ளலாம்.

புரவலர் திட்டம் :

புரவலர் திட்டம் ஒரு புதுமையான திட்டமாகத் தமிழகத்தில் கருதப்பட்டாலும் மேல்நாடுகளில் இம்முறை நல்ல முறையில் கடைப்பிடிக்கப்பட்டு நூலக வளர்ச்சிக்குப் பெரும் துணையாக இருந்து வருகிறது. ரூபாய் ஆயிரம் செலுத்தி ஒரு கிளை நூலகத்திலோ, மையநூலகத்திலோ புரவலராக ஒருவர் சேர்ந்து விடுவாரேயானால் அவருக்குத் தம்மையும் அறியாமல் அந்த நூலகத்தின் மீது மிகுந்த பற்று ஏற்படும்; அந்த நூலக வளர்ச்சிக்கும், அந்த நூலகத்தின் மூலம் வாசகர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கவும் அவர் முயல்வார். அவருடைய இத்தகைய முயற்சிகள் மூலம் அந்தவட்டார வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் மிகப்பெரிய நன்மைகள் ஏற்படும். அந்த முறையில் தமிழகத்தில் பொதுநூலகத் துறையில் தொடங்கப்பட்ட இத்திட்டம் இன்று மிகுந்த வளர்ச்சி பெற்று இன்றுவரை 5988 புரவலர்கள் பல மாவட்டங்களில் உள்ள நூலகங்களில் சேர்ந்துள்ளனர். புரவலர் திட்டம் இன்று சிறந்த திட்டமாகத் திகழ்ந்து வெற்றி பெற்று வருகின்றது.

இப்படித் தமிழகத்தில் பொது நூலகத்துறை, தமிழக மக்களிடையே நூல்கள் படிக்கும் ஆர்வத்தைப் பெருக்கிடப் பலவழிகளில் பாடுபட்டு வருகிறது என்பதைக் கூறிக்கொள்வதில் நிறைந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இந்தியாவைப் பற்றிப் பலகோணங்களில் ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் இந்திய அலுவலக நூலகத்திலிருந்து (India Office Library) இந்தியாவைக்குறித்து சம்பந்தப்பட்ட அனைத்துக் குறிப்புகளையும் Micro Filim வடிவில் வாங்கி வைத்திருப்பது பெருமைப்படக் கூடியதாகும்.

நூலகமும் மனிதவள மேம்பாடும்

டாக்டர். சி. பழனிவேலு,
இயக்குநர்,
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி இயக்ககம், சென்னை - 6.

''கற்றது கைம்மண் அளவு'' கற்க வேண்டியது உலகளவு; இது இன்றைய நிலை அல்ல; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நிலை. தான் கற்க வேண்டியவை இன்னும் உலகளவு என்று தமிழே வடிவாய் உருவெடுத்த ஔவைப் பாட்டியின் ஏக்கமிது.

இன்று நாம் அறிந்துள்ள துறை களை மனித இனம் 2000 ஆண்டுகட்கு முன்பு வரை அறிந்திருக்கவில்லை. இலக்கியத்திலும், அறிவியலிலும், மருத்துவத்திலும், வான சாத்திரத்திலும் இப்படி எந்தத் துறையை எடுத்தாலும் இத்தனை நூல்களும் அன்றில்லை;

நாள் இதழ், பருவ இதழ்கள் இல்லை. ஆராய்ச்சி இல்லை, ஆராய்ச்சிக் கட்டுரைகள் இல்லை; கண்டுபிடிப்புகள் இல்லை. இருந்தும் அன்று அனைத்தும் அறிந்தவராகக் கருதப்பட்ட ஔவையார் - க்குத் தாம் கற்றது கைம்மண் அளவு : என்பது.

இருபத்தொன்றாம் நூற்றாண்டை நோக்கி நடைபோடுகின்ற நாம் இன்று அறிந்து கொள்ள வேண்டியவை ஏராளம். எண்ணற்ற துறைகள்; உலகில் ஒவ்வொரு மூலையிலும் ஆராய்ச்சி; அற புத ஆராய்ச்சிப் படைப்புகள், ஒவ்வொரு துறையும், ஒவ்வொரு நாளும் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. 'அறிவு வெடிப்பு' (Knowledge Explosion) இடைவிடாது நடந்து கொண்டேயிருக்கிறது. இன்று நாம் கற்றது கைம்மண் அளவு இருக்குமா ? கைம்மண் அளவு இருக்கும் என்றால் கல்லாதது உலகளவல்ல; அண்டத்தளவு - அறிவு அண்டத்தளவு விரிவடைந் திருப்பதால்.

கற்க வேண்டும்; ஓராண்டல்ல; ஈராண்டல்ல; ஒவ்வொரு ஆண்டும் கற்க வேண்டும். பத்தாண்டல்ல; இருபது ஆண்டல்ல; சாந்துணையும் கற்க வேண்டும். இன்றல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவரின் வாக்கிது.

''மூன்று வயதில் அல்ல; ஐந்து வயதில் அல்ல, பிறந்தது முதலே கற்க வேண்டும்'' என்பது இரண்டாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முந்தைய கூற்று; அரிஸ்டாடிலின் ஆணித்தரமான அறிவுரை. கருவிலேயே குழந்தைக்குக் கற்றல் நிகழ்கிறது என்பது இன்றைய மருத்துவர்களின் கணிப்பு. கருவறை யிலிருந்து கல்லறை வரை கற்றல் நிகழ்ந்தாக வேண்டும்.

கல்லாமை இல்லாமையாக வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு எடுக்கும் நடவடிக்கைகள் ஏராளம்.

ஊர்கள்தோறும் பள்ளி; ஒவ்வொரு குழந்தைக்கும் அதிகபட்சமாக ஒரு கிலோ மீட்டர் தொலைவிலே தொடக்கப் பள்ளி. இலவசமாகக் கல்வி. தன்னை வளப்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும் இலவசக் கல்விக்குக் குழந்தைகளை ஆட்படுத்த சலுகைகளும் ஏராளம்.

இலவசமாகச் சத்துணவு, சீருடை, புத்தகம், காலணி, பல்பொடி, ஊக்கத் தொகை, பயணம் என்று பல சலுகைகள்.

குடும்பத்தின் வறுமையோ, சாதி சமய கோட்பாடோ, அறியாமையோ பிற எந்தச் சக்தியோ குழந்தையின் கல்விப் பயணத்தில் தடைக்கல்லாக அமைந்து விடக் கூடாது என்பதற்காக அரசாங்கம் அனைத்துச் சலுகைகளையும் வழங்குகிறது.

இருந்தும் வயதுவந்த குழந்தைகளில் பலர் பள்ளியில் சேர்க்கப்படுவதே இல்லை. நிறுவனக் கல்வி அவர்களுக்கு நிகழாமலே போய்விடுகிறது.

பள்ளியில் சேர்ந்தவர்களிலும் பெரும்பாலோர் பல்வேறு நிலைகளில் நின்று போகிறார்கள். பள்ளி இறுதி வகுப்பை முடிப்பவர் முதல் வகுப்பில் சேர்ந்தவர்களில் மூன்றில் ஒரு பங்கு. மேல்நிலை வகுப்புகளில் சேர்பவர்கள் பள்ளி இறுதித் தேர்வை எழுதுபவர்களில் சற்றேறக்குறைய மூன்றில் ஒரு பங்கு. மேல்நிலைத் தேர்வுகளை எழுதுகிறவர்களில் மூன்றில் ஒரு பங்கே மேற்படிப்பைத் தொடர்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் கல்வி நிறுவனங்களில் பிள்ளைகள் பெறும் கல்வி ஏதோ ஒரு வயதில் ஏதோ ஓர் அளவோடு முடிவடைந்து விடுகிறது. முறையான கல்விக்கு முற்றுப்புள்ளி உண்டு. கரைகாண முடியாத கல்விக்கு முடிவு உண்டா ? இல்லை.

வாழும் நாளெல்லாம் கற்றல் நாளாக வேண்டும். கற்றல், கல்வி நிறுவனங்களில் மட்டும் என்றால் வாழும் நாளெல்லாம் கற்றல் நாளாகாது; கற்றல் நாளாக வேண்டும் என்ன வழி ?

ஒவ்வொரு நாளையும் ஒவ்வொருவருக்கும் கற்றல் நாளாக ஆக்கத்தான் தமிழகமெங்கும் பொது நூலகங்கள்.

'கண்டதைப் படித்தால் பண்டிதனாகலாம்' என்பது பழமொழி. கிராமங்களில் பார்க்கிறேன். பல கிராமங்களில் எழுபது, எண்பது வயதானவர்களில் பட்டதாரிகள் ஒருவரும் இல்லை. ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் எழுபது, எண்பது வயதைத் தாண்டியவர்களில் கற்றவர்கள் இருக்கிறார்கள் அறிவுடையவர்கள் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து நீங்கள் எந்த வகுப்பு வரை படித்தீர்கள்? என்று கேட்டால் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு படித்தேன்; நான்காம் வகுப்பு படித்தேன் என்கிறார்கள். இருந்தும் எப்படி இவ்வளவு அறிவுடையவர்களாக விளங்குகிறார்கள் என்று கேட்டால், ''கிடைத்ததைப் படிக்கிறார்; முடிந்த பொழுதெல்லாம் வாங்கிப் படிக்கிறார்; ஊரில் உள்ள நூலகத்தில் படிக்கிறார்'' என்கிறார்கள் ஊரார்.

கல்வி தொடர் நிகழ்வாகியிருக்கிறது அவர்களுக்கு !

வலுவிற்கு உதாரணம் இரும்பைச் சொல்வோம். அதுவே கூட பராமரிப்பில்லாமல் போனால் காலப் போக்கில் பொலிவிழந்து, துரு ஏறி, வலுவிழந்து, மக்கி மண்ணோடு மண்ணாகி விடுவதைப் பார்க்கிறோம்.

காலத்திற்கு அத்தனை வலிவு.

படித்து முடித்து விட்டோம் என்று நினைத்துப் படிப்பதை நிறுத்தி விட்டால், காலம் மூளையைப் பொலிவிழக்கச் செய்து வலுவிழக்கச் செய்து பயனற்றதாக்கி விடும்.

நேர்முகத் தேர்விற்கு வருகின்ற பலரைப் பார்க்கிறோம் படித்து முடித்து ஏழு, எட்டு ஆண்டுகள் கழித்து நேர்முகத் தேர்விற்கு வருகின்றபோது இடைப்பட்ட காலத்தில் வேறு எந்த நூல்களையும் தொடர்ந்து படிக்காதவராக இருப்பா ரானால் தன்னம்பிக்கை இழந்து, மொழித் திறனை இழந்து, கருத்துகளைக் கோவைப்படுத்திச் சொல்கின்ற திறமையை இழந்து, படித்த தகவல்களையும் பாட அறிவையும் மறந்து, பரிதவிப்பதைப் பார்க்கிறோம்.

மாறாக ஏழு, எட்டு ஆண்டுகள் கழித்து நேர்முகத் தேர்விற்கு வந்தாலும் இடைப்பட்ட காலத்தில் நூல்களைத் தேர்ந்து படித்தவராக இருந்தால் தன்னம்பிக்கை மிக்கவராக, தனது கருத்தைப் பிறர் மனதில் பதியும்படி எடுத்துச் சொல்பவராக, தகவல் உடையவராக, அறிவுத் திறன் பெற்ற வராக இருப்பதைப் பார்க்கிறோம்.

இருவரும் கல்வி நிறுவனத்தில் பெற்ற கல்வி ஒன்றுதான், பட்டம் ஒன்றுதான்.

இருவரும் படித்து முடித்து ஏழு, எட்டு ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போது அவர்கள் திறமையில் அளவற்ற வேறுபாடு.

காரணம் - ஒருவருக்குத் தொடர் கல்வி இல்லை; மற்றொருவருக்குத் தொடர் கல்வி நிகழ்ந்திருக்கிறது.

கல்வி நிறுவனங்களிலிருந்து நின்றுபோன பிறகும் கற்றல் தொடர்ந்து நிகழ வேண்டும்.

தொடர் கல்விக்கு நூல்கள் வேண்டும், ஏடுகளும் இதழ்களும் வேண்டும். ஒவ்வொருவரும் பொருள் செலவு செய்து வாங்கிப் படிக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் நடைபெறாது. ஏனென்றால் ஏடுகளின் விலை ஏராளம். புத்தகங்களின் விலையும் அதிகம். அத்தனைப் பொருள் செலவில் வாங்கிப் படிக்க பலருக்குப் பொருளாதார வசதி இருக்காது. பொருள் வசதி இருந்தாலும் பலருக்குப் புத்தகத்திற்கும் இதழ்களுக்கும் செலவிட மனமிருக்காது. பணமும் மனமும் இருந்தாலும், பலருக்கு அவர்கள் வாழும் பகுதியில் வாங்கிப் படிக்கக் கடைகள் இருக்காது. இப்படித் தடைகள் ஏராளம்.

இடர்ப்பாடுகளைப் பட்டியல் இட்டுக் கொண்டு தொடர் கல்வி நிகழாமைக்கு நியாயம் கற்பிப்பதில் எந்த நியாயமும் இல்லை. எனவேதான் ஊர்கள் தோறும் நூலகம் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில் தமிழக அரசு ஆயிரத்து ஐநூற்று அறுபதுக்கும் மேற்பட்ட பொது நூலகங்களையும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பகுதிநேர நூலகங்களையும் தொடங்கி நடத்தி வருகிறது.

மனித இனம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து பெற்ற பட்டறிவு, பகுத்தறிவால் பெற்ற முன்னேற்றத்தின் தொகுப்பே புத்தகங்கள்; அவைதாம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள்.

வளங்களில் எல்லாம் தலையாயது மனித வளம், மனித வள மேம்பாட்டிற்கு ஆதாரமாக அமைவது நல்ல நூல்கள், எனவேதான் நல்ல நூல்களுக்கு இடப்படும் மூலதனம் வேறு எந்தத் துறையிலும் இடப்படும்

மூலதனத்தைவிட அதிக லாபத்தை - அதிகப் பயனை அளிப்பதாக அறிஞர்கள் அறிவுறுத்துகிறார்கள்.

வீடுகள்தோறும் நூலகம் வேண்டும்; வீதிகள்தோறும் நூலகம் வேண்டும்; நாடு வளம் பெற புத்தக சாலைகள் யாண்டும் வேண்டுமென்பது அறிஞர்களின் ஆய்வுரை.

கல்வி நிறுவனங்களில் நாம் பெறுவது ஒரு சில கல்வி வல்லுநர்களால் வகுக்கப்பட்ட பாடத் திட்டத்திற்குள் அடங்கிய கல்வி; அந்தப் பாடத் திட்டத்தை ஒட்டி எழுதப்பட்ட பாடப் புத்தகங்களுக்குள் முடக்கப்பட்ட கல்வி; அந்தப் பாடப் புத்தகத்தை ஆசிரியர் எவ்வாறு கையாளுகிறார், விளக்குகிறார், விவரிக்கிறார், செய்முறைகளைச் செய்து காட்டுகிறார், பிள்ளைகளை ஆட்படுத்து கிறார் என்பதைப் பொறுத்த கல்வி. தேர்வுக்கு முக்கியம் வாய்ந்த பாடங்களும், பகுதிகளும் என்னென்ன என்ற அணுகுமுறைக்குள் அடங்கிய கல்வி; இறுதித் தேர்வு எழுதிய பின் வேறு எந்த மேல் வகுப்புத் தேர்வுக்கும் சென்ற பிறகு கீழ்வகுப்புப் புத்தகத்தில் படித்தவற்றை மறந்து விட்டாலும் மேல் வகுப்பில் பெறும் அடைவுகளைப் பாதிக்காத கல்வி. படித்ததை மறந்து விட்டாலும் சான்றிதழையும் பட்டயத்தையும், பட்டத்தையும் சான்றாகக் காட்ட உதவும் கல்வி. ''ஏட்டுச் சுரைக்காய்'' என்று ஒப்புமை காட்டிப் பரிகசிக்கப்படும் கல்வி.

தகவலாக மூளையிலே பதிந்து, காலத்தால் அழிந்து விடுவதல்ல கல்வி.

கல்வி நிறுவனங்களில் முக்கியத்துவம் பெறுவது தகவல் திரட்டலும், மூளையில் பதித்தலும்தான்.

பாடப் பகுதிகளைப் பிள்ளைகள் புரிந்து கொண்டார்களா என்பதற்கு எந்த முக்கியத்துவமும் இல்லை.

பிள்ளைகள் புரியாமல் படிக்கின்ற காலம் வரை படிக்காமல் இருக்கிறார்கள் என்று கருதுவதில் தவறே இல்லை.

பள்ளிப் படிப்பை முடித்தவர்கள் எல்லாம் சான்றிதழ் பெறுகிறார்கள். கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் படித்தவர்கள் பட்டம் பெறுகிறார்கள். கல்வி நிறுவனங்களில் படித்தவர்கள் புரியாமல் படித்தாலும், மனப்பாடம் செய்யும் திறன் இருந்தால் பட்டம் பெறுகிறார்கள்.

மனப்பாடம் செய்வது ஒரு திறன், அதுவே அறிவல்ல.

ஒருசில ஆண்டுகள் படித்து இடையில் பள்ளியை விட்டு நின்று விட்டவர்களை விடப் பட்டம், முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு அவர்களது கல்விக்காக அரசாங்கமும் குடும்பத்தாரும் மிகப் பெரிய முதலீடு செய்திருக்கிறார்கள் - அவர்களை வளப்படுத்த; அவர்கள் மூலம் இந்த நாட்டை வளப்படுத்த.

பட்டம் பெற்றவர்கள் எல்லாம் வளம் பெற்றிருக்கிறார்களா ? புரிந்து படித்தவர்கள் - படித்துப் புரிந்து கொண்டவர்கள் வளம் பெற்றிருக்கிறார்கள். புரிந்து படிக்காதவர்கள், படித்துப் புரிந்து கொள்ளாதவர்கள் வளம் பெற வில்லை. போட்ட மூலதனத்திற்குப் பலனில்லை. பெருத்த விரயம். வீடும் நாடும் தாங்க முடியாத விரயம்.

கல்வி நிறுவனத்திற்கு வருபவர்

எத்தனை ஆண்டுகள் படித்தார் என்பதையோ, எத்தனை பட்டங்கள் வாங்கினார் என்பதையோ அவர் எவ்வளவு அறிவு பெற்றிருக்கிறார் என்பதற்கான சான்றுகளாகக் கொள்ள முடியுமா ?

பெற்ற பட்டங்களே ஒருவருடைய அறிவிற்குச் சான்றாகு மானால் இன்று பட்டம் பெற்றவர்கள் ஏராளம்.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவு அற்றம் காக்கும் கருவி; சென்றவிடமெல்லாம் சிறப்புச் சேர்ப்பது அறிவு, அறிவுடையார் முகத்திரண்டு கண் படைத்தோர்; அறிவுடையார் சுயமரியாதை மிக்கவர்; பிறரைச் சார்ந்து வாழ நினைக்காதவர்; எதிர்கால நோக்குடையவர்; இலக்கை அடைய சரியான வழிமுறையினைத் தேர்ந் தெடுக்கக் கூடியவர்; உரிய செயல் திட்டங்களை வகுத்து நடைமுறை ப்படுத்தக் கூடியவர்; எதிர்வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பவர்; விடாமுயற்சியும் ஊக்கமும் உடையவர்; உழைப்பை வாழ்க்கை முறையாகக் கொண்டவர்; சோம்பலை அறியாதவர்; வெற்றியைக் கண்டு நிதானம் இழக்காதவர்; தோல்விக்குத் துவண்டு போகாதவர்; தமது முயற்சிகளின் விளைவுகளை மீள ஆய்வு செய்பவர்; காலத்திற்கும் தேவைக்கும் ஏற்ப முற்போக்குச் சிந்தனை உடையவர்; செய்யும் தொழிலே தெய்வமெனக் கருதுபவர்; தன்னை வளப்படுத்திக் கொள்பவர்; வீட்டையும் நாட்டையும் வளப்படுத்துபவர்.

இத்தனை திறமைகளும் பட்டம் பல பெற்ற ஒவ்வொருவரிடமும் இருக்கின்றனவா ?

நாமெல்லாம் கணிப்பொறியை அறிவோம். இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு இது. மனித இனத்தின் கண்டுபிடிப்பின் சிகரம் கணிப்பொறி. கணிப்பொறிக்கு ஞாபக சக்தி (Memory) உண்டு.

பல இலட்சம் தகவல்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். அதற் குரிய மொழியில் கட்டளையிட்டால் (Instructuion) கணக்குப் போடும்; இசைக்கும்; படம் வரையும்; நம்மோடு விளையாடும்; எல்லாம் செய்யும். ஞாபக சக்தி இருக்கிறது என்பதாலோ கட்டளைக்கிணங்க எல்லாம் செய்து முடிக்கிறது என்பதாலோ, கணிப் பொறிக்கு அறிவு இருக்கிறது என்று சொல்ல முடியுமா ? முடியாது.

பாடப் புத்தகத்தைப் பிள்ளைகள் மனப்பாடம் செய்கிறார்கள்; தேர்வில் கேட்ட வினாக்களுக்குப் புத்தக வரிகளைத் தவறில்லாமல் எழுதி அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்கள்; எனவே அனைவருக்கும் அறிவு வளர்ந்தி ருக்கிறது என்று கொள்ள முடியுமா ?

பாடத் திட்டத்தைக் கூர்ந்து படித்துப் புரிந்து கொள்ளாதவரை அறிவுடையவர்களாக உருவாகி இருக்கிற ார்கள் என்று சொல்ல முடியாது.

பாடப் புத்தகம் புரிகிறதோ இல்லையோ மாணவன் படித்தாக வேண்டும். தேர்வு எழுதி மதிப்பெண்கள் பெற்றாக வேண்டும். நிர்ப்பந்தம் அது.

தொடரும் – அடுத்த இதழியில் ....



21 ஆம் நூற்றாண்டில் நூலகம்

இரா. முத்துக்குமாரசாமி
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்

நூல்களைத் தன்னகத்தே கொண்டதுதான் நூலகம். 'லைப்ரரி' என்று ஆங்கிலத்தில் உள்ளதைத் தமிழில் எப்படிக் கூறுவது என்ற சிந்தனை இன்றைக்கு எழுபது ஆண்டுகட்கு முன் எழுந்தபோது 'புஸ்தகாலயம், கிரந்தாலயம், சரஸ்வதி பீடம்' என்ற சொற்கள் தோன்றின. அப்போது தோன்றிய 'மெட்ராஸ் லைப்ரரி அசோசியேஷன்' தமிழில் சென்னை புஸ்தகாலய சங்கம்' ஆயிற்று. காலப் போக்கில் அவை மறைந்து நூலாலயம், நூல்நிலையம், நூலகம் என்ற பெயர்கள் எழுந்தன. இன்று பெரும்பாலான வழக்கில் 'நூலகம்' என்ற இனிய, அழகிய, சுருக்கமான சொல் நிலைத்துவிட்டது. இந்தச் சொல்லுக்குத் தொடக்கத்தில் கூறப்பட்ட விளக்கம் பொருத்தமானது தான். ஆனால் 21 ஆம் நூற்றாண்டு நூலகத்திற்கு இது பொருந்துமா என்பது ஐயமே.

இந்திய துணைக் கண்டத்தில் நூலக இயக்கத்தை வேரூன்றச் செய்த வித்தகர், இந்திய நூலகத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன், வகுத்த நூலக இயலின் ஐந்து விதிகளுள் 'நூலகம் என்பது வளரும் அமைப்பு' என்பதும் ஒன்றாகும். கணினியுகம் மலர்ந்தபின் நூலகத்தின் வளர்ச்சி என்பது அசுர வளர்ச்சியாகிவிட்டது. இன்றோ நூலகம் என்ற பெயரே மாறி 'தகவல் மையம்' என்ற பெயர் வரத் தொடங்கிவிட்டது. நூலகஇயல் என்பது நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலாக மாறியுள்ளது. நூலகர் என்பவர்கள் தங்களைத் 'தகவல் விஞ்ஞானி' (Information Scientist) என்று சொல்லிக் கொள்கின்றனர். கூறப்போனால் நூலகஇயல் படித்த நூலகர்களைக் கணினி இயல் படித்த தகவல் விஞ்ஞானிகள் ஒதுக்கி வைக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது எப்படி ஏற்பட்டது?

தொடக்கத்தில் கூறப்பட்டது போல நூலகம் என்பது நூல்களைக் கொண்டது என்ற கருதுகோள் மெல்லமெல்ல மாறி நூலகங்கள் தகவல்களைத் தம்மிடம் சேகரித்து வைக்கும் தகவல் மையங்களாக மாறிவருவதே காரணம்.

கணினியுகம் தோன்றும் வரை நூல்களைச் சேமித்து வைத்து வாசகர்கள் தேவைக்கு ஏற்ப அவற்றை வழங்கிவருவதே நூலகத்தின் பணியாக இருந்தது. இன்று நூல்கள் அடர்வட்டில் (Compact Disk) பதிவு செய்து கிடைக்கின்றன. ஒரு வட்டில் பல நூல்களைப் பதிய முடியும். பல லட்சக்கணக்கான நூல்களை நூற்றுக்

> நூலகங்கள் நாட்டினிலே பெருக வேண்டும்
> நூலோர்கள் தீட்டுகின்ற நூல்களெல்லாம்
> நூலகத்தில் பல்கோடி நுழைய வேண்டும்
> நூற்பயனைப் பாமரரும் நுகரும் வண்ணம்
> நூல்கத்தில் படித்தறிந்து அறிவைக் கூட்ட
> நூலகமே கதியென்று நாளும் வந்து
> நூலகத்தில் இருக்கின்ற நூல்களெல்லாம்
> நொடிப்பொழுதில்
> கற்றிங்குத் திகழ வேண்டும்.

கணக்கான வட்டுகளில் பதிய முடியும். இப்பணி முழுமைபெறுமானால் நூலகம் என்பது பல மாடிக் கட்டடங்களில் அமைய வேண்டியதில்லை. அதைச் சில கோத்ரெஜ் பேழைகளில் ஒரு சிறிய அறையில் அடக்கிவிட முடியும்.

இது மட்டுமா ? வாசகர்கள் நூல்களைப் படிக்க நூலகத்திற்குச் செல்ல வேண்டியதில்லை. வீட்டிலிருந்து கொண்டே வேண்டிய புத்தகத்தை உலகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் தேடிப்பிடித்து வலைப்பின்னல் (Internet) வழியாகத் தம் வீட்டுக் கணினி வழி படித்துக் கொள்ளலாம். 21 ஆம் நூற்ற ாண்டு வாசகர்களுக்கு இந்த வசதியைச் செய்துதர தகவல் பெருவழி (Information Highway) அமைக்கப்பட்டு வருகிறது. இனி வாசகர்களுக்குத் தேவையானது தனிக் கணினி (Personal Computer) தவிர சொந்த வீட்டு நூலகம் இல்லை. எனவே அடுத்த நூற்றாண்டு நூலகம் என்பது பையடக்கக் கணினி (Pocket Computer). மேசைக் கணினி, தொடைமெல் வைக்கும் (Lap Top Computer) கணினி ஆகி இனிச் சட்டைப்பைக்குள் அது அடங்கப் போகிறது.

இனி நூல்களைத் தகவல் களஞ்சியங்களாகத்தான் கருதுவர். குறிப்பாக மானுடவியல் (Humanities). அறிவியல் (Science) என்று இரண்டு பிரிவாக உள்ள அறிவுலகத்தில் அறிவியல் செய்திகள் இனித் தகவல் தொகுப்பாகவே அமையும். வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் அறிவியலுக்குப் பழமையைப் பற்றிய சிந்தனையே இருக்காது. தார்ச் சாலையில் ஓட்டும் காரை விடத் தண்ணீரைக் கண்டால் மிதக்கவும் குறுக்கீடு ஏற்பட்டால் காற்றில் பறந்து கடக்கவும் எதிர்காலக் காரோட்டி விரும்புவானே தவிர கார் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது என்று ஆராய்ந்து கொண்டிருக்க மாட்டான். அவனுக்குப் பழைய வரலாறு தேவையில்லை. புதியபுதிய தகவல்கள் அவனுக்குக்

> காகிதம் கண்டு பிடித்தவன்
> இன்று இல்லை
> காகிதம் புத்தகங்களாகி - பலரை
> கண்டு பிடித்துக் கொடுத்தது

கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அவற்றை மட்டும் கணினி அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தால் போதும்.

இலக்கியம், வரலாறு, சமயம், தத்துவம் போன்ற துறைகளைக் கொண்ட மானுடவியலாளர் பழமையைப் போற்றுவர். அதைத்தரும் நூல்களைப் படிக்க விரும்புவர். இருப்பினும் நூல்களின் பெருக்கத்தின் காரணமாக அவர்களால் எல்லா நூல்களையும் படிக்க முடியாது. அவர்களுக்கு வேண்டிய தகவல்கள் முழுவதும் விரைவில் கிடைக்க வேண்டு மென்றே விரும்புவர். பானிப்பட் போர் எப்போது நடை பெற்றது ? அதில் யார்யார் போரிட்டார்கள்? என்பதை நூலைத் தேடிப் பக்கத்தைப் புரட்டிப் பார்க்க எந்த வரலாற்று ஆசிரியர்களுக்கும் நேரம் இருக்காது; பொறுமையும் இருக்காது அதையே ஒரு தகவலாகப் பதிந்து வைத்துள்ள கணினியிலுள்ள தகவல் தொகுப்பு மையம் (Data Base) ஓர் இமைப்பொழுதில் தருமேயானால் அதைத்தானே அவர் நாடுவார்.

'செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே' என்ற தொடர் குறுந்தொகையில் உள்ளது. இவ்வரிகளுக்குச் சொந்தக்காரர் 'செம்புலப் பெயனீரார்' என்ற தகவலைக் கணினி தருமானால் அது எங்கே வந்துள்ளது என்ற தகவலைக் கணினி தருமானால் இது எங்கே வந்துள்ளது என்று தேடிக் கொண்டிருக்கிற வாசகர் நூலகத்திற்குப் போவாரா ? கணினியை நாடுவாரா ?

எனவே எந்தச் செய்திகளையும் தகவல்களாக மாற்றி அவற்றைப் பதிவு செய்து கொண்டு அவற்றை யாருக்கு எப்போது தேவைப்படுகிறதோ அவருக்கு அப்போதே கேட்டவுடன் கிடைக்கச் செய்யும் வசதிகிடைத்துவிடுமானால் நூல்கள் எதற்கு ? நூலகங்கள் எதற்கு ?

விலைமதிப்பற்ற மருத்துவ நூல்களைப் புகழ்பெற்ற மருத்துவர்கள் எழுதி அச்சிட்டு, வண்ணப்படங்களுடன் நூல்வடிவில் வெளியிடும் செலவைவிட, அதையே அடர்வட்டில் வண்ணப்படங் களுடன் தரமுடியுமென்ற சூழல் உருவாகிவிட்ட பின் யார்தான் நூலை எழுதி அச்சிடுவர். மருத்துவர் கணினி முன் அமர்ந்து தட்டச்சு போல் தட்டிக் கொண்ருந்தால் நூல் கணினியில்



உருவாகிக் கொண்டேயிருக்கும். எங்கெங்கே விளக்கப்படங்கள் வேண்டுமோ அவற்றை வரைபடி (Graphics) வசதியுடன் அங்கங்கே சேர்த்துவிடலாம். முழு நூல் முடிந்தவுடன் ஓர் அடர் வட்டில் பதிவு செய்து அதை எடுத்துக் கொண்டு சென்று விடலாம். பல வட்டுகளில் பதிவு செய்து பிரதியெடுத்து விற்பனை செய்யலாம். அந்த வட்டைத் தகவல் மையம் வாங்கிக் கணினி வழியாக வாசகர்களுக்கு வழங்கலாம்.

இது எல்லாம் எல்லா வசதிகளும் கொண்ட மேலை நாடுகளில் வேண்டுமானால் நடக்கலாம். நம்நாட்டில் இது சாத்தியப்படுமா என்று சிந்திக்க வேண்டாம். புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளரான சுஜாதா பேனாவை எடுத்துக் கதை எழுதிப் பல வருடங்களாகிவிட்டன. முதலில் வீட்டில் இருந்து கொண்டே கணினியில் கதையைப் பதிவு செய்து ஃளாப்பியில் பிரதி எடுத்துப் பத்திரிகைகளுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். இன்று முடிந்தால் பத்திரிகை அலுவலகத்துக்கு நேரில் சென்று அங்கே லேசர் அச்சில் தன் கதையைத்தானே பதித்து, படித்துவிட்டு வருகிறார். எதிர்காலத்தில் அடர் வட்டில் அவர் நூல்கள் வெளிவர எவ்வளவு காலமாகும் ? விரைவில் அக்காலம் வரும்.

இந்த நிலை 21 ஆம் நூற்றாண்டின் நூலகச் சூழலாக இருக்கும். கத்தியின்றி இரத்தமின்றிப் போர் கண்ட தமிழன் ஏடின்றி எழுதுகோலின்றி அறிவுலகத்தை வெற்றிகாணப் போகிறான். இது 21 ஆம் நூற்றாண்டில் உருவாகவிருக்கும் புரட்சியாகும் !

P. MANICKAM & CO

Civil Engineering Contractors



BUILDINGS

– ALL TYPES OF PILE FOUNDATIONS

– ROAD WORK –

FABRICATION & ERECTION OF STEEL STRUCTURES



FOR DETAILS CONTACT:

21, PERAMBUR BARRACKS ROAD, PATTALAM,
MADRAS – 600 012.

☎ : 532 3296/532 4637

P. MANICKAM — **M. PALANI** M.A. — **M. PADMANABAN** B.E., M.I.E.

M. JAYAVEL B.E., M.I.E. — **M. SUKUMAR** — **M. NAGARAJAN** B.E.

அறியாமை அகலக் கற்கை நன்றே



சுசிலா கணேசன்
துணை இயக்குநர்,
பொது நூலகத் துறை

எண்ணிலா நோயுடையார் - இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்.

கண்ணிலாக் குழந்தைகள் போல் - பிறர் காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார், நண்ணிய பெருங்கலைகள் - பத்து நாலாயிரங் கோடி நயந்து நின்ற புண்ணிய நாட்டினிலே - இவர் பொறியற்ற விலங்குகள் போல் வாழ்வார் - என நெஞ்சு பொறுக்காமல் கூறிய பாரதியின் கூற்று, இன்றும் பொருந்தக்கூடியதாகவே உள்ளது. நம் நாடு சுதந்திரம் அடைந்து முப்பது ஆண்டுகளுக்கு மேலாகியும் அறியாமை என்னும் இருள் அகலாமல் இருக்கிறது என்பது உண்மைதான்.

கஞ்சிகுடிப்பதற்கில்லாதவர், அதன் காரணங்கள் என்னவென்று அறிந்து கொள்ளும் அறிவில்லாமல் சாத்திரப்பேய்கள் சொல்லும் வார்த்தைகளை நம்பியும், தோத்திரங்கள் சொல்லி, சூது செய்யும் நீசர்களைப் பணிந்தும் இப்படி மூடப்பழக்கங்களிலும், மந்திரத்தந்திரங் களிலும் காட்டும் நம்பிக்கை, இன்னமும் மக்களிடையே இருந்து வருவதைக் கண்கூடாகக் காண்கிறோம்.

இதற்குக்காரணம்? -

அறியாமைதான்.

ஆம் அறியப்பட வேண்டு வனவற்றை அறிந்து கொள்ளமுயலாமல், அப்படி இருப்பதால் ஏற்படும் பாதிப்புகளைப் புரிந்து கொள்ளாமல் இருப்பது தான் காரணம்.

ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி அலைவதால் 'பஞ்சமோ பஞ்சம்' என்று பரிதவிக்கும் நிலை மாறிவிடவாப் போகிறது ?

ஆறு அறிவு படைத்தவன் மனிதன். ஆனால் அறிவைப் பயன்படுத்துவதில் தான் மனிதன்



பூஞ்சோலையா நூலகம்?

புதுமலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையாக நூலகத்தைக் கருதக்கூடாது. ஏனென்றால் வண்டுகள் தேனையுண்ட பின் அவை தேனைச் சுரப்பதில்லை; மென்மலர் வாடி உதிர்வது போல் நூல்கள் வழங்கும் கருத்து மலர்கள் வாடுவ தில்லை.

மேதை

வேறுபடுகிறான். 'அறிவைப் பயன்படுத்துபவன் அறிவாளியாகவும் பயன்படுத் தாதவன் அறிவிலியாகவும்' கருதப்படுகின்றனர்.

அறிவு என்னும் கருங்கல் பாறையைக் 'கல்வி' என்னும் சிற்றுளியால் செதுக்கினால் 'அறிவொளி' என்னும் மனிதன் உருவாக்கப்படுகிறான். ஆம் மனிதனின் அறியாமையை அகற்றி, அறிவை விளக்கி, அவனது வாழ்வை நேர் வழியில் செலுத்த வல்லது கல்வி ஒன்றுதான். மக்கள் உடலுக்கு உணவு எத்தகையதோ அத்தகையது மக்கள் அறிவிற்குக் கல்வி.

'கற்கைநன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே'

என்னும் 'வெற்றி வேற்கை' கல்வியின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. ஒருவர் எவ்வளவுக்கெவ்வளவு படிக்கின்றாரோ அவ்வளவுக்கவ்வளவு அவரது அறிவு வளரும் என்பதை வள்ளுவர்,

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு

எனத் தெளிவாக்கியுள்ளார் அதிக அளவில் மக்கள் படிக்க வேண்டும். கல்வி அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். 'கைக்கழகு காவியத்தோடு இருத்தல்' என்னும் பழமொழி தோன்றியது நம் நாட்டில் ! அங்ஙனம் இருக்கையில் மக்கள் கல்வி அறிவு பெறாமல் இருப்பது அழகோ?'.

அறியாமை என்னும் இருட்டை விலக்க 'எழுத்தறிவு' வேண்டும். எழுத்தறிவு பெற ஆரம்பக்கல்விக் கூடங்களும், அதற்கு மேல் உயர் கல்விக்குப் பள்ளிகளும், கல்லூரிகளும் இருக்கின்றன. ஆனால் இவைகளுக்குச் சென்று படிக்க, வயது வரம்பு உண்டு. ஆனால், நூலகத்திற்குச் சென்று படிக்க வயதுவரம்பு இல்லை. குறிப்பிட்ட காலம் வரையிலுமே பள்ளியில் படிக்க முடியும். தனக்கு முன்னே உள்ள பிரச்சனைகளைப் பற்றிச் சிந்திக்கவும், தீர்வு காணவும் முடியாத நிலையில் உள்ள இளம் பருவத்திலேயே, மாணவனின் பள்ளிப்படிப்பு முடிந்து விடுகிறது. ஆனால், தனக்குத்தானே வாழ்நாள்

முழுவதும் தொடர்ந்து கல்வி அறிவு பெற நூலகம் வழிகாட்டுகிறது.

வயது பேதமின்றி - பால் பாகுபாடு இன்றி- பொருளாதார ஏற்றத் தாழ்வு இன்றி - சமயப்பிரிவுகளைக் கடந்து - பழமையைக் காத்து - புதுமைக்கு வித்திட்டு - உண்மைகளை உணர்ந்து - கடமைகளைச் செய்ய வல்ல நல்லதொரு பண்பட்ட - அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்கவல்லவை நூலகங்கள் மட்டும்தான். நூலகம் என்பது கல்வி கற்க, ஆற்றலை வளர்க்க, அரசியல், பொருளாதாரம், தொழில், மருத்துவம் ஆகிய பல்துறை அறிவாற்றலையும் தொகுத்துத்தர வல்லது என்பதுதான் உண்மை.

மனிதர் எல்லாம் அன்பு நெறி காண்பதற்கும் மனோபாவம் வானைப் போல் விரிவு அடைந்து தனி மனிதத் தத்துவமாம் இருளைப் போக்கி சக மக்கள் ஒன்று என்று உணர்வதற்கும் இனிது இனிதாய் எழுந்த உயர் எண்ணம் எல்லாம் இலங்குதற்கும் உதவுவது புலவர் தரு சுவடிச்சாலை - என நூலகத்தின் சிறப்பினை எடுத்துக் கூறியுள்ள புரட்சிக் கவிஞரின் கூற்றுக்குமேல் வேறு எதுவும் கூறமுடியுமா ?

நாட்டின் வளர்ச்சியில் நூலகங்களுக்குப் பெரும் பங்கு உண்டு. முக்கியமாக 20 - ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான வளர்ச்சியின் பயனைத் துரிதமாக மக்கள் அடைய, நூல்களும் நூலகங்களுமே உதவ முடியும். அது மட்டுமன்று ! இந்தியப் பொருளாதார நிலையில், அறிவின் பெருக்கத்தினால் வெளிவந்துள்ள நூல்கள் அனைத்தையும், தனி மனிதன் ஒருவன் விலை கொடுத்து வாங்குவது என்பது முடியாது. அவனுக்குத் தன் அறிவுப் பசியைத் தீர்த்துக் கொள்ள நூலகங்கள் மட்டுமே உதவ முடியும்.

இதன் விளைவாகத்தான் நூற்றுக்கணக்கான நூலகங்கள், நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் தோன்ற ஆரம்பித்துள்ளன.

நகர்ப்புறங்களில் அரசு நடத்தும் நூலகங்கள், தனியார் நூலகங்கள், அயல்நாட்டுத்தூதரக நூலகங்கள் -

மேன்மையானவை நூல்களே!

நல்ல நூல்கள் நமக்குத் தீங்கு நேரும் காலத்தில் தக்க நண்பர்களாய் அமைகின்றன. ஆகையால் அனைத்திலும் மேன்மை பொருந்தியவை நூல்களே!

சத்தியமூர்த்தி

இப்படிப்பலப்பல உள்ளன. ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்திலும் 'மாவட்டமைய நூலகம் அமைந்து' நகர்ப்புற மக்களுக்கு, அறிவு சார்ந்த நூல்களை அவ்வப்பொழுது வழங்கியும், ஆராய்ச்சியாளர்களுக்கு ஆய்வுக் குறிப்புகள் தந்தும் உதவி செய்கின்றன. கிராமப்புற நூலகங்கள் அந்தந்தப் பகுதி மக்களின் தேவைகளுக்கேற்ப நூல்களை வழங்கிச் சிறப்பாகத் தொண்டு புரிகின்றன.

நம் நாட்டின் முதுகெலும்பு கிராமங்கள்தாம், என்ற காந்தியடிகளின் வாக்கைமெய்ப்பிக்கும் வகையில், கிராமப் புறங்களின் வளர்ச்சியில் அரசு அதிக கவனம் செலுத்திவருகிறது. இந்த வளர்ச்சிக்கு நூலகங்களும் பெரிதும் உதவ வேண்டும் எனக் கருதி 5000 மக்கள் தொகை கொண்ட ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு கிளை நூலகம் வீதம் தமிழ்நாடு அரசு நூலகங்களைத் திறந்து வருகிறது. கட்டாயப் படிப்பு என்கிற முறையில் உள்ள இலவசக்கல்வித் திட்டம், எழுதவும், படிக்கவும் தெரியாதவர்களுக்கான வயதுவந்தோர் கல்வித்திட்டம் ஆகிய திட்டங்களை நல்ல முறையில் நடத்த இவைகளுக்கான நூல்களைக் கிளை நூலகங்கள் வழங்கிவருகின்றன.

சிறிதே கற்றவர்கள், தொடர்ந்து படித்துத் தங்கள் அறிவைப் பெருக்கிக் கொள்ள வழி இல்லாமையால் 'கல்லாதவர்களாக' மாறிவிடாமல் இருக்கவும் நூலகங்கள் உதவுகின்றன. நூல்கள் மட்டும் இன்றிப் பல தினசரி, வார மாத இதழ்களும் வாங்கப்பட்டு வருவதால், உலகத்தின் பல பகுதிகளிலும் நடைபெறும் செய்திகளைக் கிராம மக்களும் உடனுக்குடன் தெரிந்துகொள்ள முடிகிறது.

கிளை நூலகங்கள் திறக்க முடியாத பகுதிகளுக்கு நடமாடும் நூலக ஊர்திகள் மூலமும், இருசக்கர, முச்சக்கர வண்டிகள் மூலமும் நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் நூல்கள் வழங்கப்படுவது மட்டுமின்றி, சிறந்த அறிவார்ந்த படக்காட்சிகளைக்காட்டியும், மக்களது அறிவுவளர்ச்சிக்கு உரிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றோடு 'வாசகர் அரங்கு' என்னும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தும் நூல்கள் அறிமுக விழா நடத்தியும் மக்களிடையே படிக்கும் ஆர்வத்தைத் தூண்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்காகத் தனி நூலகம் நடத்தி, கதைகள் மூலமும், பொது அறிவுப் போட்டிகள் மூலமும், அவர்களுக்குப் படிக்கும் ஆர்வம் புகட்டப்பட்டுவருகிறது.

பெண்களுக்கெனத் தனிப்பகுதி ஏற்படுத்தப்பட்டு, பெண்களின் அறிவு

வளர்ச்சியில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. அவ்வப்போது, ஆங்காங்கே 'நூல்கள் கண்காட்சி' நடத்தப்பட்டுக் கண்ணுக்கும், அறிவிற்கும் விருந்து அளிக்கப்படுகிறது. இங்ஙனம், சமூகத்தில் உள்ள எல்லாப் பிரிவினருக்கும் அறியாமையை அகற்றி, அறிவினைப் பரப்ப, நூலகங்கள் பெரிதும் பாடுபட்டு வருகின்றன.

அறிவின்மையை அகற்றத் துடிக்கும் மக்கள் ஒரு பக்கமும், அறிவுக் கருவூலமாகத் திகழும் நூல்கள் ஒரு பக்கமும் இருக்க, இவை இரண்டையும் இணைக்கும் பாலங்களாகத் திகழ்பவர்கள்தான் நூலகர்கள். நூலகங்கள் தோன்றத் தொடங்கிய நாள்களில் நூலகர்களை, நூல் பாதுகாப்பாளராகவும். 'அழகான நூல்களைச் சேகரித்துவைப்பவருமாகவே' கருதினார்கள். ஆனால் இந்நாளில் உள்ள நூலகர்களுக்குப் பணி அவைமட்டுமல்ல. 'மக்கள் எதைப் படிக்க விரும்புகிறார்கள் எவ்விதத்தில் படிக்க விரும்புகிறார்கள் என்பனவற்றைப் புரிந்து கொண்டு, அவர்களுக்குத் தேவையான வற்றை தேர்ந்தெடுத்துக் கொடுத்து உதவும் சீரிய பொறுப்பும் நூலகர் பணிக்கேயுரிய தாகும்.

"The Librarians who can transform the Potential energy stored in books into Kinetic energy in the minds of Readers" - என்கிற டாக்டர் அரங்கநாதனின் கண்ணோட்டத்தில் செயல்பட நூலகர்களும் ஆர்வத்துடன் காத்துக் கொண்டிக்கிறார்கள்.

கல்வி நீரோடை, பள்ளியிலும், கல்லூரியிலும், பல்கலைக்கழகத்திலும், மட்டும் பாய்ந்தால் போதாது. அந்த ஓடை மக்கள் மனத்தினைக் குளிர்விக்கும் வகையில் சமுதாயம் என்கிற செந்நெல் வயலில், அறிவு என்ற அறுவடை கொழிக்க வேண்டிய வகையில் பெரும் ஆறாகப்பரந்து விரிந்து பாய வேண்டும் என்பதுதான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்ற சமூக சீர்திருத்தச் செம்மல்களின் இதய வேட்கை. இந்த வேட்கையைத் தணிக்கும் வகையில் அரசு எடுத்து வரும் பெரும் முயற்சிகளில் 'நூலக வளர்ச்சியும்' ஒன்றாகும்.

நூலகங்களின் சிறப்பு மிக்க பணியினால். 'கற்றவர் சிலர், கல்லாதவர் பலர்' என்கிற நிலை மாறி, 'கற்றவர் பலர், கல்லாதவர் இலர்' என்கிற நிலை விரைவில் உருவாகும் ! இது உறுதி !

''லார்டு மெக்காலே'' படிக்கும் பொழுது அவர் கண்கள் மட்டும் படிக்காது. அவருடைய சரீரமும் சதையும் படிக்கும். (He Reads not only his eyes but also his skin) என்று ஹென்னாமோர் என்ற அம்மையார் மெக்காலே பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

நூல்களே எதிர்கால வழித் தடங்கள்

ஷெரீன் அகமது
துணை இயக்குநர், பொது நூலகத்துறை

கற்கால மனிதன் தனது சிந்தனையை வளர்த்துக் கொண்ட போது தனது எண்ணங்களையும், ஆய்வு களையும், எதிர்கால மனிதனுக்குப் பயன்படச் செய்ய வேண்டுமென்பதற்காக எழுத்துருவம் கொடுத்து, பாதுகாத்து வைக்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டுக் கற்பாறைகளில் ஓவிய உருவிலும், களிமண்ணால் உருவாக்கப் பட்ட கற்களிலும், உருவாக்கிப் பாதுகாத்தான். அவை காலத்தால் அழியாமல் இன்றும் சென்ற காலச் செயல்பாடுகளுக்குச் சாட்சிகளாக, எதிர்கால மக்களுக்குத் துணையாக, வழிகாட்டியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

காலம் மாறியது, பாஸ்பரஸ் தாளிலும், தோல் தாளிலும் அடுத்துப் புலவர்களும், அறிவுலக மேதைகளும் தங்களது எண்ணங்களைக் கவிதை வடிவில் படைத்து அதனைப் பனை ஓலைகளிலும் எழுதிவைத்தார்கள். தொல்காப்பியம், திருக்குறள் பெரியபுராணம், சங்க இலக்கியங்கள் எல்லாம் பனைஓலைகளில் உருவான வைகள்தாம். அவைகளை எழுதப் படாத ஒரு மூலையில் இரு ஓட்டையிட்டு ஒன்று சேர்த்து எப்பொழுதும் தளர்ந்து போகாமல் நூல் வடிவமாக்கிப் பாதுகாத்தனர். அவைகளே பிற்காலத்தில், அச்சு வடிவமாக்கப்பட்டுக் காலத்தால் அழிக்க முடியாத காவியங்களாக என்றென்றும், மனித இனத்திற்குச் சிறப்பான வழிகாட்டிகளாக இருந்து வருகின்றன.

அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப் படும் முன்பு, வாய் மொழி யாகப் பாடல்கள் பாடப்பட்டு வந்தன. நாடோடிப் பாடல்கள் இவ்வகைகளில் உள்ளன. இதே போன்று வேதங்களும், வேதமந்திரங்களும், வாய்மொழியாகவே மனிதனது நினை வாற்றலில் இருந்தன. குரான் இன்றைய வடிவத்தில் உருவாவதற்கு முன் ''ஹாமிஸ்'' எனப்படுவோரிடம், காலம் காலமாக மனப்பாடமாக இருந்து பின் நூல் வடிவமாக்கப்பட்டதுதான்.

அச்சு இயந்திரத்தைக் 'குட்டன் பர்க்' (Gutten Berg) கண்டுபிடித்ததைத் தொடர்ந்து நூல்களை உருவாக்கு வதிலும், பேணுவதிலும் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டது. பிளேட் டோவின் அரசியலி லிருந்து கலைஞரின்

குறளோவியம்வரை அற்புதமான கலைப் படைப்புகள் உருவாக்கப் பட்டுப்பாதுகாக்கப்படுவதால், மனித வாழ்வுக்கு என்றென்றும் வழி காட்டிகளாக நூலகங்கள் திகழ்கின்றன. இருப்பினும் அலெக்ஸாண்டிரியா நூலகம், யாழ்ப்பாணம் நூலகம் போன்றவை எரிக்கப்பட்டன. இதனால் அற்புதமான எதிர்கால மக்களுக்கு வழிகாட்டிகளாக அமையக்கூடிய அற்புத நூல்கள் அழிந்துவிட்டன.

பலபிரதிகளை விரைவில் எடுக்கும் வாய்ப்புகளைப் பெற்ற தாலும் எடுக்கப் பட்ட நகல்கள் சிறப்பாக அமைந்திருந்த தாலும், நூல்களைக் காலத்தின் கொடுமை களிலிருந்து காக்கவும், எதிர்காலச் சந்ததியினருக்குக் குறிப்பிட்ட காலத்தைப் பற்றிய சிறப்பினையும், செய்திகளையும், சிறந்த முறையில் தெரிவிக்கவும், உருவாக்கப் பட்ட நூல்களைச் சிறந்த முறையில் பாதுகாக்கவும் நூலகங்கள் தேவைப் பட்டன. அத்துடன் அச்சு இயந்திரம் பல்லாயிரக் கணக்கான நூல்களை அச்சடித்துத்தந்தன. இந்நூல்கள் பாதுகாப்பாக நூலகங்களில் அடுக்கி வைக்கப்பட்டன.

இங்ஙனம் அடுக்கி வைக்கப் பட்ட நூல்கள் பயன்படுவதற்காக, நூலக மேதைகள் புதுப்புது வழிகளைக் கண்டுபிடித்து வாசகர்களுக்கு வழங்கினர்.

இப்பயன்பாட்டிற்கு முதல்படி யாகத்தான் நூல்கள் பகுப்புமுறை உருவானது. இந்தப் பகுப்பு முறை யினால் வாசகர்களுக்கு வசதியாக வகைவகையாகத் தொகுக்கப்பட்டு வரிசை வரிசையாக நூல்கள் அடுக்கி வைக்கப்பட்டன. இதற்குரிய பகுப்புப் படிகளும் உருவாக்கப் பட்டு ஆசிரியர் தலைப்பிலும் பொருளியல் தலைப் பிலும் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி மகத்தானது. எதிர்காலத்திற்குப் பயன்படும் எனக் கருதப்பட்டவைகள் நிகழ்காலத்திலேயே மாற்றப்பட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

அச்சு இயந்திரத்தில் புதிய, புதிய மாறுதல்கள் கண்டுபிடிக்கப் பட்டதும்,லட்சக்கணக்கான பிரதிகளை மணிக் கணக்கில் அச்சிட்டுத் தள்ளக் கூடிய நிலையில் மேம்படுத்தப்பட்ட அச்சு எந்திரங்கள் பல இந்நாளில் தோன்றி விட்டதால் புதிது புதிதாக - அலைஅலை யாக வரும் நூல்களை வைப்பதற்குத் தற்போது நூலகங்களில் இடவசதி போத வில்லை எனும் நிலை ஏற்பட்டுள்ளது. பழைய நூல்கள் காலத்தால் சீர்கெட்டுப் போகக் கூடிய கட்டாய நிலை இருந்தது. ஆகவே நூல்களைப் பாதுகாக்கும் பொருட்டு "MICRO FILM" வசதி செய்யப் பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான விலை மதிப்பான நூல்கள் இங்ஙனம் MICRO FILM செய்யப்பட்டு, வாசகர்களது வசதிக்காக நூலகங்களில் வைக்கப்

பட்டுள்ளன. இம்முறை நூலக வளர்ச்சிக்கும் நூல்கள் பராமரிக்கப் படுவதற்கும் என்றென்றும் அவை மக்களுக்குப் பயன்படும் வகையிலும் உதவிக் கொண்டிருக்கின்றன.

கணிப்பொறி இன்று எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. இதே போன்று நூலக வளர்ச்சியிலும் இன்று அரிய சேவை செய்கிறது. உலகத்தில் ஏதோ மூலையில் இருக்கும் தகவலை நொடியில் பெற்று வழங்கக் கூடிய வாய்ப்பும் கணிப்பொறிமூலம் இன்று ஏற்பட்டு உள்ளது.

புழு பூச்சிகளால் ஏற்படும் தீமைகளைக் களையும் விதம்

1. கறையான் முதலியவை அரிக்காமலிருக்க புத்தகங்களை அடுக்கும் அலமாரிகளை இரும்பால் செய்து கொள்ளலாம்.
2. புத்தக அலமாரிகளை மெர்க்குரிக் குளோரைடு அல்லது கிரியோஸோட் கலந்த வார்னிஷ் தடவி வைக்கலாம்.
3. அரிய புத்தகங்களின் மேல் சில காலத்திற்கொரு முறை சிடார் எண்ணெய், D.D.T. முதலியவற்றைத் தெளித்து வைக்கலாம்.
4. தற்போது எங்கும் மிக மலிவாகக் கிடைக்கும் பிளிட் பவுடரையும், அந்துருண்டைகளையும் எல்லா அலமாரிகளிலும் பயன்படுத்தலாம்.
5. எறும்பு முதலியவை வராமல் தடுக்க நூலகத்தினுள்ளே உணவுப் பொருள்களை யாரும் கொண்டு செல்லாமல் தடுக்கலாம்.
6. எலி, ஓணான், பல்லி போன்றவை நூலகத்தின் வெளியேயிருந்து வராமல் சன்னல்களுக்கு மிகச் சிறிய கட்டம் கொண்ட கம்பி வலைகளை அமைக்கலாம்.
7. நூல்கள் வெளியிடும் பதிப்பகத்தார்கள் தங்களது விளம்பர நோக்கத்திற்காக வாசனைத் திரவியங்களைக் கலப்பதுபோல், நூல்களைக் கட்டுமானம் செய்யும் பொழுது, நூல்களைப் பாதுகாக்கும் பொருட்டுக் கிருமிநாசினி முதலிய இரசாயனப் பொருள்களைக் கலந்து கட்டுமானம் செய்யப்படுமேயானால் நூல்கள் விரைவில் பழுதடைவதைத் தடுக்கலாம்.
8. புத்தக அலமாரிகள் அனைத்தையும் அல்லது தேர்ந்தெடுத்த சில பகுதிகளை மட்டும் கிருமி நாசினி வாயுக்களால் (Fumigation) சுத்தம் செய்யலாம். ஹைடிரஜன் சயனைடு, கார்பன் டை சல்பைடு, ஈதைல் புரோமைடு போன்ற எளிதில் வாயுவாகும் திரவங்களைப் பயன்படுத்தலாம்.
9. அவ்வப்போது தூசு தட்டி விடுவதும் வேண்டும். அடிக்கடி தூசு தட்டுவதால் T.B., ஆஸ்துமா போன்ற வியாதிகள் மனிதர்களுக்கு வருவதால் 'வேக்குவம் கிளீனர்' (Vacuum Cleaner) போன்ற நவீன சாதனங்களைக் கொண்டு தூசு போக்குவது அவசியம்.

உங்கள் நூலகம் !

உங்கள் நூலகம் - எல்லாம்
உங்கள் நூல்கள் !

படித்துப் படித்துக் களியுங்கள் - நூல்
பலவும் கற்றுத் தெளியுங்கள் !
மடித்துக் கிழித்துப் போடாமல் - நூலை
மதித்துப் போற்றி வையுங்கள் !
(உங்கள் நூலகம் . . .)

எடுத்துப் படிப்பதுங் களுரிமையே - அதை
எடுத்த இடத்தில் வைப்பதும்
அடுத்து உங்கள் கடமையே ! - இதை
அலட்சியப் படுத்தல் மடமையே !
(உங்கள் நூலகம் . . .)

என்ன என்ன வேண்டுவதோ - அதை
எளிதாய் எடுத்துப் படியுங்கள் !
சின்னச் சின்ன நூல்முதலாய் - உயர்
சிற்றிலக் கியங்கள் வரையுண்டு !
(உங்கள் நூலகம் . . .)

வண்ண வண்ணப் பத்திரிகை - இங்கு
வகைவகை யாக வந்திருக்கும் !
எண்ண எண்ண இனித்திடுமே - நீங்கள்
என்றும் வருகெனப் பணித்திடுமே !
(உங்கள் நூலகம் . . .)



குட்டிப் பல்கலைக்கழகங்கள்

ந. பாண்டுரங்கன், M.A., C.L.Sc.,
நூலகர் - வாடிப்பட்டி

இந்தியாவிலேயே தமிழகத்தில் தான் முதன் முதலாக நூலகச் சட்டம் அமைக்கப்பட்டது என்பதில் தமிழ்நாடு மிகவும் பெருமை அடைகிறது.

அண்மைக் காலமாகப் பொது நூலகத்துறையின் வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணமும் புத்துணர்ச்சியும் ஏற்பட்டிருக் கின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை.

நம் பொது நூலகத்துறையை மேம்படுத்துதல் என்கிற ஆர்வம் இன்று பொதுமக்களிடையே நன்கு பூரித்துக் கிளம்பியிருப்பதின் அடையாளம்தான் லட்சங்களாய்க் குவிந்த புரவலர் நிதிகளும், நதிகளாய்ப் பெருகிய நன்கொடைகளும்.

ஒரு நூலகம் திறக்கப் படுகிறபோது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது என்ற அறிஞர் பெருமக்களின் சிந்தனைகளுக்கேற்ப இன்று சிறைச்சாலைகளிலும்கூட பொது நூலகத்துறையின் பகுதிநேர நூலகங்கள் பாரிஜாதங்களாக மலர்ந்து வருகின்றன.

ஒரு நூலகப் பணியாளர் என்று மாத்திரமல்லாமல் ஓர் இலக்கியவாதி என்ற உயர்ந்த கண்ணோட்டத்துடனும் பார்க்கிறபோது கடந்த பத்தாண்டுகளில் நூலகங்களில் வாசகர் வருகை திருவிழாக் கூட்டம் போல் பெருகியுள்ளது, வருகிற வாசகர்கள் பத்திரிகைகளுக்காக மட்டும் வருவதில்லை. அது அவர்களுக்குச் சாலையோரக் கடைகளில் சுலபமாகக் கிடைக்கிறது.

அடுக்குகளில் அலங்காரமாக நிற்கின்ற பல்வேறு துறைகள் குறித்த நூல்கள் ஒவ்வொன்றும் இன்று ஒருசில வாசகர்களாலேனும் குறிப்பெடுக்க உதவுகின்றன. அதற்குத்தான் அதிக வாசகர்கள் வருகை தருகின்றனர்.

ஆயிரம் பல்கலைக்கழங்கள் அஞ்சல்வழி மூலமாகப் பரப்புகின்ற அறிவொளிச்சுடரை இன்று ஒவ்வொரு நூலகங்களும் குட்டிப் பல்கலைக் கழகங்களாக மாறி குக்கிராமங்களிலும் கூடக்கல்வி அறிவைப் பரப்பிவருகின்றன என்பதைக் கல்வியாளர்களே ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கோவை மாவட்ட நூலக ஆணைக் குழு
குனியமுத்தூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா
வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா
30.6.1996
புகைப்படக் காட்சிகள்

குனியமுத்தூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா

குனியமுத்தூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா

வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா



வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா

வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா



வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா

வெள்ளலூர் கிளை நூலகக் கட்டடத் திறப்பு விழா

அதிலும் பள்ளி மாணவர்களை நூலகப் படிப்புக்கு ஆயத்தப்படுதினால் தான் அவர்களது பள்ளிப் படிப்பு கூர்மைப் படுத்தப்படும் என்பதை எல்லோரும் உணர்ந்துள்ளனர்.

பள்ளிகளும் கல்லூரிகளும் இன்று கற்பிக்கும் மெக்காலேத்தனத்தைத் தான் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் இக்கல்வி என்பது குறுகிய காலம் தான். ஒரு கல்லூரியில் பணிபுரியும் பேராசியருக்கு ஆரம்பப்பள்ளியில் தாம் படித்த முதல் பாடம் தெரியாது.

ஆனால் அதே பேராசிரியரிடம் அவர் நூலகத்தில் படித்த முதல் நூலைக் கேட்டால் அது கதையோ, காவியமோ, துல்லியமாகப் பதில் கிடைத்துவிடும்.

வரலாற்றில் தமிழகத்தைப் பொறுத்த வரை நூல்களுக்கும், நூலாசிரியர்களுக்கும் உள்ள கௌரவம் மற்ற இடங்களில் கிடைக்குமா என்பது சந்தேகமே !

ஆனால், பேரறிஞர் அண்ணா உள்ளிட்ட அத்தனைப்டைப்பாளிகளுமே தாங்கள் பெற்ற அணிமுறைப் பட்டங்கள் அனைத்திற்கும் காரணம் நூலகங்களே அடித்தளங்கள் என்று சொல்ல மறந்ததில்லை.

இன்று சில பகுதிகளில் அறிவொளி இயக்க அமைப்பாளர்கள், தாங்கள் கற்பித்தலின் போது கற்பவரிடம் ''நீங்கள் மேலும் நன்றாகப் படிக்க வேண்டுமானால் பக்கத்திலுள்ள நூலகத்திற்குச் செல்லுங்கள்'' என்று ஆற்றுப்படுத்தி அனுப்புவதாகத் தெரிகிறது. இது ஒருவகை அறிவொளி ஆற்றுப்படை !

இன்று நூலகம் அமைந்துள்ள பகுதிகளில் முன்புபோல்'' பொறுப்புக் கையெழுத்துக்கு அரசிதழ் பதவி பெற்ற

நூல்கள் . . .

அறிவின் பிரதிபலிப்பு
நூல்கள்!
சிந்தனையின்
வெளிக் கொணர்வு
நூல்கள்!
அனுபவத்தின் விடை
நூல்கள்!
சிந்தனையின்
திறத்தால்
அறிவின் முயற்சியால்
அனுபவத்தின் முடிவாக
உருவடுப்பவை
நூல்கள்!

அலுவலர்தான் வேண்டும் என்றெல்லாம் இல்லை. அறிமுகப்படுத்துகிறவர் நூலகத்தில் தொடர்ந்து உறுப்பினராக இருந்தால் போதும் என்கிற அளவிற்கு விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன.

நான் நூலகத்தில் படித்ததால் வேலை வாய்ப்பை எளிதாகப்பெற முடிந்தது என்றும் தேர்வில் வெற்றி பெற முடிந்தது என்றும் பலர் பேசுகிறபோது, ''வந்தபொழுதில் பெரிதுவக்கும் தன்வாசகரைச்சான்றோன் எனக்கேட்ட நூலகர் போல்'' நெஞ்சம் பூரிக்கிறது. நூலகங்கள் ''குட்டிப்பல்கலைக் கழகங்கள்'' தாம் என்பதில்ஐயமில்லை. ஆசான் இல்லாமல் பாடங்களைப் போதிக்கும் ஒரே இடம் நூலகங்கள்தாம்.

எனவே நூலகப் பணி என்பது இறைவன் தந்த இன்பம். கற்பிக்கிற ஆசிரியர்களும், ஆட்டிப்படைக்கிற அதிகாரிகளும், அதிகாரம் செலுத்துகின்ற அரசியல்வாதிகளும் 'நம்மிடத்தில் தானே படிக்கவும், புத்தகம் பெறவும் வருகின்றனர், என்பதில் நூலகர்களுக்குத் தனி இன்பம்.

சரபோஜி நூலகம்

தற்பொழுது இந்த நூலகம் சரஸ்வதி மகால் நூலகம் என வழங்கப்பட்டு வருகிறது. 'தஞ்சையை ஆண்ட இரண்டாம் சரபோஜி (கி.பி 1798 - 1833) மன்னர் ஒரு கலைஞர். தனக்கு முன்னால் ஆண்ட நாயக்க மன்னர்கள் திரட்டிய நூல்களையெல்லாம் தொகுத்துச் செப்பம் செய்தார். வெளிநாட்டிலிருந்து பல்வேறு துறைகளில் உள்ள சிறப்பான நூல்களையெல்லாம் வரவழைத்தார். பழஞ்சுவடிகளையெல்லாம் - ஓலைச் சுவடிகளை யெல்லாம் - காகிதக்கையெழுத்துச் சுவடிகளையெல்லாம் சேகரித்து (1820 - ல்) சரஸ்வதி மகால் நூலகம் என்ற பெயரில் தமிழ்நாட்டில் தஞ்சை நகரில் ஒரு நூலகத்தைத் தொடங்கினார். இன்று இந்த நூலகம் உலகம் முழுவதும் உள்ள நூலகங்களில் எல்லாம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த நூலகமாகத் திகழ்ந்து வருகிறது. இந்த நூலகத்தில் சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், தமிழ், மராத்தி, வங்காளி, காஷ்மீர், ஒரியா, பஞ்சாபி, மலையாளம், உருது, ஆங்கிலம், பிரெஞ்சு எனப்பல மொழிகளிலும் வெளியான ஆயிரக்கணக்கான நூல்களும், ஏடுகளும் இடம் பெற்று உள்ளன. அவற்றுள் மருத்துவ நூல்கள் பெரும் பான்மையான இடத்தைப் பெறுகின்றன. இந்த நூலகத்தில் மிகப் பழமையான நூல்களை எல்லாம் நவீன் இராசாயன முறையில் பாதுகாத்து வருவது சிறப்புக்குரியதாகும்.

இந்த நூலகம், இன்று மத்திய அரசால் முக்கிய தேசிய நிறுவனங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வருங்காலத்தில் பொதுநூலகர்

டாக்டர் மலையமான் (நா. இராஜகோபாலன்)
மேனாள் தலைமைச் செயலக நூலகர்

சில ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்தில் நூலகர் மாநாடு ஒன்று நடைபெற்றது. அது, பொது நூலகத்துறையின் வருங்காலம் பற்றிச் சிந்திக்கும் எண்ணத்தில் அமைந்தது. அதில் முக்கிய பொது நூலகர்கள் பலர் கலந்து கொண்டனர். இராபர்ட் ஓல்சன் (Robert Olson) என்ற வருநாள் இயலினர் (Futurist) அம்மாநாட்டில் பங்கு கொண்டார். அவர் நூலகர்களிடம் இரண்டு வேண்டு கோள்களை விடுத்தார். நூலகர்கள் தம் துறையின் எதிர்காலம் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் நம்பிக்கை களைக் குறித்துத் தரும்படி அவர் கோரினார். அவர்கள் அதன்படியே செய்தனர். அவற்றில் முக்கியமானவை வருமாறு :

1. பொது நூலகங்கள், வருங்காலத் தேவைக்கு ஏற்றபடி தம்மைத் திறமையாக அமைத்துக் கொள்ளும்.
2. நூலகங்கள், சமுதாயத்தின் தகவல் அறிவிப்பு மையங்களாக ஏற்றுக் கொள்ளப்படும்.
3. பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு, வியக்கத்தக்க முறையில் அவை செயல்படும்.
4. படைப்பாளிகள், நூலகங்களைத் தம் வாழ்நாள் முழுதும், முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வார்கள்.
5. சமுதாயத்தில் வசதி இல்லாத அடித்தள மக்களுக்கும் தொண்டு புரிவதற்காக, நூலகங்கள் மிகுந்த முயற்சியை மேற்கொள்ளும்.
6. சரியான நிர்வாகம், பொருளாதார வளம் ஆகியவற்றைப்பெற்று நூலகங்கள், பொதுமக்களுக்குப் பெருந்தொண்டு புரியும்.

ஓல்சனின் இரண்டாவது வேண்டுகோள், எதிர்காலம் பற்றிய, மிகவும் மோசமான தங்கள் பயங்களை நூலகர்கள் பதிவு செய் வேண்டும் என்பது. அதன்படி பதிவான கருத்துகளில் முக்கியமானவை வருமாறு :

1. நூலகத் தலைமை எதிர்காலச் சவால்களைச் சமாளிப்பதற்கும் போதுமான சக்தி இல்லாமல் போகலாம்.
2. தனியார் நூலகங்கள் அதிகரிக்கலாம்.
3. வசதி பெற்றோருக்கும் இல்லா தோருக்கும் இடையில் உள்ள இடைவெளி அதிகமாகிவிடலாம்.
4. அரசு இயந்திரத்தின் கவனிக்கப் படாத மிகச் சிறிய உறுப்பாக நூலகங்கள் அமைந்துவிடலாம்.

இருளில் மூழ்கிவிடும்

நூல் இல்லையானால் ஆண்டவன் பேசுவதில்லை; நீதி முடங்கி விடும்; அறிவியல் அசையாமல் நின்றுவிடும்; தத்துவம் முடமாகிவிடும்; கருத்துரைகள் ஊமையாகிவிடும்; சரியாகச் சொன்னால் அனைத்துமே இருளில் மூழ்கி விடும்.

- பிராத்தலோனி

5. மற்ற நூலகங்களுடன் இணைந்து செயல்படும் தகவல் பங்கீட்டுமுறை மறைந்துவிடலாம்.

மேற்சொன்ன நம்பிக்கைகளும் பயங்களும் நம் நாட்டிற்கும் பொருந்தும். இவற்றில் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளக் கூடியவையே.

வருங்காலத்தில் பொது நூலகர்கள், புத்தகங்களை எடுத்துக் கொடுக்கும் சாதாரண அலுவலராக மட்டும் இருக்க முடியாது. அவர்கள் உயிருள்ள நடமாடும் அறிவுக் களஞ்சியமாக இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிடும். நூலகர்கள் தகவல் கலந்துரைஞராக (Consultants) மாற வேண்டிய நிலைமையும் உருவாகும். அறிவுப்பெருக்கம் கொண்ட இன்றைய நிலையில், தகவல்கள் இரு வகைகளாக இருக்கின்றன. ஒன்று, ஒரு துறை பற்றிய, அளவுக்கு அதிகமான விரிவான தகவல்கள். மற்றொன்று, சிக்கல் பிணைப்புண்ட (Complexity) தகவல்கள். இந்த இருநிலைகளும் நூலகரை மார்புடன் தழுவிக் கொள்ளத் துடித்துக் கொண்டிருக்கின்றன. பல தரப்பட்ட அறிவின் வளர்ச்சிநிலைகளும், அறிவியலின் அற்புத விளைவுகளும் நூலகரின் அதாவது தகவல் கலந்துரைஞரின் - கையைப் பிடித்திழுக்கக் காத்துக் கொண்டிருக் கின்றன. இந்நிலைமையில் கணினி (Computer) அவருக்குத் துணைபுரிய முன்வரும். உலகத்தகவல் வலை (Internet) போன்றவை, உதவிபுரியப் புன் முறுவலுடன் முன்வரும். தொலைத் தொடர்புச் சாதனங்கள் (Telecomunication) அவருக்குப்பின் பலமாகத் தோள் கொடுக்கும். இவை, சிற்றூர் நூலகருடன் இன்று உறவு கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் விரைவில் இவற்றின் துணையை அவர்கள் நாடவேண்டியிருக்கும். எனவே,

''எதிரதாய்க் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்.'' (கு. 429)

என்ற திருக்குறளை இன்றே நினைவு படுத்திக் கொள்ள வேண்டியது அவர்களின் இன்றியமையாக் கடமை யாகும்.

இதற்கு நூலகர்கள் என்ன செய்ய வேண்டும்? அவர்கள் தகவல் அறிவிப்புச் சாதனங்களைப் பற்றித் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். காற்றுப் புகாத இடத்திலும் இன்று, கணினி புகத் தொடங்கியுள்ளது. எனவே, கணினி பற்றிய அறிவும் பயிற்சியும் பெற்றுக் கொள்வது முற்றிலும் தகுதியானது. தான்மட்டுமின்றித் தன் உதவியாளர் களையும், இத்துறைகளில் அவர்கள் தயார்

செய்யும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

வருங்காலத்தில் நூலகங்களைப் பயன்படுத்துவோர் கீழ்க்கண்ட ஐந்து வகையினராயிருப்பர் என்று ஆராய்ச்சி அறிவிக்கின்றது :

1. தம்முடைய பொது நன்மைக்காக - இன்பம் பெறுவதற்காகப் படிக்க வருவோர்.
2. பட்டத்திற்காக, (அ) செய்தொழிலுக் காக ஆய்வு செய்வோர்.
3. தம்முன்னேற்றத்திற்காக நூலகத்தை ஒரு கல்வி நிறுவனமாகக் கருதிப் படிக்க வருவோர்.
4. பொழுதுபோக்குவதற்கு வேறு இடம் இல்லாமையால் நூலகத்திற்கு வருவோர் (வேலைவாய்ப்பு அற்ற வரையும் இப்பிரிவில் அடக்கிக் கொள்ளலாம்)
5. கல்விநிலையத்தை விட்ட நிலையில் சாதகமான சூழலைத் தேடிப் படிக்கவும், ஒத்தவருடன் கலந்து பழகவும் வருவோர்.

இவர்களைப் பற்றியும் நூலகர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இவர்களுக்கு ஏற்றபடி உதவி புரிதலும் வேண்டும். நூலகத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதனின் இரு நூலக விதிகளை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளுதல் வேண்டும் (அவை ஒவ்வொரு வாசகருக்கும் உரியநூல், ஒவ்வொரு நூலுக்கும் ஏற்ற வாசகர் என்பவை).

'மேசன்' (Mason) என்ற அறிஞர் பொது நூலகத் துறைபற்றிக் கூறிய எதிர்காலக் கருத்துக் கணிப்பு (Forecast) வருமாறு :

1. வருங்காலத்தில் நூலகத்திலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அது மதிப்புப் பெறாது. அது வழங்கும் தகவல் அறிவிப்புப் பணியைப் பொறுத்தே அது மதிக்கப்படும்.
2. இன்னும் 10 ஆண்டுகளில் நூலகத்திற்குள் இதுவரை வராத தனிநபர்களே, நூலகத்தொண்டில் அரைப்பாகத்தைப் பயன்படுத்திக் கொள்வார்கள்.
3. வெள்ளம் போல் பெருகிவரும் தகவல்களைத் திரட்டித் தேவைப்படு வோருக்கு அவற்றைத்தரும் சிறந்த அமைப்பு முறையில் நூலகம் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளும்.
4. இவ்வித அமைப்பு முறையில் சிறிய நூலகங்களும் அதிகமான பங்கைப் பெறும்.
5. இதற்கு ஏற்றபடி தொழில் நுட்ப அறிவினராக, நூலகப் பணியாளர்கள் தங்களை உயர்த்திக் கொள்வார்கள்.
6. இத்தகைய உயர்நிலைத் தொண்டுக்குக் கட்டணம் விதிக்கப்படலாம்.

> **நூலும் – பலகணியும்**
>
> **நூல்கள் இல்லாத இல்லம் பலகணிகள் இல்லாத ஓர் அறையைப் போன்றதாகும்.**
>
> – ஆசிரியர் மேன்

7. ''தகவல் சிறப்பு அலுவலர்'' என்பன போன்ற புதுவகைப் பதவிகள், நூலகத் துறையில் இடம் பெறும்.

8. புத்தகம் வழங்குதலும் நூலகத்தின் முக்கியப் பணியாகத் தொடர்ந்தி ருக்கும்.

9. பொது நூலகத்துறை, சிறந்த வளர்ச்சியைப் பெற்றுப் பெருமை அடையும். இக்கருத்துகள் சிந்திக்கத் தக்கவை.

இந்த அறிவியல் யுகத்தில், கணினி, மனிந்திரம் (Robot) போன்ற அற்புதக் கருவிகள் இன்று, அரும்பணி புரிவதற்குக் காத்துக் கொண்டிருக் கின்றன. இவை, நுட்பமான அறிவும், திறமான ஆற்றலும் கொண்டவை. ஆனாலும், இவற்றை இயக்குவதற்கு மனிதன் - நூலகர் தேவைப்படுகிறார். அவற்றை வேலை வாங்குவதற்கு ஏற்றபடி, அவர் தம்மை உயர்த்திக் கொள்ள வேண்டும். மக்கள் பெருக்கம் பொருளாதாரச் செழுமை, சமுதாயச் சிக்கல்கள், பண்பாட்டுப் பரிமாற்றங்கள் நேரச் சுருக்கம், விரைவுத்தன்மை, அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவை இன்று பொது நூலகரைச் சுற்றி வளைத்து முற்றுகை இடுகின்றன. அவர் கொஞ்சம் தயங்கிவிட்டாலும், இவற்றைச் சமாளிக்க இயலாமல் சரிந்து விடுவார்.

குளத்து நீரின் மிகுதிக்கு ஏற்பத் தன் தண்டை உயர்த்தி தாமரை தண்ணீருக்கு மேலே பூவைக் காட்டு கிறது. பொது நூலகரும் கடமை வெள்ளத்திற்கு மேலே தன்னை உயர்த்திப் பணி என்னும் மலர், மக்கள் கண்களில் படும்படி முயற்சி செய்ய வேண்டும். மலரின் மணம் பரவுதல் போல, அவருடைய ஆற்றலும் மணம் வீசும். மலரைத் தேடித் தேனீக்கள் வருவதைப் போல, அவரைத் தேடி, அறிவுப் பசியினர் வருவார்கள், அப்போது, மக்களுக்கு நன்மை சேரும்; அவருடைய பெருமையைக் காலமும் கூறும்.

ஜனநாயகத்துணைவன் - நூலகமே !

உலக விவகாரங்களையும், அரசியல் நிகழ்ச்சிகளையும், அறிவியல் துறையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றங்களையும் நாட்டு மக்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலொழிய மக்களுக்கு வாக்குரிமை அளித்ததின் முழுப்பயனையும் பெறமுடியாது. இந்தத் துறையில் முழுவெற்றி பெறுவதற்குத் துணைபுரிகின்ற ஒரே நிலையம் பொதுநூலகமே.

- ஜி. விக்டர் இமானுவேல்



காந்தி மண்டப நூலகம்

கோ. ஜெகதீசன், பி.ஏ., பி.எல்.ஐ.எஸ்.,
நூலக ஆய்வாளர், சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழு

நமது தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகளின் நூலகம் சென்னையில் உள்ள காந்தி மண்டப வளாகத்தில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையினரால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்த நூலகம் அண்ணலின் பிறந்த நாளான அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி 1984 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

உலக சரித்திரத்தில் எத்தனையோ அறிஞர் பெருமக்கள் சித்தாந்தங்களையும், சிந்தனைகளையும் நமக்காகத் தோற்றுவித்து விட்டுச் சென்றுள்ளார்கள். 'பிளேட்டோ' சுதந்திரத்தின் அவசியத்தை விளக்கினார். 'சாக்ரடீஸ்' அறிவின் அடிப்படையை வலியுறுத்தினார். 'அரிஸ்டாட்டில்' ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தைப் போதித்தார். 'மார்க்ஸ்' பொருளாதாரச் சுதந்திரத்தின் அவசியத்தையும், அறிவின் மேன்மையையும், ஒழுக்கத்தின் உயர்வையும், சமுதாயத்தின் நலத்தையும் வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை நலன்களையும் ஒன்றாக இணைத்து ஒரு மாபெரும் இயக்கமாக ஆரம்பித்தார். அது தான் காந்தீயம்.

மகாத்மா அவர்கள் 'ரகுபதி ராகவ' (சத்தியமே கடவுள்) என்ற புத்தகத்தில் 'காந்தீயம் பற்றி மிக அழகாகக் குறிப்பிட்டிருக்கின்றார். காந்தீயம் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் அதிக அளவில் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

''காந்தீயம் என்று ஒரு தனி மார்க்கம் இல்லை. என்னுடைய பெயரில் ஒரு தனி மார்க்கத்தை விட்டுப்போக நான் விரும்பவில்லை. ஒரு புது சமயத்தையோ, கொள்கையையோ நான் உபதேசிக்கவில்லை. சாதாரணமாக இருந்து வந்த, பெரியோர்கள் கண்ட பழைய உண்மைகளைத், தினசரி வாழ்க்கையிலும், செய்யும் காரியங்களிலும் கடைப்பிடித்துப் பார்க்கலாம் என்பதுதான் என்னுடைய முயற்சி'' என்று காந்தீயத்தைப் பற்றி விளக்குகின்றார் காந்தியடிகள்

'காந்தீயம் படிக்கும் பட்டதாரி மாணவர்களுக்கு இந்நூலகம் ஒரு வரப்பிரசாதம் ஆகும். அவர்களுக்கு இந்நூலகத்தில் உள்ள விலை மதிக்க முடியாத நூல்கள் ஒரு பொற்குவை போன்றதாகும்

காந்தியடிகள் எழுதிய 'அகிம்சை-தைரியசாலியின் ஆயுதம்' (Non-violence - weapon of the Brave) என்ற நூல் இன்றைய இளைய தலைமுறையினர் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூலாகும்.

கத்தியின்றி, இரத்தமின்றி யுத்தமொன்றை நடத்திச் சுதந்திரத்தை அகிம்சை முறையில் பெற்றுத் தந்தார். இன்றைய சுதந்திர இந்தியா சுதந்திரம் பெற்றதின் பொன் விழாவைக் கொண்டாடுகிறது. இதற்கெல்லாம் அவர் போதித்த அகிம்சையை இந்தியராகிய நாம் ஒவ்வொருவரும் போற்றிப் பெருமைப்படவேண்டும். அண்ணலின் அகிம்சா தத்துவத்தை அனைவரும் அறிந்து கொள்ளும்படி இங்கு ஏராளமான புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அவருக்கு நன்றி கூறும் வகையில் இந்நூலகத்தில் 'கைராட்டினம்' அமைந்திருப்பது, கிராம முன்னேற்றத்திற்காக அண்ணலால் அறிமுகப் படுத்தப்பட்ட கதர், அவரது அகிம்சைப் போராட்டத்தில் ஓர் ஆயுதமாக மாறி நம் நாட்டிற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தது என்பதை நாம் நினைவில் கொள்வதோடு மட்டுமல்லாமல் தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் எண்ணி, எண்ணிப் பெருமைகொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

நம் நாட்டில் இன்று 'தீண்டாமை' என்னும் நோய் பரவிக் கொண்டிருப்பதை நம்மால் காணமுடிகிறது. காந்தியடிகள் தீண்டாமையை இந்துமத்தின் ஒரு களங்கம் என்றே கருதினார். இந்தக் களங்கம் முற்றிலுமாக அகற்றப்பட வேண்டுமென்று அவர் போராடினார்.

அதன் விளைவாக அவரால் தோற்றுவிக்கப்பட்ட பத்திரிகைதான் 'அரிஜன்' ஆகும். 'தீண்டாமை ஒழிப்புப் பற்றி அவர் செய்த பிரசாரங்களும், எழுதிய புத்தகங்களும் மற்றும் ''அரிஜன்'' நாளிதழ்களும் இந்நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மகாத்மா காந்தியடிகள் ''தீண்டத்தகாதவர்கள் கடவுளின் குழந்தைகள்'' என்பதை இந்தியர்களுக்கு



உணர்த்தி அவர்களுக்கு 'அரிஜனங்கள்'' எனறு பெயரிட்டார். அரிஜனங்களின் மேம்பாட்டிற்காக அவர் நிறுவிய 'அகில இந்திய ஹரிஜன் சேவா சங்கத்தின் புகைப்படமும் இந்நூலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு சந்தர்ப்பத்தில் டர்பனிலிருந்து கல்கத்தாவுக்குக் கப்பலில் பிரயாணம் செய்கையில் கப்பலில் மருத்துவர் வைத்திருந்த ''தமிழ் சுயபோதினி'' (Tamil - Self Teacher) என்ற பத்திரிகையை வாங்கி வாசிக்கத் தொடங்கிவிட்டார், காந்திஜி. ''கொஞ்சம் கொஞ்சம் புரிந்தது. அதன்பின் தொடர்ந்து கற்க ஆசான் அகப்படவில்லை. சிறிதளவே கற்றேன். ஆனால் தமிழில் பேசத் தெரிந்து கொள்ள முடியவில்லை. கற்ற சொற்பமும் பழக்கமின்மையால் மங்கிப் போய்விட்டது. தமிழ் தொரியாமற் போனது எத்தனை இழப்பு என்று இன்று உணர்கிறேன்'', என்று தமது 'சுயசரிதையில்' கூறியுள்ளார்.

இந்நூலகத்தின் கரும்பலகையில் ''தமிழர்களைப் போல வெறெந்தச் சமூகத்தினரும் தென்னாப்பிரிக்கச் சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. எனவே வேறு ஒரு காரணத்திறகாக இல்லாவிடினும் இதற்காகவே நான் அவர்களுடைய தமிழ் நூல்களை முனைந்து படிக்க வேண்டுமெனக் கருதினேன்; என் நன்றியுணர்வைக் காட்ட இது ஒரு வழியென உணர்ந்தேன். ஆதலால் தான் அங்கிருந்த கடைசி மாதத்தில் அவர்களுடைய மொழியைக் கவனத்துடன் படிக்கத் தொடங்கினேன். படிக்கப் படிக்க அம்மொழியின் சிறப்புகளை நான் உணரலானேன். அஃதொரு சுவைமிக்க இனிமையான மொழி'' என்று காந்தியடிகள் கூறியதாகக் குறிக்கப் பட்டுள்ளது. இதன் மூலம் அண்ணல் தமிழரின் பால் கொண்டிருந்த தனி அன்பும் பரிவும் நன்கு வெளிப்படுகின்றது.

கப்பல்கள்

காலக் கடலைக்
கடந்து செல்லும்
கப்பல்களே
நூல்கள்!

- பேக்கன்

காந்தியடிகள் சுப்பிரமணி ஆச்சாரியாருக்குத் தமிழில் எழுதிய கடிதத்தை இந்நூலகத்தில் பார்வைக்கு வைத்திருப்பது இங்குக் குறிப்பிட வேண்டியது, மிக முக்கியமானதாகும்.

காந்தியடிகளைக் கவர்ந்த தமிழ்நாட்டு வீரர்கள் பலர். அவர்களைப்

பற்றிய முழு விவரங்களும் இந்நூலகத்தில் மூன்று தொகுப்புகளாக வைக்கப் பட்டுள்ளன. அவர்களில் முக்கிய மானவர்களின் புகைப்படங்களும் பார்வைக்கு வைக்கப் பட்டிருப்பது நம் அனைவரின் கவனத்தையும் கவருவதாக அமைந்திருக்கிறது.

காந்திஜியின் தலைமையில் நிகழ்ந்த தென்னாப்பிரிக்க இந்தியரின் சாத்வீகப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டு 1907 ஆம் ஆண்டில் முதல் அணியிலேயே சிறை சென்று காந்தியின் மனதை ஈர்த்தவர்களில் 'தம்பி நாயுடு' முதன்மையானவர். தென்னாப்பிரிக் காவில் இரண்டே இரண்டு பேரைத் தலைசிறந்த 'சத்தியாக்கிரகிகள்' எனக் காந்திஜி குறிப்பிடுவதுண்டு. ஒருவர் தம்பி நாயுடு. மற்றொருவர் 'சோராப்ஜி' எனும் பாரிஸ்காரர். இவர்களின் புகைப்படங்களும் இந்த நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இந்திய போராட்டத்தின் தொடக்க காலத்திலிருந்தே அதில் பங்கு கொண்டு வந்தவர் 'பி.கே. நாயுடு'. அவர் 1908 ஜனவரியில் ஆசிய பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவுச்சான்று பெறாத குற்றத்திற்காகக் காந்தியுடன் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அவருடன் சிறை சென்றவர்.

'வீராங்கனை வள்ளியம்மாளைப் போன்று அண்ணல் காந்தியடிகளின் உள்ளத்தைத் தொட்டவர்கள் வெகு சிலரே எனலாம். அவரது பொது வாழ்வின் ஆரம்ப காலத்திலேயே ஓர் இளம் பெண் அறப் போராட்டத்தில் குதித்து உயிரை இழந்தது, இதற்குக் காரணமாக இருக்கலாம். இந்நூலகத்தில் வள்ளியம்மாளின் புகைப்படமும், அவரது அஞ்சா நெஞ்சத்தையும், தியாகத்தையும் நினைவு கூர்ந்து பல்வேறு பொதுக் கூட்டங்களில் காந்திஜி மனமுருகிப் பேசியதைப் பற்றிய புத்தகங்களும் வைக்கப்பட்டுள்ளன.

இன்னும் பல தமிழர்களின் புகைப்படங்களும், கந்தியடிகள் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் புத்தகங்களும் ஏராளமாக உள்ளன. இவர்களில் திரு. நாகப்பன், திரு. ஏ. நாராயணசாமி, திரு. ஜி.ஏ. நடேசன், திரு. ஜே.சி. குமரப்பா, திரு. அரியநாயகம், திரு. ஜி. இராமச்சந்திரன், திரு. பி.எஸ். சீனிவாச சாஸ்திரியார் ஆகியோர் முக்கியமானவர்கள் ஆவர்.

இராஜாஜி, நேரு, இராஜேந்திர பிரசாத், ஆகியோருடன் காந்தியடிகள் இருக்கும் புகைப்படங்களும் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

"India's Struggle for independence - Visual's and Documents" என்ற புத்தகம் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதன்

மூலம் விடுதலைக்காகப் போராடிய வீரர்களும், அவர்களுடைய சுயசரிதை களும் நமக்கு நன்கு புலனாகும்.

அடையாற்றிலுள்ள காந்தி மண்டப வளாகத்தில் காந்தி நூலகம் மிக அழகான முறையில், அமைதியான சுற்றுப்புறச் சூழ்நிலையில் தமிழக அரசின் பொது நூலகத்துறையினரால் அமைக்கப் பட்டிருப்பது தமிழகத்திற்கே ஒரு பெருமைக்குரியதாக விளங்குகிறது. இந்தக் காந்தி நூலகத்தில் காந்தி எழுதிய நூல்கள், காந்திஜியைப் பற்றிப் பலராலும் எழுதப்பட்ட நூல்கள், விடுதலை வீரர்கள் பற்றிய நூல்கள் என ஏறத்தாழ 6000 நூல்கள் இடம் பெற்றுள்ளன.

அனைவரையும் கவரும் வகையில் அழகான முறையில் அடுக்கி வைக்கப் பட்டுள்ள நூல்களை, எவர் வேண்டுமென்றாலும் வந்து அமர்ந்து படிக்கும் வகையில், கட்டடத்தின் அமைப்பு மிகச் சிறப்பானதாக அமைக்கப்பட்டு உள்ளது. இங்கு நூல்கள் இரவலுக்கு வழங்கப்படுவது இல்லை, எவரையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வதும் இல்லை.

காந்திஜியைப் பற்றி அனைத்து விவரங்களையும் அறிந்து கொள்ள - பாமர மக்களுக்கும், ஆராய்ச்சி மாணவர் களுக்கும் ஒரே இடத்தில் குறிப்பாகக் காந்திமண்டப வளாகத்தில் ஒரு நூலகத்தை அமைத்துத் தந்து, அதனை நல்லமுறையில் பேணிப் பாதுகாத்துப் பராமரித்து வருகின்ற பொது நூலகத்துறை யினர் மிகவும் பாராட்டுக் குரியவர்கள். அமைதியை நாடி கோவிலுக்குச் செல்லுவது போல் காந்திமகானின் நூலகத்திற்குச் சென்று அவரது நூல்களைப் படித்து நாம் அனைவரும் பயன் பெறுவோமாக !

வாழ்க காந்தீயம் ! வளர்க அகிம்சை!!

நான், நூல் நிலையங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிப்பவன். . . . . அமெரிக்காவில் நூலகத்துறையில் மிகச் சிறப்பான தொண்டுகள் நடைபெற்றுள்ளன. நூல்கள் ஓர் அளப்பரிய ஆற்றல் வாய்ந்த பெரும் சக்தி. (Books Represent a treamendous force)
- லெனின்

நூலகமே உற்ற துணை

(''மணப்பாறை மாடு கட்டி, மாயாவரம் ஏரு பூட்டி''
என்ற பாடலின் மெட்டு)

விருத்தம்

அறிவை வளர்த்திடும் நூலகமடா - நாம
அனுதினம் கற்று உயர்வோமடா
ஆற்றலைப் பெருக்கிடச் செல்பவர்க்கு - எல்லா
நூல்களையும் தந்துதவி செய்யுமடா . . . செய்யுமடா . . . .

பாட்டு

நல்ல நூல்கள் நாளும் படிக்க
அல்லும் பகலும் அறிவை வளர்க்க
நிறைய நூல்கள் படிக்க வேண்டும் சின்னக்கண்ணு - அதுக்கு
நூலகந்தான் உற்ற துணை செல்லக்கண்ணு ! (நல்லநூல்கள்)

அனுதினமும் எழுந்தவுடன்
அன்றாடம் செய்தி படிக்க
நூலகத்தை நாடிச்செல்லு சின்னக்கண்ணு - நீயும்
நாட்டு நடப்பை அறிந்து கொள்ளு செல்லக்கண்ணு ! (நல்லநூல்கள்)

சிறந்த நூல்கள் தேடிப் படிச்சு
தெரிந்த கருத்தை மனசில் வச்சு
ஆற்றலையும் வளர்த்திடுவாய் சின்னக்கண்ணு - அதுக்கு
நூலகமே உற்ற துணை செல்லக்கண்ணு ! (நல்லநூல்கள்)

கற்ற கல்வி பயன் பெறவே
காலமெல்லாம் வளம் பெறவே
நூலகத்தில் உறுப்பினராய் சின்னக்கண்ணு - நீயும்
சேர்ந்து வாழ்வில் உயர்ந்திடுவாய் செல்லக்கண்ணு ! (நல்லநூல்கள்)

எடுத்துச் செல்லும் நூல்களெல்லாம்
சேதமின்றிப் படித்து வந்தால்
அனைவருக்கும் பயன்படுமே சின்னக்கண்ணு - நூல்கள்
அதிகநாள்கள் நிலைத்திடுமே செல்லக்கண்ணு ! (நல்ல நூல்கள்)

- ''திருமணி''



நூலகம் ஒரு கோவில்

செங்குட்டுவன்
செயலாளர், பாவேந்தர் இளம் எழுத்தாளர் பேரவை

நூலகம் என்பது ஒரு கோவிலுக்கு நிகரான இடமாகும். அறிவுக்கு விருந்தளிக்கக்கூடிய அற்புதப் பெட்டகம் தான் நூலகம். பசியோடு இருப்பவர்களுக்கு அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக அறிவு எனும் உணவைத் தரக்கூடிய இடம்தான் நூலகம். அறிவு வளர்ச்சியின் அவசரத் தேவையைக் குறிப்பிடும் வகையில், ''கோவிலுக்கு நிறைய பணமும், சொத்துகளும் உள்ளன. அதனால் கல்வி வளர்ச்சிக்கும், அறிவு வளர்ச்சிக்கும் உங்களது பணத்தைக் கொடுத்து உதவுங்கள்'' என்று கல்விக் கண்திறந்த காமராசர் அவர்கள் கூறினார்கள். அத்தகைய சிறப்பு வாய்ந்த அறிவைத்தரக்கூடிய அற்புதமான இடம்தான் நூலகம் ஆகும். அதனால்தான் நூலகத்தைக் கோவில் என்கிறோம்.

எல்லா மதமும் ஒன்றே :

நூலகத்தைப் பொறுத்தவரை அனைத்து மதத்தவரையும் ஒன்றாகக் கருதக்கூடிய ஓர் அற்புதமான இடமாகும். இங்கு உயர்ந்தவர், தாழ்ந்தவர், செல்வந்தர், ஏழை என்ற பாகுபாடு இல்லை. மனிதனுடைய வெற்றிக்கு வழி ஒற்றுமையாகும். அந்த ஒற்றுமையை, மனித நேயத்தை உருவாக்குகின்ற இடம் நூலகம் ஆகும்.

அறிவு வளர்ச்சியின் முன்றேற்றத்திற்கு நூலகம்

மனிதன் ஆதிகாலத்தில் எப்படிப் பிறந்தான், எப்படி வாழ்ந்தான், அறிவு வளர்ச்சியடைய என்னென்ன முறை களைக் கையாண்டான். இன்றைய தினம் மனிதன் எப்படிப் பிறக்கிறான் (சோதனைக் குழாயின் மூலம்) எப்படியெல்லாம் நாகரிகமாக வாழ்கிற ான். எவ்விதமெல்லாம் அறிவு வளர்ச்சி பெற்று எந்தத்துறையை எடுத்தாலும் கம்யூட்டர் என்கின்ற நிலைக்கு உயர்த்தப் பட்டுள்ளான் என்பதை நினைக்கும் பொழுது இவ்வளவு உயர்வுக்கும் காரணம் அவனது அறிவு வளர்ச்சியே என்பது புலனாகும். இந்த அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக, சிறப்பாக இருந்தது அற்புதமான நூலகம் ஆகும்.

அழிக்க முடியாதது கல்வி

கல்வி என்னும் அறிவுச் செல்வம்

எத்தகைய சக்தி படைத்தவனாலும் அழிக்க முடியாததாகும். அதைக் குறிப்பிடும் போதுதான் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று சொல்லப்படும் ஐந்து வகைகளையும் ஆராய்ந்து அறியவல்ல வனுடைய அறிவுத்திற னில்தான் இவ்வுலகமே உள்ளது என்று வள்ளுவப் பெருந்தகை குறிப்பிடுகிறார். அறிவுடையவர் துன்பத்தில் சிக்கினாலும் அத்துன்பத்தைத் தீர்ப்பதற்காக ஓர் இழிவான செயலைச் செய்ய மாட்டார்கள் என்றும் கூறினார்.

நூலகம் இல்லாத ஊரே இல்லை

கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது அக்காலப் பழமொழியாகும். ஆனால் அதை மெய்ப்பிக்கவே நூலகம் எனும் கோவில், நகரங்கள் முதல் குக்கிராமங்கள் வரை உருவாக்கப்பட்டு மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. தந்தை பெரியார் அவர்கள் தமிழுக்காக, தமிழருக்காக, தமிழ்நாட்டுக்காகத்தம் வாழ்நாளை அர்ப்பணித்தார்கள். திருக்குறள் நூலை விற்பனை செய்தார். மனிதனுக்கு அறிவு வளர வேண்டும் என்பதற்காகத்தான் இச் செயல்களைச் செய்தார். மனிதனுடைய அறிவைப் பற்றிச் சிறிது நேரம் நினையுங்கள் எனவும் கூறினார்.

கலைக்கோவில்கள்

கல்வி அறிவு
இல்லாதவர்களுக்குக்
கல்வி அளிக்கும்
பள்ளிகளைப் போல,
மக்களுடைய
மன வளர்ச்சிக்காகப்
பொது அறிவைப் பெருக்கிப்
பொது நல உணர்வை வழங்கும்
கலைக் கோவில்களாகத்
திகழ்பவை
நூலகங்கள்!

நல்ல நூல்களைப் பரிசாகத் தாருங்கள்

நல்ல நூல்களைப், பயனளிக்கக் கூடிய நூல்களை மற்றவர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள். அது அவர்களுக்கு விருந்தளிக்கும்; உணவாகத் திகழும் அத்தோடு என்றும் அழிவில்லா நிலையில் இருக்கும். ஒவ்வொருவரும் தமது வீட்டில் புத்தகங்களைச் சேர்த்துவைக்கும் பழக்கத்தைக் கடைப்பிடியுங்கள். அழிவுப்பாதைக்குக் கொண்டு செல்லும் சினிமா, போதைப் பொருள் போன்ற வைகளுக்குச் செலவிடப்படும் நிலையை மாற்றுங்கள். அறிவு வளர்ச்சிபெற

என்னென்ன செய்யலாம் என முயற்சி செய்யுங்கள். வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.

நூலகம் ஒரு கோவில் என்பது மிகவும் பொருத்தமான கருத்தாகும்.
''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''.
என வள்ளுவர் கூறினார். அதேபோல டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், ''புத்தங்கள் வாசிக்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொள்ள அவசியம் நூலகம் செல்லுங்கள்'' என வலியுறுத்தினார். நூலகம் செல்வோம்; அறிவுக்கு வலுவூட்டுவோம்; வாழ்வுக்கு வளம் சேர்ப்போம் !

வாழ்க நூலகம் ! வளர்க அறிவுச் செல்வம் !!

அச்சகம், நூல் பதிவுச் சட்டம்

நூலக வளர்ச்சிக்கு அடிப்படையானவை நூல்களாகும். அக்காலத்தில் ஓரள விற்கு நூல்கள் வெளியாகியிருந்தும் அவை முறைப்படிப் பாதுகாத்து வைக்கப்படவில்லை. இதனை உணர்ந்த அரசு 1867 - ஆம் ஆண்டில் அச்சகம் நூல் பதிவுச் சட்டத்தை இயற்றியது. (Press and Registration of Books Act XXV 1867).

நூல், பருவ ஏடு ஒப்படைக்கும் சட்டம் 1954 - 56

இந்திய தேசிய நூலகத்தில் 1958 - ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் வெளியான நூல்கள் அனைத்தும் இடம் பெறுவதற்குக் காரணமாய் அமைந்தது இந்திய அரசு 1954 ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாள் 'நூல் ஒப்படைக்கும் சட்டம்' (1954) Delivery of Books (Public Libraries Act 1954) எனப் புதிதாய்க் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டமேயாகும்.

இந்தச் சட்டம் மேலும் திருத்தப்பட்டுப் பருவ ஏடுகளையும் இணைத்து, 1956 - இல் அரசு புதிய சட்டத்தை இயற்றியது. இச் சட்டத்தின்படி, நூல் வெளியீட்டாளர்கள், தாங்கள் வெளியிடும் நூல்கள் யாவற்றிலும் ஒவ்வொரு படியைக் கீழ்க் கண்ட நான்கு தேசிய நூல் நிலையங்களுக்கு உரிய விவரங்களுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(1) தேசிய நூலகம், கல்கத்தா

(2) மத்திய நூலகம் (Town Hall), மும்பாய்

(3) கன்னிமாரா பொது நூலகம், சென்னை

(4) தில்லி பொது நூலகம், தில்லி

இந்த நான்கு நூலகங்களுள் நம் சென்னையிலுள்ள கன்னிமாரா பொதுநூலகமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சமுதாயத்தை மேம்படுத்தும் குழந்தைகள் நூலகம்



கொ. செ. ஞானதேவ்
நூலகர்
தேவநேயப் பாவாணர் மாவட்ட மையநூலகம்,
சென்னை - 600 002.

''மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்,
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்பதுணர் வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச் சாலை,
புனிதமுற்று மக்கள் புதுவாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்''

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்று கண்ட கனவினை நனவாக்குவது போல் இன்று தமிழ்நாட்டில் பேரூர்கள், சிற்றூர்கள், மட்டுமல்லாமல் பட்டி, தொட்டிகளிலெல்லாம் பொது நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றின் மூலமாக மக்கள் அனைவரும் கல்வி வளர்ச்சி பெற்று அன்புநெறி காண்பதற்கும், அதன் வழியாக விரிந்த மனமும் பரந்த உள்ளமும் பெற்றுத் தனி மனிதத் தத்துவம் என்னும் இருளைப் போக்கி மக்கள் அனைவரும் ஒன்றே என்பது முதலான உயர்ந்த எண்ணங்களைப் பெறுவதற்கும் அறிவாலயங்களாக நூலகங்கள் திகழ்ந்து வருகின்றன.

இந்திய துணைக் கண்டத்திலேயே இன்று நன்மை கருதும் எப்பணியிலும் முன்னிற்கும் தமிழகம் பொது நூலக இயக்கத்திலும் முன்னோடியாகத் திகழ்வதில் வியப்பொன்றுமில்லை.

நாட்டு விடுதலை

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் நமது நாடு விடுதலை பெற்றது. நாம் பெற்ற விடுதலையோடு நமக்கு உரிமைகளும், கடமைகளும் வந்தன. அந்த உரிமையின் அடிப்படையில் மக்களுக்காக, மக்களால், மக்களே நடத்தும் மக்களாட்சி மலர்ந்தது.

நாட்டு மக்கள் அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் என்னும் உயர்ந்த எண்ணத்துடன் மத்திய அரசும், மாநில அரசும் பல முயற்சிகளை மேற்கொண்டன. அந்த முயற்சிகளின் பயனாக வயது வந்த குழந்தைகள் அனைவரும் கட்டாயக் கல்வி பெறும் திட்டம், பள்ளியில் படிக்க முடியாதவர்களுக்காக வயதுவந்தோர் கல்வித் திட்டம், சமூகக் கல்வித் திட்டம், தொழிலாளர் கல்வித் திட்டம், விவசாயக் கல்வித் திட்டம், பள்ளிசாராக் கல்வித் திட்டம் என்ற பல நல்ல திட்டங்களை மக்களுக்கு நமது அரசு அளித்து வருகின்றது.

குழந்தைகள் கல்வி

கல்வி அறிவு நாட்டில் பெருகுவதற்குக் குழந்தைப் பருவத்திலிருந்தே பொது அறிவை அவர்களிடம் வளர்க்கவேண்டும் என அரசு விரும்பியது. அதற்குப் பள்ளியில் சொல்லித் தரும் கல்வி அறிவு மட்டும் போதாது என்பதனால், அதனைச் செம்மைப்படுத்தி மேலும் வளர்த்துக் கொள்ளும் முயற்சிகளுக்குப் பொது நூலகங்கள் சிறப்பாக உதவ முடியும் என்றும் அரசு கருதியது. அதன் விளைவாக நூலகங்கள் மூலம் அனைத்து மாவட்டங்களின் மைய நூலகங்களிலும் ‘குழந்தைகள் நூலகம்’ எனும் பிரிவை புதிதாக ஏற்படுத்தியது. சிறப்பான கல்வி அறிவை ஆழமாகப் பெறுவதற்கு வழிவகை செய்கின்றது.

குழந்தைகள் நூலகப்பிரிவு நூலகர்

இப்பிரிவில் பணியாற்றும் நூலகர் தனித்திறமை பெற்றவராக ஒரு நல்ல ஆசிரியரைப் போன்று குழந்தைகளின் மனநிலைமைக்கு ஏற்ப, அவர்களுக்கு

நைஜாமுக்குப் பெருமகிழ்ச்சி எதில்?

ஈடு இணையற்ற செல்வங்களைப் படைத்திருந்த நைஜாம் மன்னருக்கு, வரும் விருந்தினரிடம் தம்முடைய கவிதைகளைப் படித்துக் காட்டிப் பாராட்டுப் பெறுவதிலே தான் பெரு மகிழ்ச்சியாம் ! ஏனெனில் அது அவருடைய சொந்தப் படைப்பல்லவா!

நூலகத்தின் மீதும் நூல்களின் மீதும் ஆர்வமும், தூண்டுதலும் ஏற்படக் கூடியவிதத்தில் தமது பணிமுறைமையை வகுத்துக் கொள்பவராக இருப்பார்.

குழந்தைகள் நூலகத்திற்கான தளவாடப் பொருள்கள்

இப்பிரிவில் உள்ள தளவாடப் பொருள்கள் குழந்தைகளுக்கு ஏற்ற முறையில் வண்ணவேலைப்பாடுகளுடன் அமைக்கப் பட்டுள்ளன. சிறுவர்கள் எளிதாக அமரக் கூடிய விதத்திலும் அவர்களின் ஆர்வத்தை தூண்டக் கூடிய விதத்திலும் சிறப்பான முறையில் மர நாற்காலிகளும்,மேசைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இப்பிரிவில் அமைந்திருக்கும் தளவாடப் பொருள்கள் அனைத்தும் சிறுவர்கள் எளிதாகப் பயன்படுத்தும் விதத்திலும், மேலும் மேலும் அவர்களை ஈர்க்கும் விதத்திலும் அமைந்துள்ளன.

ஒரு மணிநேரம் கதை செல்லுதல் (Story Hour)

தொண்டு செய்யும் எண்ணம் கொண்டவராக, சிறந்த ஆசிரியராக, நேசமுடன் குழந்தைகளிடம் பழகக் கூடியவராக, அவர்களை அன்புடன் நடத்தக்கூடியவராக விளங்கு வதோடு புன்முறுவலுடன் குழந்தைகளிடம் மீண்டும் மீண்டும் நூலகத்திற்கு வரக்கூடிய எண்ணத்தை வளர்ப்பவராகவும் இருந்து, நூலகத்திற்கு வரக்கூடிய குழந்தைகளுக்கு ஆர்வத்தைத் தூண்டக் கூடிய நல்ல நல்ல அருமையான கதைகளைச்சொல்லிஅக்கதை களோடு நூலகத்தில் உள்ள நூல்களையும் அவர்களுக்குத் தொடர்புபடுத்தி, அவர்களை நூலகத்தின் மீது ஈடுபாடு கொள்ளச் செய்து சிறப்பாகப் பணியாற்றும் நல்ல நூலகராகத் திகழக் கூடியவர் இப்பிரிவில் நூலகராக அமர்த்தப்படுகிறார்.

வானொலி மற்றும் தொலைக்காட்சிகள், ஒலி, ஒளி நாடாக்கள்

வியப்பூட்டும் இன்றைய அறிவியல் வளர்ச்சிகளின் துணைகொண்டு வானொலி தொலைக்காட்சிகளின் மூலம் சிறுவர்களுக்கான நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலி, ஒளி பரப்பப்பட்டு வருகின்றன. அவைபோன்று ஒலிநாடாக்களின் மூலம் பாட்டுகள், கணித வாய்பாடுகள், கூட்டல், கழித்தல் கண்க்குத் திறன்கள் எல்லாம் வளர்க்கப்படுகின்றன. ஒளி நாடாக்களின் மூலம் அறிவு பூர்வமான எண்ணத்தை வளர்க்கக் கூடிய, நிகழ்ச்சிகள் எல்லாம் காட்டப்பட்டு, நிகழ்ச்சிகளின் இடையில் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய ஐயங்களுக்கு அவ்வப்பொழுது விளக்கங்களும் அளித்து இப்பிரிவின் நூலகர் சிறப்பான பணியைச் செய்து வருகின்றார்.

கண்ணைக் கவரும் அழகிய நூல்கள்

இப்பிரிவிற்காகச் சிறந்த நூல்கள் வாங்கப்படுகின்றன. குறிப்பாகச் சிந்தனையைத் தூண்டக் கூடிய பல்வேறு படங்கள் நிறைந்த - அவற்றின் மூலம் அறிவை, ஆற்றலை வளர்த்துக்கொள்ளும் நூல்கள் வாங்கப்படுகின்றன. இந்த நூல்களில் அச்சிடப்பட்டுள்ள எழுத்துகள் பெரியதாகச் சிறுவர்களைக் கவரக்கூடிய விதத்தில் அமைந்திருக்கும். நல்ல நல்ல அறிவு பூர்வமான சிறுகதைகள், அறிவியல் கதைகள் கொண்ட நூல்கள் அதிகமாக வாங்கப்படுகின்றன. சிறுவர்களுக்கான கலைக்களஞ்சியங்கள், உலகப்படங்கள் ஆகியவைகள் இந்த நூலகத்தில் நிறைந்துள்ளன. குறிப்பாக இப்பிரிவுக்கென வாங்கப்படும் நூல்கள், அவற்றின் அமைப்பு, அச்சு, எழுத்துக்கள், படங்கள், வடிவங்கள், புரிந்துகொள்ளும் நடை முறைகள், எளிமையான நடை ஆகியவற்றின் அடிப்படையில் முறையாக ஆராயப்பட்டுச் சிறுவர்களின் எண்ணங்களைச் சிறந்த முறையில் வளர்க்க உதவும் நூல்கள் மட்டுமே வாங்கிவைக்கப்படுகின்றன.

சென்னையின் மையப்பகுதியில் அண்ணாசாலையில் மக்கள் நிறைந்த பகுதியில் தேவநேயப் பாவாணர் மாவட்ட மையநூலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குழந்தைகள் நூலகமும் மேற்கண்ட முறையில் அமைக்கப்பட்டுக் குழந்தைகளைக் கவரும் விதத்தில் செயல்பட்டு வருகின்றது. நுண்ணறிவு தருகின்ற அறிவுச்சோலையாய் இனிமை நிறைந்த குழந்தைப் பருவத்திலேயே அறிவை, ஆற்றலை, திறமையை, தன்னம்பிக் கையைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு பூஞ்சோலையாய்த் திகழ்கின்ற இந்த நூலகத்தில், மொத்தம் 19,826 நூல்கள் உள்ளன, நூலக உறுப்பினர்களாக 1040 பேர் உள்ளனர். ஆண்டில் சராசரியாக 10,138 உறுப்பினர்கள் நூல்களை இரவலாகப் பெற்றுச் செல்கின்ற னர். சராசரியாக 30,374 சிறுவர்கள் நூலகத்திற்கு வருகின்றனர். நூலகத்திற்கு வந்து 17,520 சிறுவர்கள் படிக்கின்றனர். இப்படி இந்த நூலகம் சிறப்பாகப் பணி செய்து வருகின்றது.

சேவை உள்ளத்தோடு, அன்புநெறியோடு, பண்பாட்டின் பெருமையோடு பணி செய்யும் நல்ல நூலகரோடு அமைந்துள்ள இந்தக் குழந்தைகள் நூலகம் உன்னதமான முறையில் சமுதாய மேம்பாட்டிற்கு உதவிவருவது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

நூலகர்களின் வடஇந்தியப் பயணம்



திரு. எஸ். பாண்டித்துரை
மாவட்ட நூலக அலுவலர், மதுரை

இந்திய பொது நூலகச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற அகில இந்திய நூலகர்களின் கருத்தரங்கு ஒன்று சண்டிகரில் கடந்த பிப்ரவரி 5-ம் தேதி முதல் 8-ம் தேதி வரை நடை பெற்றது. இதில் தமிழ்நாட்டுப் பொது நூலகத்துறையின் சார்பில் எல்லா மாவட்டங்களிலும் இருந்து மொத்தம் - 14 நபர்கள் கலந்து கொண்டனர். இதில் மூன்று மாவட்ட நூலக அலுவலர்களும் ஐந்து மாவட்ட மைய நூலகர்களும், நான்கு நூலக ஆய்வாளர்களும் கலந்து கொண்டனர். கன்னிமாரா நூலகத்தின் பொது நூலகரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார்.

இதுவரையில் ஒரு நூலக மாநாட்டில் பதினான்கு நூலகர்கள் கலந்து கொண்டது இதுதான் முதல் முறையாகும். இதற்கு உரியபெருமை தமிழ்நாடு பொதுநூலக இயக்குநர் திரு. இரா. கண்ணன் அவர்களையே சாரும். பொது நூலகத்தின் முன்னேற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் முக்கிய பங்கை அளித்து வரும் இயக்குநர் அவர்கள், நூலகர்கள் அனைவரும் இவ்விதமான நூலகக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு வடஇந்தியாவில் நூலக வளர்ச்சிக்காகச் செயல்படுத்தப்பட்டுவரும் பல்வேறு நல்ல திட்டங்களையும் வட மாநிலங்களின் நூலக வளர்ச்சிப்பணி களையும் அறிந்து வருவது - தமிழ்நாட்டு நூலகத்துறைக்குப்பயன் தந்து மேலும் சிறப்புகளை ஏற்படுத்தும் என்று கருதினார். அத்துடன், தமிழ்நாட்டில் பொது நூலகப் பணி எவ்விதமெல்லாம் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்பதைப்பிற மாநிலத்தவர் அறிந்து கொள்ளவும் இம்மாநாடு உதவும் என்று கருதினார். அந்தக் கருத்துகளின்படி இயக்குநர் அளித்த ஊக்கத்தைத் துணையாகக் கொண்டு நூலகர்கள் சண்டிகரில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டனர். பல்வேறு இடங்களுக்கும் சென்று பல நூலகர் களையும், அங்குள்ள மக்களையும் சந்தித்துப் பரவலான பல தகவல்களையும் திரட்டி வந்தனர். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த நூலகத்துறை

நூல் ஒரு தோட்டம்!
பழச்சோலை!
களஞ்சியம்!
வழித்துணை!
அறிவுரை தரும்
நல்லாசான்!

- பீச்சா

யோடு நெருங்கிய உறவையும் ஏற்படுத்தியுள்ளனர்

நல்நூலகர் விருது :

இந்த நூலக மாநாட்டில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த சிறந்த நூலகர்கள் தாங்கள் ஆற்றிய சிறப்பான பணிகள் காரணமாகப் பாராட்டப்பட்டு நல்நூலகர் என்ற பெயரில் விருதுகள் வழங்கப்பட்டன அவர்களுள் இருவர் தமிழகத்தைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும். திரு. பாண்டித்துரை (திண்டுக்கல் மாவட்ட நூலக அலுவலர்), திரு. எஸ். கிருஷ்ணன் (மதுரை மாவட்ட நூலக அலுவலர்) ஆகிய இருவரும் நல்நூலகர் விருது பெற்ற தமிழக நூலகத்துறை அலுவலர்கள் ஆவர். மற்ற மூவர் திரு. என். கிரிதரிசிங் - மணிப்பூர், திரு. கே.கே. பட்டாச்சார்ஜி - கல்கத்தா, திரு. எச்.ஜே. உபதயா - கல்கத்தா ஆகியோர் ஆவர்.

குறிப்பாகத் தமிழ்நாட்டிலிருந்து இரண்டு மாவட்ட நூலகர்கள் நல்நூலகர் விருதைப் பெறுகின்ற பொழுது கருத்தரங்குக் கூட்டத்தில் அவ்வமயம் ஏற்பட்ட கரவொலி அடங்குவதற்கு ஐந்து நிமிடம் ஆயிற்று. மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் திரு. பி.என். கவுலா அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கரவொலி செய்து, மகிழ்ந்து நம்முடைய இரண்டு மாவட்ட நூலக அலுவலர்களையும் பாராட்டிச் சிறப்பித்ததும் பல்வேறு நிழற்படங்களை எடுக்கச் செய்து பெருமைப் படுத்தியதும் மறக்க முடியாத காட்சிகளாகும். அங்குள்ள செய்தித்தாள்கள் இதைக் குறித்து வெளியிட்ட செயதிகள் என்றும் மறக்க முடியாதவை. இத்தனை சிறப்புகளும் தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருப்பது தமிழகப் பொதுநூலக இயக்கத்திற்குக் கிடைத்த மிகப் பெரிய சிறப்பாகும்.

இந்தக் கருத்தரங்கில் திருவாளர்கள் என். ஆவுடையப்பன் - கன்னிமாரா நூலகர், என் சண்முகசுந்தரம் - மாவட்ட நூலக அலுவலர், கே. நடராசன் - மாவட்ட நூலக அலுவலர், சி. எஸ். ஞானதேவ், கே. இராதாகிருஷ்ணன் - உதவி விரிவுரையாளர்கள், ஜி. ஜெகதீசன் - நூலகர், ஆர் இராமர் - நூலக ஆய்வாளர், எம். ஆரோக்கியம் நூலகர், எஸ். ராஜா - நூலக ஆய்வாளர், வி. மாரிமுத்து - நூலகர், ஏ. முத்தையா - நூலகர் அய்யாபிள்ளை ஆகியோர் சென்று கலந்து கொண்டனர்.

சண்டிகர் :

இந்த அகில இந்திய நூலகர்களின் கருத்தரங்கு சண்டிகரில் 'இந்திரா ஓய்வு இல்லத்தில்' நான்கு

நேருவும் இந்தியாவும்

நான் இந்தியாவை அடைவதற்காகச் செங்கடலையும், அரபிக் கடலையும் கடக்கும் பொழுது நேருவின் சுய சரிதத்தின் 700 பக்கங்களும் தங்களுடைய செல்வத்தை எனக்கு அளித்தன. நூலைப் படித்து முடித்த பின் நான் அறிந்து கொண்டது "இந்நூலைப் படிக்காதவர்கள் தற்கால இந்தியாவை அறிய முடியாது" என்பதே !

- ஹாலிபாக்ஸ

நாள்கள் சிறப்பாக நடைபெற்றது. சண்டிகர் அழகான, அமைதியான, அற்புதமான நகரமாகும். இங்கு அமைந்துள்ள கட்டடங்கள், சாலைகள் அனைத்தும் பிற்கால நகர வளர்ச்சிகளைக் கணக்கிட்டுத் திட்டமிட்டு இஃது ஓர் அழகிய நகரமாக அமைய வேண்டும் எனும் எண்ணத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன. சண்டிகர் நகரம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வசிப்பதற்குரிய வீடுகள், கடைகள், பள்ளிகள், கோயில்கள், வழிபாடு செய்யும் இடங்கள் என ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே இடங்கள் ஒதுக்கப்பட்டு, அவற்றிற்குரிய கட்டடங்கள் மிக நவீனச் சிறப்பான அமைப்புகளுடன் கட்டப்பட்டுள்ளன. வீட்டிலிருந்து பத்து நிமிடத்தில் எந்தப் பிரிவிற்கும் எந்த இடத்திற்கும் செல்லக் கூடிய வகையில் நகரம் திட்டமிடப் பட்டுள்ளது. சண்டிகரில் அமைந்துள்ள பூந் தோட்டங்கள் மிகவும் கண்ணைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளன. அங்குள்ள ஏரியில் படகுகள் செல்வது மிகவும் அழகாய் உள்ளது. கழிவு செய்யப்பட்ட அனைத்துப் பொருள்களையும் கொண்டு ஓர் அழகான பூங்காவை அற்புதமாக வடிவமைத்து, மக்கள் பார்த்து ரசிக்கும் வண்ணம் உருவாக்கியிருப்பது சண்டிகருக்குச் சிறப்பைத்தரும் அம்சமாகத் திகழ்ந்துவருகிறது.

நூலகக் கருத்தரங்கு :

5.2.96 அன்று காலை நூலகர்கள் தங்களுக்குள் அறிமுகம் செய்து கொள்வதற்கும் மாநிலங்களுக்கிடையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுவதற்கும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

தேவையும் விருப்பமும்

மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதா விருப்பத்தைப் பூர்த்தி செய்வதா என்ற பிரச்சினை நூலகர்கள் முன் எழுகிறது. நிச்சயமாகத் தேவையைத் தான் பூர்த்தி செய்ய வேண்டும். விருப்பத்தையல்ல! நோய் வாய்ப்பட்டவனுக்குத் தேவை மருந்து. ஆனால் அவனுக்கு ஏதாவது வாய்க்கு ருசியாகச் சாப்பிட வேண்டுமென்று விருப்பம் இருக்கும் அவனுடைய நன்மைகளை நாடுபவர் தேவையைத்தான் நிறைவேற்ற வேண்டும்.

அன்று மாலை தொடக்க விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 6.2.96, 7.2.96 ஆகிய நாள்களில் மாநிலம் தோறும் பொது நூலகம் செயல்படும் விதம் குறித்தும், வளர்ச்சிகள் குறித்தும் பேசப்பட்டுக் கலந்துரையாடல் நடைபெற்றது. 7.2.96 அன்று நடுவண் அரசின் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சாகிப் சிங்வர்மா அவர்கள் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நல்நூலகர்கள் விருதுகளை வழங்கி அவர்களை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினார்கள். நூலகத்தின் தேவை ஏன், எதற்கு என்று கூறிய அமைச்சர் ஒரு நூலகர்தான் சமுதாயத்தைச் சரியான முறையில் எடுத்துச் செல்ல முடியும் என்றும் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் நூலகப்பணிகள் குறித்துப் பாராட்டி அவர் கூறியது எங்களுக்குப் பெருமையாய் இருந்தது.

திரு. எஸ். கிருஷ்ணன் - மதுரை மாவட்ட நூலக அலுவலர், அவர்கள் நல்நூலகர் விருது பெற்றுத் தமது நன்றியைத் தெரிவித்த பொழுது நூலகர்களின் கையொலி அரங்கத்தை அதிரச் செய்தது. திரு. கிருஷ்ணன் அவர்கள் இந்திய பொது நூலகச் சங்கத்திற்கு ரூ.1,000/- நன்கொடை கொடுத்துத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

குறிப்பாக இக்கருத்தரங்கில் கிராமப்புற நூலக வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசப்பட்டது. கிராம முன்னேற்றம் தான் நகர முன்னேற்றத்திற்கு அடிப்படை; ஆதலால் கிராமவளர்ச்சிக்கு நூலகர்கள் ஆற்ற வேண்டிய கடமையும், பணிகளும் எவை - என்பன குறித்துவிரி வாகக் கலந்துரை யாடப்பட்டது.

நூலகத்தின் தொழில்நுட்பம் முன்னேற வேண்டும் எனவும் நவீன அமைப்பு முறைகளை உடனுக்குடன் நூலகத்தில் ஏற்படுத்த வேண்டும் எனவும், தொடர்பு வசதிகள் ஏற்படுத்தப் பட வேண்டும் எனவும் எடுத்துக் கூறப் பட்டன.

இந்த நூலகக் கருத்தரங்கில் நூலகர்கள் கலந்து கொண்டதால் பல புதிய சிந்தனைகள் ஏற்பட்டுள்ளன. நூலகங்களின் நடைமுறைகளில் உள்ள புதுமைகள் கண்டறியப்பட்டன. பல சிறந்த நூலகர்களுடன் தொடர்புகள் ஏற்பட்டன, கலந்துரையாடலின் மூலம் பலவிதமான தெளிவான கருத்துகளை அறிய முடிந்தது.

மொத்தத்தில் இந்தப் பயணம் நூலகர்களுக்கு மிகவும் பயனுள்ள பயணமாக அமைந்து பல அரிய கருத்துகளை அறிந்து கொள்ள மிகவும் உறுதுணையாக இருந்தது என்று கூறினால் அது மிகையாகாது.

''நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் தங்களது வீட்டில் நல்ல நூல்களைச் சேர்த்து வைத்து பயன்படுத்த வேண்டும் நல்ல நூல்களைப் படித்து அனுபவிக்க தனிமையும், கவனமும் இன்றியமையாததவையாகும். நூல்களை எழுதுவதை விடப்படிப்பது எளிது. எனவே, படிக்கும் பழக்கத்தை ஒவ்வொருவரும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்''.

முன்னாள் குடியரசுத் தலைவர்

டாக்டர் எஸ். இராதா கிருட்டிணன்

12.7.1964 - ல் வெங்கடேசுவராப்

பல்கலைக் கழக புது நூலக கட்டிட திறப்பு விழாவில் பேசியுள்ளார்

நல்ல நூல் – நல்ல நண்பன்

ஆர். இராமர்

உதவி நூலகவியல் விரிவுரையாளர்,
பொது நூலகத்துறை, சென்னை - 2.

எனக்குப் படிப்பில் இருந்த ஆர்வம் எனக்கு மட்டும்தான் தெரியும். ஆறாம் வகுப்பு படிக்கும்போதே பழகும் நண்பர்களிடமும் ஆசிரியர்களிடமும் புத்தகங்களை இரவல் வாங்குவேன். ஓய்வு நேரங்களில் எவ்வளவு பெரிய நூலானாலும் இரண்டொரு நாள்களில் அதைப் படித்து முடித்துவிடுவேன். அந்தப் புத்தகங்கள் கிழிந்திருந்தால் ஒட்டியும், அவைகளுக்கு அட்டை போட்டும் திருப்பித் தந்துவிடுவேன். இதனால் ஒட்டப்பட வேண்டிய நூல்களை எனக்கு இரவல்தர யாரும் தயங்கமாட்டார்கள். இந்தப் படிப்பின் விளைவாக நான் நூலகப் பணிக்குவர உதவிய ஓர் அதிசய நிகழ்ச்சி நடந்தது.

பத்தாம் வகுப்பு முடித்துவிட்டு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அலைந்து கொண்டிருந்த நேரம். பதிவு செய்வதற்காகத் தேனியில் இருந்து புறப்படும் மதுரை பேருந்தில் அமர்ந்தேன். உடன் கொண்டு சென்ற திருக்குறள் மு.வ. அவர்களின் விளக்க உரையுடன் கூடிய நூலைப் படிக்க முனைந்தேன். படிப்பில் மூழ்கிய நான் என்முன் யார் அமர்ந்தனர், யார் இறங்கினர் என்பதை எல்லாம் கவனிக்க வில்லை. உசிலம்பட்டி மலைமீது பேருந்து சென்றபோது தலைநிமிர்ந்து மலையின் காட்சியைப் பார்த்தேன். மலையின் சாலை ஓரத்தில் இருந்த கோவிலுக்கு ஒரு கும்பிடும் போட்டுவிட்டு மீண்டும் படிப்பில் மூழ்கத் தொடங்கினேன்.

'தம்பி' - என அழைக்கும் குரல் கேட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தேன். எதிரே வெள்ளை உடையில் பாதிரியார் ஒருவர், நான் படிக்கும் புத்தகத்தைக் கேட்பதைப் போல் கையை நீட்டினார். அப்போது நான் படித்துக் கொண்டிருந்த அதிகாரம் ''ஒழுக்கமுடைமை''. வாங்கிப் பார்த்த அவர் மீண்டும் என் உள்ளத்தை அளவெடுப்பது போல் என்னை ஏற இறங்கப் பார்த்தார். நான் மதுரை வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குச் செல்வதை என் மூலமே அறிந்து கொண்டார். எதை எதையோ படிக்கும் இவ்வயதில் திருக்குறளைப் படிப்பதைக் கூறி என்னைப் பாராட்டினார். மதுரை பேருந்து நிலையத்தில் இறங்கினோம். தம் வீடு அவ்வலுவலகத்தின் அருகில் இருப்ப தாகவும் தம்முடன் வரும்படியும் அழைத்தார். அவருடன் சென்றேன். நேராக வேலைவாய்ப்பு அலுவல கத்திற்க்குச் சென்றோம். மதுரை வேலைவாய்ப்பு அலுவலகமும்,

இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகமும் ஒரே கட்டடத்தில் இருந்தன. நான் மதுரை வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருந்தேன். அங்குச் சென்றோம். இவரைக் கண்டதும் அவ்வலுவலர் எழுந்து நின்று வணக்கம் கூறினார். இருவரும் ஆங்கிலத்தில் பேசினர். மீண்டும் இராமநாதபுரம் அலுவலகத்திற்கு வந்தார். அங்கும் சென்று ஏதோ பேசினார். மீண்டும் மதுரை அலுவலகம் சென்றார். பின் அவர் வழங்கிய அறிவுரைப்படி என் பதிவைத் திருப்புவனத்தில் இருந்த என் அக்காள் முகவரியைக் கொடுத்து இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு மாற்றினேன். நூலகத்தில் வேலை செய்யச் சம்மதமா என என்னிடம் கேட்டார். நிறைய படிக்க அங்கு தானே முடியும் ? கரும்பு தின்ன கூலியா ? நானும் புத்தகப் புழுவாயிற்றே. உடனே சம்மதித்தேன். ஒரு வாரத்திற்குள் அங்கு நடைபெறவிருந்த 'நேர்க்காணலில்' கலந்து கொள்ளும்படி ஏற்பாடுகளைச் செய்தார். அன்று மதிய உணவை அவர் வீட்டில் உண்ணச் செய்தார். அன்று இரவு அவரின் சர்ச்சில் தங்கிக் கொள்ள ஏற்பாடு செய்தார். நேர்க்காணலின் போதும் உடன் இருந்தார். நூலகராக நியமனமான உத்தரவையும் அவர் கையாலேயே பெறும் பாக்கியத்தை நான் பெற்றேன்.

உத்தரவைக் கொடுத்துவிட்டு என்னைத் தட்டிக் கொடுத்து 'தம்பி, இந்தச் சின்ன வயதில் எப்பக்கமும் கவனத்தைச் செலுத்தாமல் ஒரு முகப்படுத்தி நீ படித்ததை ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டே வந்தேன்; அதிலும் திருக்குறளை - அதிலும் நான் வாங்கிப் பார்க்கும்போது 'ஒழுக்கமுடைமை'' அதிகாரத்தை நீபடித்துக் கொண்டிருந்தது உன் மீது அன்பு கொள்ள வைத்து விட்டது. உனக்கு உதவ வேண்டும் என

அண்ணா பேசுகிறார்

''உட்கார்ந்து படிப்பதற்கு வசதியுள்ள வீடுகளிலாவது 'புத்தக அறை' என்று ஓர் அறை தனியாக ஒதுக்கியிருக்கிறார்களா ? - இல்லை ! பொம்மைகள் வைப்பதற்கென்ற தனி அறைகளுள்ள வீடுகளை நான் பார்த்திருக்கிறேன். வீட்டுக்காரர் வேட்டைக்காரராயிருந்தால் காட்டு எருமையின் தலையையும், சிறுத்தையின் தோலையும் மாட்டி வைப்பதற்கென்றே பெரிய கூடங்களைக் கட்டுவார். ஆனால் படிப்பதற்கென்று ஓர் அறைகூட இருக்காது. நடிப்பைக் காட்டும் பண்பு பெற்றிருப்பதால், சினிமாவில் கூட அந்தக் காட்சி இருப்பதில்லை! எந்தக் கதாநாயகனாவது படிக்கும் அறையில் இதைச் செய்தான், அதைச் செய்தான் என்று சினிமாவில் ஒரு காட்சியாவது வந்திருக்கிறதா? ''நம் கதா நாயகனாவது, படிக்கும் அறைக்குப் போவதாவது?'' என்று தான் நினைப்பார்களே யல்லாமல், ஒரு படிப்பகக் காட்சியையா சினிமாவில் காட்டப் போகிறார்கள் ?''

- பேரறிஞர் அண்ணா

என் எண்ணத்தில் ஓர் உறுதி ஏற்பட்டது. வேலைக்குப் போகப் போகிறாய். நீ எனக்குச் செய்ய வேண்டிய உதவி நீ செய்ய இருக்கின்ற வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்து, செய்யும் தொழிலைத் தெய்வமென நினை. வாழ்வில் உயர ஒழுக்கமுடன் இரு எனக் கூறி வாழ்த்தினார். நான் ஓர் இந்துவாய் இருப்பினும் மதம் கருதாது உதவிய அந்த மனித தெய்வத்தை என்றென்றும் மறவேன்.

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே'' - என்ற வாக்கிற்கிணங்க நல்ல நூலைப் படிக்கும் போது நல்லவரைக் கண்டேன். நன்மை கொண்டேன். அவரின் ஆசியால் பணியாற்றிய ஊர்களிலெல்லாம், வாசகர் வட்டம், இலக்கிய மன்றம் போன்றவைகளை அமைத்து மனப்பூர்வமாகப் பணியாற்றி நூலக வளர்ச்சியில் ஈடுபட்டேன். ஓய்வு நேரங்களில் படித்தேன் பட்டம் பெற்றேன். பணியில் படிப்படியாக உயர்ந்து இன்று உதவி நூலகவியல் விரிவுரை யாளராகத் திகழ்கிறேன். நல்லநூல் எனக்கு நண்பனாக, ஆசானாக மட்டுமல்லாது, வேலைவாங்கித் தரவும் உதவியாக அமைந்தது என்பதனை எண்ணும்போதெல்லாம் அந்த நல்ல நூலை என் வாழ்க்கையின் வழிகாட்டி என்றே இன்றும் மதிக்கிறேன்.

நூலகத்தின் தன்மை

1. படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறது.
2. மாணவர்களாகவே ஆசிரியர் இல்லாமல் நூல்களைக் கற்கும் பண்பை ஏற்படுத்துகிறது.
3. பள்ளியில், கல்லூரியில் பாட நேரத்தில் கற்பிக்கப்படும் பாடத்திலிருந்து மாறுபட்ட பாடத்தை அறிய உதவுகிறது.
4. அனைவருக்கும் ஒரு சமுதாயப் பயிற்சியை உண்டாக்குகின்றது.
5. சரியான நூலை சரியான வாசகளுக்கு சரியான நேரத்தில் தந்து உதவுகிறது.

நூலக ஆட்சி முறை

கே. பாண்டியன், பி.ஏ., பி.எல்.ஐ.எஸ்.,
நூலக விரிவுரையாளர்

முன்பு ஒரு காலத்தில் நூலகம் நூல்கள் இருக்குமிடமாகவும் பாதுகாப்பிட மாகவும் மட்டுமே உள்ளதாகக் கணக்கிடப்பட்டுவந்தது. ஆனால் தற்காலத்தில் நூலகங்கள் அறிவுச் செல்வங்களைத் தேடிவரும் வாசகர்களுக்குப் புகலிடமாகக் கருதப்பட்டுவருகிறது.

நூலகம் ஓர் நிறுவனம் :

இந்த அமைப்பை நிறுவ வேண்டுமானால் அதற்காக ஒரு குறிப்பிட்ட கொள்கைகளுடன் அது நிறுவப்படவேண்டும். அவ்வாறு அமைக்கப்படும்போது, விதி முறைகளும் உருவாக்கப்பட்டு, அந்த அமைப்பின் கீழ்ச் செயல்படும் உறுப்பினர்களுக்காக வரையறுக்கப்படும் பணிகள் குறிப்பிடப் பட வேண்டும். அந்த அமைப்பின் பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க ஆவன செய்ய வேண்டும்.

நூலகத்தின் சமூகப்பயன் :

நூலகம் என்பது ஒரு லாபகரமான அமைப்பு அல்ல. பொதுச் சேவையின் பயன் கருதி அமைக்கப்பட்ட நிறுவனமாகும். அவ்வப்போது வெளியாகும் நாளிதழ்கள். பருவ இதழ்கள், ஆராய்ச்சி வெளியீடுகள் ஆகியவற்றைப் பல்வேறு இடங்களி லிருந்து வ்ரவழைத்து, அவற்றைப் பயன்படுத்துவோருக்குக் கொடுத்து, அவர்களின் பொது அறிவு வளர்ந்திட வழி செய்வது அங்குப் பணிபுரியும் நூல கரையே சாரும். ஆகவே நூலகர் பழைய செய்திகள் முதல் அன்றாடம் வெளியாகும் புதிய விவரங்கள் வரை அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பது மிகவும் அவசியமாகும். நூலகர் ஒரு கலைக்களஞ்சியமாக அமைந்து, வரும் வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்கள் நோக்கமறிந்து சேவை செய்து நல்ல முறையில் நூலகத்தை நடத்திட வேண்டும்.

நூலக வகைகள் :

பொது நூலகத துறை நூலகங்களில் படிக்க வருபவர்கள் தங்கள் அறியாமையைப் போக்கி தேவையான நூல்களைப் படித்து, அறிவை வளாத்துக் கொள்ள முனைவார்கள் அதற்கு உதவும்படிச் செய்வது மிக முக்கியமாகும். ஆகவே நூலகப் பணிகள், அதனைப் பயன்படுத்தும் வாசகர்களுக்கேற்ப மாறுபட்ட வகையில் அமைக்கப்பட வேண்டும். நூலகங்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவைகள் பொது நூலகம், கல்வி நூலகம்,

வகைவகையாய்
அறிவென்னும்
செல்வம் கொட்டி
வைத்திருக்கும்
வங்கிகளே
நூலகங்கள் !
அகமதற்கு ஞானத்தை
அள்ளி அள்ளி
அளிக்கின்ற வள்ளல்
தான் நூலகங்கள் !

புகழ்வாங்க
அறிஞரெல்லாம்
கூடும் சந்தை !
புதிதான கருத்துக்கள்
கொண்ட பேழை !
தகவுடைய
நெஞ்சங்கள் தேடிச்
செல்லும் தரணியிலே
மகிழ்வுதரும்
அறிவுச் சோலை !

சிறப்பு நூலகம் என மூன்று வகைப்படும். எந்த வகைப்பட்ட நூலகமாயிருந்தாலும் அதனைத்தேடிவரும் வாசகர்களின் தேவைகளை அறிந்து செயல்படுவதுதான் சிறப்பாகும்.

நூலக நிர்வாகம் :

இந்த நிர்வாகத்தைத் திறம்படச் செயல்படவைக்க நிதி அவசியமாகும். இதன் மூலம் திட்டமிடுதல், உருவாக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற பணிகளை நூலகத் தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன் அவர்கள் ''நூல் ஆட்சியியல்'' என்ற நூலில் சிற ப்பாக விளக்கியுள்ளார்.

1. **நோக்கம் :** நூலகம் அதனைச் சார்ந்திருக்கும் துறையின் வகையினை அறிந்து பல்வேறு பிரிவுகளை உருவாக்கவேண்டும். (உ.ம்) கல்வித்திட்டம் என எடுத்துக் கொண்டால், அதற்கு ஏற்ற வகையிலான நூல்களை முதியோர் படிப்பதற்கான வகையில் சேமித்து வைத்துக் கொடுக்கலாம். இதற்காகப் பல கிளை நூலகங் களையும்கூடத்திறந்து உதவலாம். அப்படி நூலகம் திறக்க முடியாத இடங்களில் நடமாடும் நூலகம் ஏற்பாடு செய்து உதவிட முடியும்.

2. **பயன்படுத்துபவர் :** நூலகம் பயன் படுத்தப்படுவதுதான் மிகமுக்கிய மாகும். பல்கலைக்கழக நூலகங்களை மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபடும் மாணவர்கள் பயன்படுத்து வார்கள். அவர்கள் தேவை களுக்கேற்ப அவ்வப்போது வெளியிடும் புதிய நூல்களையும் செய்திகளையும் சேகரித்துக் கொடுக்க வேண்டும்.

3. **நூலக ஆவணங்கள் :** இது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும். இதில் நூல் வகையில்

சேராத ஆவணங்களும் அடங்கும் (உ.ம்.) திரைப்படங்கள், தேசப்படங்கள், சுவடிகள், ரிக்கார்டுகள், மைக்ரோ பிலிம்கள் முதலியவை. இவற்றிற்காக நூலகத்தில் தனிப்பிரிவு அமைக்கப்பட வேண்டும்.

4. **நூலக அமைவிடம் :** பொதுவாகக் கல்விக் கூடங்களில் உள்ள நூலகங்கள் கல்வி நிறுவனங்களில் அமைக்கப் படும். போதிய இட வசதியுடன் இருக்கும். ஆனால் பொது நூலகங்கள் கிராமப்புறப் பகுதிகளில் உள்ளபடியால், அவற்றை மக்கள் பயன்படும் இடங்களில் அமைக்க வேண்டும். மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்களில் அமைந்தால் பயன்பாடு அதிகமாகும். நூலகத்தை அமைப்பதில் நூலகர் அந்த இடத்தின் சூழ்நிலை களுக்கேற்றப நூலகப்பணிகளை நன்கு திட்டமிட்டு வாசகர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

உந்து வண்டி மூலம் நடமாடும் நூலகம்

பொறியியல் அறிஞர் கனகசபைப்பிள்ளை அவர்கள் 1931, அக்டோபர் 21-ஆம் நாள் தஞ்சை மன்னார்குடியில் ஏழு கிராமங்களில் உள்ள மக்களும் நூலறிவு பெற வேண்டும் என்ற தொண்டு நோக்கத்தில், வண்டி கட்டிச் சென்று, நடமாடும் நூலகம் - என்னும் நல்லதோர் பணியைத் தொடங்கி வைத்தார்.

1937 - ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் 'ஞானரதம்' என்ற உந்து நூலக உதவியால் பல்வேறு வழங்கு நூலகங்கள் நூல்களைப் பெற்று பணியாற்றத் தொடங்கின.

இன்று இதன் காரணமாகத்தான் இயங்கும் நூலகங்கள் பல்வேறு மாவட்டங்களில் நூலகம் இல்லாத கிராமங்களில் நூல்களை மக்களுக்கு கொடுத்து எல்லோரும் கல்வி அறிவு பெறவேண்டும், எழுத்தறிவு பெற வேண்டும் என்ற பணி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

நூலகம்

அறிவையும் ஆற்றலையும்
ஆர்வமுடன் வளர்ப்போர்க்கு
அழகிய பொற்கோயில் !

புதுப்புது புத்தகக் குழந்தைகளை
இலவசமாய் பெற்றுத் தருகின்ற
இளமைத் தாய் !

மாணவர்களின் அறிவுப் பசிக்கு
மகத்தான உணவளிக்கும்
அட்சய பாத்திரம் !

அன்றாடச் செய்தித் துளிகளை
அறியத் துடிப்போருக்கு
அருமைமிகு செய்திப்பூங்கா !

கதை, கட்டுரை துணுக்குகளைக்
கரும்பெனத் தருகின்ற
பத்திரிகைகளின் சுரங்கம் !

சாதி, மத, வயது, வேறுபாடின்றிச்
சமுதாய உயர்வுக்கு
அறிவை விரிவாக்கும் அகன்ற வானம் !

- எஸ்.ஆர். இராஜா,
நூலக ஆய்வாளர்; சிவகங்கை

நூலகத்தந்தை டாக்டர் எஸ்.ஆர். அரங்கநாதன்

திரு. சி. கோபால், உதவிஇயக்குநர் பொது நூலகத்துறை

டாக்டர் அரங்கநாதன், தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியில் 9.8.1892 ல் பிறந்தார். தம்முடைய மாணவப் பருவத்திலேயே மிகுந்தஅறிவுள்ளவராகத் திகழ்ந்தார். 1908 ல் எஸ்.எம். இந்து கல்லூரியில் படித்து மெட்ரிக்குலேஷன் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

கல்லூரி நாள்கள் :

1909 இல் கிருஸ்துவ கல்லூரியில் சேர்ந்து தமது கல்லூரிப் படிப்பைத் தொடங்கினார். கல்லூரியில் இன்டர்மீடியட் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். பி.ஏ., தேர்விலும் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். 1913 ல் எம்.ஏ., வகுப்பில் கணக்குப் பாடத்தை முக்கிய பிரிவாக எடுத்துப் படித்தார். 1916 ல் எம்.ஏ., படிப்பை முடித்தார். சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் 1917 இல் அரசு கலைக்கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். மங்களூர், கோயம்புத்தூர், சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவற்றில் கணக்கு, பௌதிகம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியராகத் திகழ்ந்தார். இவர் ஆசிரியராகத் திகழ்ந்த பொழுதே மாணவர்கள் நிறைய நூல்களைப் படிக்க வேண்டும் என்று கூறி அவர்களிடையே ஆர்வத்தைத் தூண்டிவந்தார்.

நூலகர் :

அரங்கநாதன் அவர்களுக்கு விருப்பமில்லையெனினும், அவர் 120 நூலகங்களைப் பார்வை செய்ததற்குப் பின்னால் கல்லூரி மாணவ மாணவியர் களுக்குச் சொல்லிக் கொடுப்பதைவிட இந்தச் சமுதாயத்துக்கு நூலகச் சேவை மூலம் நிறைய தொண்டுகள் புரிய முடியும் என்னும் உணர்வு அவருக்கு ஏற்பட்டது. எனவே, அவர் 1924 ல் மாநிலக் கல்லூரியை விட்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் நூலகராகச் சேர்ந்தார்.

திறந்தவெளி புத்தக இருப்பை நடைமுறைப் படுத்திய பெருமை, டாக்டர் அரங்கநாதன் அவர்களையே சாரும். டாக்டர் அரங்கநாதன் அவர்கள் ஐந்து நூலக விதி, கோலன் பகுப்புமுறை நூலையும், Cataloguing Code, Principles of

எழுச்சி தரும்

ஒரு சிறந்த நூல் நீ உணவு உண்ணும் போதுகூட உனது இடது கையில் வைத்தபடி உனக்குப் படிக்க எழுச்சிதரும்.

- ஜான்சன்

உயிர் மருத்துவ நிலையம்

எகிப்திய நாட்டு அரசனொருவன் புத்தகங்களின் மீது மீளாக் காதல் கொண்டிருந்தான். அரிய பல நூல்களைத் தேடி வாங்கி, படித்து, அறிந்து கொண்டு பத்திரமாக அவற்றைக் காப்பாற்றினான். அவற்றைச் சேமித்து வைத்திருந்த நூல் நிலையப் பகுதிக்கு என்ன பெயர் கொடுத்திருந்தான் தெரியுமா ? "எனது உயிர் மருத்துவ நிலையம் !"

- குன்றக்குடி அடிகளார்
திருவள்ளுவர் திருவிழா (25.2.68)

Management என்ற நூலையும் எழுதியுள்ளார்.

இவர் 1928 ஜனவரி 30ல் சென்னை நூலகச் சங்கம் ஒன்றைத் தொடங்கினார். இச் சங்கத்தின் முதல் சாதனையாகக் கன்னிமாரா பொது நூலகத்தில் நூல் இரவல் கொடுக்கும் முறை கொண்டுவரப்பட்டது. இவர் தம்முடைய சேமிப்பு முழுவதையும் நூலக வளர்ச்சிக்குச் செலவிட்டுள்ளார். 1956 ல் ரூ.1 லட்சத்தை Sarada Endowment of Professorship in Library Science என்ற பெயரில் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுத்துள்ளார். இதுபோல் 1964 ல் Sarada Ranganathan Endowment for Library Science என்ற பெயரில் ரூ.3 லட்சத்தைத் தான் சேமித்து வைத்த பணத்திலிருந்து கொடுத்துள்ளார்.

டாக்டர் அரங்கநாதன் வாசகர் வட்டம், ஆராய்ச்சியாளர்கள் கூட்டம் எனக் கூட்டங்களை நடத்தி பல அரிய கருத்துகளை வெளிப்படுத்தினார் 1948 ல் இந்திய நூலகர் சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நூலக இயக்கம் இந்திய நாட்டிற்கே புதியதென்றுதான் சொல்ல வேண்டும். இதைக்குறித்து அரசு கருத்தைச் செலுத்தியது 1948 ல் தான், அதுவும் நமது சென்னை மாநிலத்தில் தான். 1948 ல் இந்தியாவிலேயே முதன் முதலாகச் சென்னை மாநிலத்தில் தான் நூலகச் சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு முன்னோடி யாகவும் தூண்டுகோலாகவும் உறுதுணையாகவும் இருந்து பாடுபட்டவர் டாக்டர் அரங்கநாதன் அவர்கள்.

நூலகத்துறைக்கு டாக்டர் அரங்கநாதனின் பணிகள் :

டாக்டர் எழுதிய நூலகத்தின் ஐந்து விதிகள் நூல் நூலக வளர்ச்சிக்கு வழிகாட்டியாக அமைந்ததுடன் நூலகர்கள் ஆற்ற வேண்டிய பணிச் சிறப்பையும் வாசகர்கள் நூலகத்தைப் பயன்படுத்தும் வழி முறைகளையும் விஞ்ஞான நுட்பத்தோடு எடுத்துச் சொல்லி இருப்பது மிகவும் சிறப்பானதாகும்.

1924 ல் தொடங்கப்பட்ட பகுப்பு முறை (Theory of Classification) நூல் மிகச் சிறந்ததாக இருந்தது. 1933 ல் இதன் பதிப்பு வெளியிடப்பட்டது.

1935 ல் பகுப்புமுறை பட்டியல் (Classified Catalogue Code) வெளியிடப் பட்டது. இதன் விதிமுறைகள் டாக்டர்

கருத்தா? கனமா?

நூல்

கருத்து நிறைந்ததாக

இருக்க வேண்டும்,

கனமாயிருப்பதால் மட்டும்

பயன்தந்துவிட முடியாது.

- பொவி

அரங்கநாதன் அவர்களின் தீவிரமான சிந்தனையின் மூலம் வெளிவந்தவை களாகும்.

சங்கிலித் தொடர் (Chain Procedure) முறை பகுப்பு முறையில் மிகவும் சிறந்ததாகவும் பலரால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும் அமைந்திருந்தது.

நூல் தேர்வு, குறிப்புதவி பணி, நூலக நடைமுறைப்பணியும் கண் காணிப்பும் என்பன இவரது சிறந்த நூல்கள். இவை இன்றும் எப்பொழுதும் வழிகாட்டி நூல்களாக நூலகத் துறைக்கு அமைந்துள்ளன.

நூலகத்தைக் குறித்துப் பல்வேறு ஆராய்ச்சிகள், திறனாய்வுகள் செய்துள்ளார். தமிழ்நாட்டிலும், இந்தியா விலும் பல அந்நிய நாடுகளிலும் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தி அறிவால் பலரைக் கவர்ந்து உலகத்திற்கு இந்தியாவின் பெருமையை எடுத்துக் காட்டியவர் டாக்டர் அரங்கநாதன் அவர்கள். இவர் 60 நூல்களையும், 2500 நூலக அறிவியல் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பொது நூலகத் துறையின் நூலகத் தந்தை என அன்போடு அழைக்கப்படும் இவர் நூலகத்துறையின் கலைவல்லுநராகத் திகழந்து வருகின்றார்.

மிக முக்கியமான ஒன்று நூலகச் சட்டத்திற்கு வழி அமைத்துக் கொடுத்த தாகும். இவரது துணைவியார் திருமதி சாராதா ரங்கநாதன் அவர்கள், ''நூலக ஆராய்ச்சி உங்களுக்குப்பின் நடக்கா விட்டால் உங்கள் நெஞ்சு வேகாது'' என்று சொல்லியதின் மூலம் டாக்டர் அரங்கநாதன் நூலக ஆராய்ச்சியில் எந்த அளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அறியமுடிகிறது.

மவுனப் படிப்பு!

1. **ஒலித்தல் இன்மையால் ஒலி உறுப்புகளுக்கு அயர்வு ஏற்படுவதில்லை.**
2. **உடல் களைப்பின்றி நீண்ட நேரம் படிக்க உதவும்.**
3. **ஆழ்ந்து படிப்பதற்கு மவுனப்படிப்பே உதவும்.**
4. **விரைவாகப் படிக்க உதவுவது இம்முறை யேயாகும்.**
5. **நாவின் ஒலியைவிடக் கண்ணொளியின் விரைவே மிகுதியாகும்.**
6. **ஒலியைவிட ஒளியின் விரைவு இயற் கையில் மிகுதியாகும்.**
7. **பொருள் உணரவும், நின்று, பொறுத்து - தேவைப்பட்டால் மீண்டும் ஒரு முறை ஊன்றிப் படிக்கவும் மவுனப் படிப்பு சிறந்த தாகும்.**
8. **இலக்கிய நயம் உணர்ந்து அனுபவிக்க மவுனப் படிப்பு வசதியானது.**

- சந்திரவாணன்

தம் உயிர் மூச்செல்லாம் நூலக வளர்ச்சிக்காக என வாழ்ந்து பல படைப்புகளை இத்துறைக்கெனப் படைத்துத் தந்த டாக்டர் அரங்கநாதன் அவர்கள் தமது 80 வது வயதில் 27.9.1972 ல் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

இவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்த மறைந்த முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் ''டாக்டர் அரங்கநாதனின் மறைவு இந்தச் சமுதாயத்திற்கு ஒரு பெரிய இழப்பாகும்; நூலகத்துறைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் ஒப்புயர்வு இல்லாத தலைவர், மற்றும் அவரது திறமை படைத்த படைப்புகள் நூலக வளர்ச்சிக்கு ஒரு பேரொளியாய்த் திகழும், பொக்கிஷங்களாக இருந்து வரும்'' என்று கூறினார்.

நூலகங்கள் உள்ளவரை டாக்டர் அரங்கநாதனின் புகழ் என்றும் நிலைத்து இருக்கும். நூலகத்தையே தனது முதல் மகனாக ஏற்றுக் கொண்டதை அவரது மனைவி கூறிய சொற்கள் என்றும் நினைவில் நிறுத்தும். She said "Rao Saheb has got two sons and not one. The eldest son is Library Science".

இவ்விதமாக வாழ்க்கையையே நூலகமாகக் கருதி தமது செயல் முழுவதையும் நூலகப் பணிக்கே அர்ப்பணித்து வாழ்ந்த நூலகத் தந்தையின் வரலாற்றை நூலகர்கள் உணர்ந்து தமது நூலகப் பணிகளில் முழு கவனத்தையும் செலுத்தி நூலகப் பணிகள் சிறப்படைய உழைக்க வேண்டும். அவ்வாறு செய்வது ஒன்றே நூலகத் தந்தை டாக்டர் அரங்கநாதன் அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாக அமையும்.

பழங்காலத்தில் நூலகங்கள்

பண்டைக்காலத்தில் சமயங்களை வளர்க்க எழுதப்பட்ட நூல்கள் சமயம் சார்ந்த கோயில்களிலும், மடங்களிலும், பள்ளிகளிலும் சேர்த்துவைக்கப் பெற்றிருந்தன. பல கோயில்களில் பாதுகாப்பான அறைகளில் பல நூல்கள் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. பல மன்னர்களின் அரண்மனைகளிலும் நூல்களை சேகரித்து வைத்திருந்தனர். இவ்விதம் எழுதப்பட்ட நூல்களை சேகரித்து வைத்திருந்த இடங்கள் ஞான பண்டாரங்கள் (Gnana Bhandars) எனப் பெயர் பெற்றன. ''சரஸ்வதி பண்டாரம்'' என்பது நூலகத்தைக் குறிக்கும் சொல்லாகவும் இருந்தது. படையெடுப்புளின் காரணமாகவும், சமயச் சண்டைகளின் காரணமாகவும் பலசமய நூலகங்கள் செயல்பட முடியாமல் போய்விட்டது.

நூலகர் அறிமுகம்

தமிழக நூலகப்பணியில் ஈடுபட்டிருப்பவர்களை இந்த **'நூலகச் செய்தி மடல்'** மூலம் அறிமுகம் செய்து வைக்க முடிவு செய்துள்ளோம். இதற்கு உதவும் வகையில், நூலகர்கள் தங்களைப் பற்றித் தாங்கள் சிறப்பாகச் செய்துள்ள நூலகப்பணி குறித்த விவரங்களுடன், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், கீழ்கண்ட விவரங்களையும் அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

- ஆசிரியர்

இணைப்பு

1. பெயர் :
2. பிறந்த இடம், தேதி :
3. கல்வி - பொது, சிறப்பு :
4. பணி செய்யும் இடம் முகவரியுடன் :
5. அனுபவம் : பணியில் சேர்ந்த நாள்முதல் பணியாற்றியுள்ள இடங்கள் பற்றிய விவரங்கள்
6. ஆற்றியுள்ள சிறப்புப் பணிகள் :
7. பாராட்டும் பரிசும் பெற்றிருப்பின் அவைபற்றிய விவரங்கள் :
8. எழுத்துத் துறையில் அனுபவம் இருப்பின் எழுதிய நூல்கள் பற்றிய விவரம் :



"நூலகம் வாரீர் ! நூல்களைப் பாரீர் !"

நூலகம் வாரீர் நூல்களைப் பாரீர் !
காலம் வெல்லும் காட்சி காண்பீர் !
புத்தன், காந்தி போன்ற பெரியோர்
புத்தக வடிவில் புன்னகை புரிவார் !
பாரதி, தாசன் பாவலர் பலரும்
சீராய் நின்று சிந்தை கவர்வார் !
நேராய்ச் செல்லும் நெடுங்கதை பலவும்
கூராய் இருக்கும் காட்சி பாராய் !
இலக்கண இலக்கியம் இருக்கும், நல்ல
விளக்க மளிக்கும் அகராதி இருக்கும் !
வாழ்க்கை உயர்ந்து வளமாய் இருக்க
பாழும் மனது பண்பாய் இருக்க
நாளும் வருவீர் நூலகம்
மாளும் கயமை ! மலரும் புதுமையே !

– **சு. சுந்தரராசன்,** பி.ஏ., பி.எல்.ஐ.எஸ்.சி.,
நூலகர், கிளை நூலகம், சாப்டூர்
மதுரை மாவட்டம்

திருக்குறளின் பெருமை

பேராசிரியர் திருக்குறள் க. பாஸ்கரன், M.A., M.Sc., M.Phil., M.Ed., B.T.,
கல்லூரிக் கல்வி முன்னாள் இணை இயக்குநர்,
நிறுவனர், கருணாகரன் நினைவு திருக்குறள் நூலகம்,
அண்ணாநகர், சென்னை - 40.

உலக மொழிகளில் தொன்மையும், வளமையும், வலிமையும் மிக்க தமிழுக்குப் பெருமையைச் சேர்ப்பது திருக்குறள் என்றால் மிகையாகாது. தரணியில் தமிழ் மணம் கமழ, ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழகத்தில் திருக்குறள் மலர்ந்தது. கிறித்து பிறப்பதற்கு 31 ஆண்டுகட்கு முன்பு தோன்றிய திருவள்ளுவரால், தெள்ளு தமிழில், கருத்துக் கருவூலமாக, காவியமாக, அறநூலாக, தெவிட்டாத அறிவு விருந்தாக, நீதி இலக்கியமாக வாழ்வியல் பனுவலாக, வாழ்க்கைத் துணைநூலாக, வழிகாட்டியாகத் திருக்குறள் இயற்றப்பட்டது. அரிய கருத்தைச் சிறிய அளவில், இனிமையாக, எளிமையாக, தெளிவாக, வலிமையாகத் தெரிவிக்கும், திறனும், தனித்தன்மையும் திருக்குறளுக்கு உண்டு.

ஏழுச்சீர்கள் அடங்கிய ஈரடிகளில், விரிந்த கருத்துகளைத் திருக்குறள் சுருக்கமாக விவரிக்கிறது. குறள் வெண்பாவில் இயற்றப்பட்ட திருக்குறள், ஒவ்வொரு அதிகாரத்திலும் 10 செய்யுள் என்ற நிரல்படி 133 அதிகாரங்களில் 1330 திருக்குறள் பாக்களை உள்ளடக்கி முதல் நூலாக விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று இயல்களையும், தனித் தனிப் பகுப்பாக்கித், தம் படைப்பை முப்பாலாக்கிய பெரு நாவலராகிய திருவள்ளுவர், திருக்குறளை அறநூலாகத் தோற்றுவித்துள்ளார்.

'ஒரு முறைக்குப் பத்து தடவை கூறு' என்பது நடை முறையில் வழங்கப்படும் அறிவுரையாகும். 'கடவுள் வாழ்த்து' முதலாக ஊடலுவகை ஈறாக, அடங்கிய 133 அதிகாரங்களுள் ஒவ்வொரு அதிகாரத் தலைப்பின் பொருளையும் 10 குறட்பாக்கள் வாயிலாக திருக்குறள் 10 முறை வலியுறுத்துகிறது. ஒவ்வொரு திருக்குறளின் கருத்தும், கற்பனையும், சொல்லும், சுவையும், பயனும், பொருளும், உவமை நயமும் படிப்போர் உள்ளத்தில் உறுதியாகப் பதிய, ஒவ்வொரு அதிகாரத்தின் பத்து குறள்களும் கருவிகளாகப் பயன்படுகின்றன.

தமிழ்மொழியின் 247 எழுத்துகளுள் உயிரின் முதல் எழுத்து 'அ' எனவும், மெய்யின் இறுதி எழுத்து 'ன்' எனவும் அறிவோம். திருக்குறளின் முதல் செய்யுள் ஆகிய

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

உயிரில் தொடங்கி, அஃது முதல் எழுத்தாகிய 'அ' - வில் தொடங்கித் திருக்குறளின் கடைசிச் செய்யுளாகிய

'ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்

கூடி முயங்கப் பெறின்.'

என மெய்யில் முடிவுறுகிறது. நெடுங்கணக்கு வரிசையில் இறுதி எழுத்தாகிய 'ன்' பெற்று நிறைவாகிறது.

வான வில்லின் வண்ணங்கள் ஏழு. நாள்கிழமைகள் ஏழு. உலக வியப்புகள் ஏழு. ஏற்றமிகு எளிய எண்ணாகிய ஏழுக்கும், முப்பாலாகிய திருக்குறளுக்கும் நெருங்கிய தொடர்பு புலப்படுகிறது. அறத்துப்பால் 38, பொருட்பால் 70, இன்பத்துப்பால் 25 அதிகாரங்களாக விரிந்து திருக்குறளின் 133 அதிகாரங்கள் பகுக்கப்படுகின்றன.

பொருள் - 70 ; கூட்டு 7 = 7 + 0

இன்பம் - 25 ; கூட்டு 7 = 2 + 5

பொருட்பாலில் அரசு, அமைச்சு, அரண், கடி, படை, நட்பு, குடி ஆகிய 7 இயல்கள் அடங்கும். திருக்குறளில் அதிகாரங்கள் 133 கூட்டு எண் 1 + 3 + 3 = 7. திருக்குறளில் அடங்கிய செய்யுள் 1330. கூட்டு எண் 7 ஒவ்வொரு திருக்குறளில் அடங்கியுள்ள சீர்கள் 7. ஏழு, எழுமை, முதலிய ஏழு எண் அடங்கிய சொற்கள் திருக்குறளில் 11 இடங்களில் காணப்படுகின்றன. ஏழுடன் தொடர்புடைய திருக்குறளை இயற்றிய திருவள்ளுவர் சொல்லின் எழுத்துகளின் எண்ணிக்கையும் ஏழாகும். திருக்குறளில், எளிய எண்ணாகிய ஏழும் ஏற்றம் பெறுகிறது.

திருக்குறளுக்குப் புகழ் மாலையை அணிவிக்க புலவர்கள், இலக்கிய மேதைகள் முற்பட்டனர். பாராட்டுரைகள் பாவடிவில் உருவான தொகுப்பு நூலே திருவள்ளுவமாலை. திருவள்ளுவரையும், திருக்குறளையும் சீரிய முறையில் சிறப்பிக்கும் புகழுரைகளுக்கெல்லாம்; திருவள்ளுவமாலை முன்னோடியாக அமைகிறது.

கண்ணுக்குப் புலப்படாத அணு, மிக நுண்ணியது எனவும், நுண்துகளையும் பகுக்க இயலும் எனவும் முதன் முதலில் உலகுக்கு உணர்த்தியவர் தமிழ் மூதாட்டியார். இதனை ஔவை எழுதிய திருவள்ளுவ மாலை ஈரடி செய்யுள் மூலம் அறியலாம். மிக நுண்ணிய அணுவை துளைத்து, ஏழு கடல்களையும் அத்துளையினுள் புகுத்தி, தன்னளவில் குறுகுமாறு செய்தல் மிக அரிது. அரிதிலும் அரிது. கற்பனைக்கும் எட்டாத இது மாபெரும் வியப்பை அளிக்கிறது. மெய் சிலிர்க்கிறது.

அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி

குறுகத் தறித்த குறள்

எனத் திருக்குறளின் கருத்தாழத்தையும், கற்பனைச் செறிவையும் மிக அருமையாகப் பாராட்டுகிறார், ஔவையார்.

தமிழ் மொழியில் இலக்கியங்கள் அகம், புறம் என இருபெரும் பிரிவுகளாகப் பகுக்கப்படுகின்றன. மங்காப் புகழ் எய்திய சங்க இலக்கியங்களுள் முதன்மையாக விளங்கும் திருக்குறள் மட்டும் அகம், புறம் ஆகிய இரு கூறுகளையும் தெளிவாக விளக்குகிறது. இலக்கியத்துக்கு இலக்கணமாக இலங்கும் திருக்குறள் எண்ணத்தில், எழுத்தில், எழுச்சியில், சொல்லில் பொருளில் புரட்சியை எழுப்பும் ஆற்றல் மிக்கது.

பிரஞ்சு, இரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடுகளில் எழுந்த புரட்சிகளைப்போல், தமிழகத்தில் திருக்குறளால் புரட்சி ஏற்படவில்லை. திருக்குறள் கருத்துக்கள் மக்கள் மன்றத்தில், சமுதாயத்தில் நெருக்கமாக, இணையவில்லை. ஏன் எனில், திருக்குறள் வகுப்பறை நூலாகக் கருதப்பட்டுத் தமிழ்ப்புலவர்கள் மூலம் கற்பிக்கப்பட்டது. தமிழாசிரியர்கள் நீங்கலாகப் பிறதுறைகளைச் சார்ந்த பெருமக்கள், பாதுமக்கள் எல்லாம் திருக்குறளைக் கற்கத் தவறினர்.

நல் இலக்கியங்கள் மனிதனையும், மனித வாழ்வையும், மையமாக அமைத்து இயற்றப்பட்டவை. இலக்கியத்தின் தகுதியை நிரல் படுத்தும்போது சில இலக்கியங்கள் கற்கத்தக்கன; சில கற்று, சிந்தித்து உணர்ந்து வாழ்வை நெறிப்படுத்தத்தக்கன என்பது புலப்படும். இத்தகைய அனைத்து இயல்புகளும் ஒரு குறிப்பிட்ட இலக்கியத்துக்கு அமைவதில்லை. இவ்விலக்கிய வரிசையில் சற்றுச் சிந்தித்து, உணர்ந்து, வாழ்வியல் நெறிகளுக்கேற்ப ஒழுகத்தக்க ஒப்பற்ற இலக்கியம் திருக்குறள் ஒன்றே என்பது சான்றோர்களின் முடிவாகும்.

நல்லன நாடி அல்லன புறக்கணித்துப் பகுத்துணரும் மனமுடைய மனிதன் பிற உயிரினங்களைவிட உயர்ந்தவன் என்பது. தெளிவு பண்பாலும் பாங்குறு எண்ணங்களாலும் மனித வாழ்க்கை மாட்சிமையாக விளங்குதல் இன்றியமையாதது. பறவையைப் போல் விண்ணில் பயணம் செய்யவும், கயலைப் போல் ஆழ்கடலிலும் நீந்தவும் மனிதனுக்கு இயலும். மனிதன், அறநெறிகளுக்கு ஏற்ப சிந்தனை, சொல், செயல் ஆகிய மூன்றிலும் தூய்மையாக, உயர்ந்த உள்ளத்துக்குரிய மனிதனாக ஒழுக திருக்குறள் கற்பிக்கிறது.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

உயிரினும் மேலானது ஒழுக்கம் என அழுத்தமாகத் திருவள்ளுவர் கூறுகிறார்.

மனிதனை உயர்த்துவன, உயரம், பருமன், பணம், பதவி, பொலிவு, குலம், சமயம், கல்வி முதலியவைகள் அல்ல. அன்பு, அறிவு, அடக்கம், இனிமை, ஈகை, ஊக்கம், ஒழுக்கம், பண்பு முதலிய பல்வேறு நன்னெறிகள் மனித வாழ்வில் உடைமைகளாக அமையுமாயின் தனி மனித வாழ்விலும், சமுதாயத்திலும் அமைதி நிலவும்; இன்பம் பெருகும்; இதற்கு வழிகாட்டுகிறது திருக்குறள்.

அன்பின் வழியது உயிர் நிலை; அறத்தால் வருவதே இன்பம்; அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை; அற்றால் அளவறிந்து உண்க; அறிவுடையார் எல்லாம் உடையார்; உள்ளத்து அனையது உயர்வு; மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன் இன்னபிற திருக்குறள் அறிவுரைகள் இல்வாழ்க்கைக்கும், இணைந்த சமுதாய வாழ்க்கைப் பயணத்துக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காய் ஒளிர்கின்றன. நாளுக்கு நாள் நாட்டில் அமைதியின்மை அனல் பரவி, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல் இன்னபிற தீயவைகளால் அல்லலுக்குட்பட்ட சமுதாயத்தில் மேன்மைமிகு மனிதப் பண்புகளை அறிந்து, உணர்ந்து, தேர்ந்து, தெளிந்து வாழ்வில் ஏற்படும் எண்ணற்ற சிக்கல்களுக்குத் தீர்வுகளை நல்கி, மனிதனையும் மன்பதையையும் நெறிப்படுத்தும். நீதி இலக்கியமாகத்

திருக்குறள் இயற்றப்பட்டது. ஒரே புதல்வனை இழந்து, துயருறும் தந்தைக்கு,

துன்பத்திற்கு யாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சம் துணையல் வழி. திருக்குறள் 1299

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். திருக்குறல் 628

என்ற திருக்குறள் அறிவுரைகள் ஆறுதல் மொழிகளாக அமைகின்றன.

யாதும் ஊரே; யாவரும் கேளிர் என்ற மூதுரையின் கருத்து திருக்குறளில் எதிரொளிக்கிறது. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வைத் திருக்குறள் உரைக்கிறது.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். திருக்குறள் 972

என்பது திருவள்ளுவரின் அருள் வாக்கு.

அறநெறிகளை அழகாக, ஆழமாக, இனிமையாக, எளிமையாக, ஏற்புடையதாக, வளிமையாக வரையறுத்து, திருக்குறள் அறநூலாக அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்பாவலர் எனப் புகழப்படும் திருவள்ளுவர் ஈரடிகளால் உலகில் உள்ளவைகளை எல்லாம் ஓர்ந்து அளந்தார்.

எல்லாப் பொருளும் இதன்பால் உள. இதன்பால் இலாத எப்பொருளும் இல்லை என மூதுரை தமிழ் நாகனார் என்ற புலவர் திருக்குறளின் பெருமையை உணர்ந்து உரைக்கிறார்.

மணவளமாக மழை பொழிந்து, மனித குலம் நலம் பெற மக்கள் மாட்சிமையுடன் வாழ, முதிர்ந்த பட்டறிவின் விளைவால் வெளியிடப்பட்ட வியக்கத்தக்க, விரிநீர் வியனுலகம் போற்றும் படைப்பாகத் திருக்குறள் அவனியில் பவனி வருகிறது. உலகியல் வாழ்வுக்குத் திருக்குறளறிவு இன்றிமையாதது. முயன்றால், ஒவ்வொரு மனிதனும் மூதுரைக் கேற்ப வாழ இயலும் இருள் விலக ஞாயிறு உதயமாகி ஒளிக்கதிர்களைப் பரப்புவதற்கு ஒப்பத் திருவள்ளுவர் பகலவன் உலக வானில் எழுந்து, திருக்குறள் கதிர்களைப் பாரெங்கும் பரப்பி, நம் உள்ளங்களுள் ஊடுருவுகிறார். நெஞ்சத்திரையில் இன்றும் என்றும் நிலைத்த ஒவியமாகத் திருக்குறள் தீட்டப்பட்டுள்ளது.

Dr. Albert Schweitzer

There hardly exists in the literature of the World, a collection of maximum in which we find so much lofty wisdom in

It is a text book of indispersable authority on moral life. The maximum of Thiruvalluvar have touched my heart. எனத் திருக்குறளின் உயர்வை உணர்ந்து உரைத்திருக்கிறார், உலக உத்தமர் மகாத்மா காந்தி.

ஈராயிரம் ஆண்டுகளின் வரலாற்றை நினைவு கூர்ந்தால் எத்தனை மாற்றங்கள், மறைவுகள், தோற்றங்கள், பல்வேறு முன்னேற்றங்கள், கருத்து மலர்ச்சி, சமுதாயப் புரட்சி, முதலியன நிகழ்ந்து வந்துள்ளன என அறியஇயலும். இருப்பினும் எம்மொழியினருக்கும், எந்நாட்டவருக்கும், எவ்வினத்தவருக்கும், எச்சமயத்தினருக்கும், எக்காலத்தாருக்கும், எப்பிரிவினருக்கும், எந்நிலையினருக்கும் வழிகாட்டும் நூலாகக் கலங்கரை விளக்கமாக,

ஈடு இணையற்ற உலக இலக்கியமாக விளங்குவது திருக்குறள் ஒன்றே. உலக இலக்கியங்களுள் திருக்குறளுக்குத் தனியொரு இடம் உன்டென்பது உலகறிந்த உண்மை ஆகும்.

எப்பாலவரும் விரும்பும் முப்பாலை விரும்பி ஏற்கத்தக்க ஏற்றமிகு அரும்பெரும் முதல் ஒழுக்க நூலாக, உலகப் பொதுமறையாக திருக்குறள் கருதப்படுவதில் வியப்பில்லை.

தமிழ்மறை, பொதுமறை, பொய்யாமொழியாகிய திருக்குறள், தமிழ் மொழியின் தனி முதல் நூலாகத் தமிழகத்தில் தோன்றினாலும் திருக்குறளில் தமிழ், தமிழர், தமிழகம் ஆகிய சொற்களைக் காண இயலாது.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

இம்முதல் திருக்குறளின் இறுதியில் 'உலகு' எனும் சொல் குறிப்பிடப்படுகிறது, உலகுடன் திருக்குறள் தொடங்கி, மொழி, நாடு, இனம், எல்லை ஆகியவைகளுக்கு அப்பாற்பட்டு, அவைகளைக் கடந்து விளங்கும் உலகம் தழுவிய பொதுமறை எனத் திருக்குறள் மதிக்கப்படுகிறது. உலகம், உலகு ஆகிய சொற்கள் திருக்குறளின் 57 இடங்களில் காணப்படுகின்றன.

திருக்குறளை முதன் முதலில் ஓலைச் சுவடியிலிருந்து அச்சேற்றியவர்கள் இருபெரும் பேராசிரியர்கள்; முதல்வர் திருத்தணி விசாகப் பெருமாளையர்; அடுத்தவர் யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலர். அத்தொண்டினைத் தொடங்கித் தொடரத் தவறியிருந்தால் திருக்குறளும் பல தமிழ்ச் சுவடிகளைப்போல் அழிந்துபட்டிருக்கலாம்.

திருக்குறளை மொழி பெயர்க்கும் அரிய பணி 600 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கியிருக்கிறது; பெயர் தெரியாத ஒருவரால், மலையாளத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. அண்மையில் எழுத்து வடிவம் பெற்ற சௌராட்டிர மொழியிலும் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டது. உலகில் பெரும்பான்மையான மொழிகளில் பெயர்க்கப்பட்ட நூல்களுள் மூன்றாம் நிலையைத் திருக்குறள் எய்தி இருக்கிறது. முதல் இரண்டு நூல்களாகிய விவிலியமும், குரானும் சமய நூல்கள் எனக் கருதப்படுவதால், அவைகள் நீங்கலாக நீதி இலக்கியமாகிய திருக்குறளுக்குத்தான், அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் எனும் பெறுமை வழங்கப்படுகிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, கம்பராமாயணம் ஆகிய காப்பியங்களிலும் சேக்கிழார் அருளிய பெரியபுராணத்திலும் பாரதியார் இயற்றிய கவிதைகளிலும் திருக்குறள் கருத்துகள் எதிரொளிக்கின்றன. எனவே திருக்குறள் நீர் பாயாத இலக்கியக் கழனி எங்கும் இல்லை.

தேசிய பாடல், தேசிய கொடி, தேசிய பறவை ஆகியவை போல் தேசிய நூல் என எப்பாலராலும் ஏற்றிப் போற்றப்படும் தகுதி உலகப் பொதுமறையாகிய திருக்குறளுக்கு மிகுதியாக உண்டு. அந்நிலை ஏற்படுமாயின் நாட்டு மக்களின் எண்ணங்களுக்கு ஆக்கமான பற்றுக்கோடு உருவாகி, ஒழுக்கமும், மேம்படும், மன்பதைக்கு உள்ளொலியையும், ஒருமைப்பாட்டுச் சுடரொளியையும், பரப்பும் அணையாத் திருவிளக்காகத் திருக்குறள் தேசிய நூலாக திகழ விழைவோம்.

தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறை எட்டு குறிக்கோள்கள்

1. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு பொது நூலகத்திற்கும் இலவச நிலம் பெறுதல்.

2. பொது நூலகங்கள் செயல்படும் ஊர்களில் உள்ள படித்த ஒவ்வொருவரையும் நூலக உறுப்பினராகச் சேர்த்தல்.

3. தமிழகத்திலுள்ள ஒவ்வொரு பொதுநூலகத்திற்கும் பொதுமக்களிடமிருந்து நன்கொடையாகப் போதிய தளவாடங்களைப் பெறுதல்.

4. பொது நூலகம் ஒவ்வொன்றுக்கும் இரு பகுதி நேர நூலகங்கள் திறந்து செயல்படுத்துதல்.

5. பொது மக்களிடமிருந்து நூலகங்களுக்கு நன்கொடை யாக நூல்கள், நாளேடுகள் மற்றும் பருவ இதழ்கள் பெறுதல்.

6. நூலகந்தோறும் புரவலர்களைச் சேர்த்து நூலக இய்க்கத்தை வளர்த்தல்.

7. இருபதாம் நூற்றாண்டின் இறுதிக்குள் ஒவ்வொரு நூலகத்தையும் சொந்தக் கட்டிடத்தில் செயல் படச்செய்தல்.

8. நூலகங்களை வங்கிகள் மற்றும் பிற நிறுவனங்கள் தந்து எடுக்க ஆவன செய்தல்.

நூலகப் பெட்டகம்



அறிவை வளர்க்கும் ஆயிரம் நூல்கள்
அடங்கிக் கிடக்குது பாருங்கள் இங்கே !

அறிவை வளர்க்கும் ஆயிரம் நூல்கள்
ஆராயத்தூண்டும் ஆராய்ச்சி நூல்கள்
இன்பத்தை அளித்திடும் இனிக்கும் கதைகள்
ஈகையை உணர்த்தும் ஈசாப் கதைகள்
உண்மையை விளக்கும் வேதிய நூல்கள் - மன
ஊனத்தைப் போக்கும் வேதாந்த நூல்கள்
எண்ணியதைச் செய்யும் கம்பியூட்டர் நூல்கள்
ஏக்கத்தைப் போக்கும் காதல் நூல்கள்
ஐயத்தை நீக்கும் ஐம்பெரும் காப்பியம்
ஒற்றுமை வளர்க்கும் தேசீய நூல்கள்
ஓட்டம் பிடித்திடும் விளையாட்டு நூல்கள்
ஔடதமாகும் மருத்துவ நூல்கள் - இவை

ஒன்று சேரக் காணலாம் ! நூலகம் வாரீர் !!
பறைசாற்ற வேண்டுமோ ! நூலகத்தின் அருமையை !!

சுசிலா கணேசன்
துணை இயக்குநர்
பொது நூலகத்துறை

வலுவான சமுதாயம் படைக்க நூலகம்

எம்.பி. சிவகுமார்
முதல் நிலை நூலகர், மாவட்ட மைய நூலகம்
உதகமண்டலம்

உலகத்தில் வாழும் அனைவரும் மகிழ்வாக இருக்கவே பாடுபடுகிறார்கள். அதற்கு அவரவர்கள் ஈடுபடும் துறைகளில் சிறந்து விளங்கி, பொருள் செல்வத்தை சேர்த்து இனிமையாக வாழ விரும்பு கிறார்கள் ஒவ்வொருவரும் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் புகழ்பெற்று திகழ பாடுபடு கிறார்கள். பொருட் செல்வம் பெற்றுவிட்டாலும் மன அமைதிக்காக ஏங்குபவர்கள் பலர். இதில் பலர் வெற்றி பெறுகிறார்கள். பலர் தோல்வி அடை கிறார்கள். இதில் வெற்றிப் பெற்றவர்களின் வாழ்க்கையை அலசிப் பார்த்தால் அவர்கள் பல இன்னல்களுகிடையே நிரந்தர சந்தோஷத்துடன், நன்மைகள் பல செய்து, மன அமைதியுடன் மற்ற வர்களின் வாழ்க்கையையும் மேம்படுத்தியவர்கள் என்பது புரியவரும். மேம்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்கள் மற்றும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் அறியாமை என்ற இருளை அகற்றியவர்கள். அந்த அறியாமை என்ற இருளை போக்குவதற்கு தேவைப்படுவது அறிவு. அறியாமை என்ற இருளை போக்கி அறிவை தாங்கள் பெற்றது போல் மற்ற வர்களுக்கும் அளிக்க காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனும் சரியான அறிவை பெற்று விட்டால் நமது சமுதாயத்திற்கும். நாட்டிற்கும் ஏன் இந்த உலகத்திற்கே பயனுள்ளவர்களாக இருப்பார்கள்.

இந்த அறிவை பெறுவதற்கு சரியான வழிகாட்டுதல் தேவைப்படுகிறது. அவ்வாறு வழிக்காட்டுபவர்கள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இராமகிருஷ்ண பரஹம்சர், விவேகானந்தர், அரவிந்தர், புத்தர், இயேசுபிரான், நபிகள் நாயகம், காந்தியடிகள் போன்றவர்களிடம் சென்று தற்போது அறிவுரைகள் கேட்க இயலுமா? என்றால் அது இயலும். அந்த மகான்கள் அனைவரும் இப்பொழுதும் உயிருடன் இருக்கிறார்கள். அந்த உயிர்கள் அனைத்தும் தங்களிடம் யாராவது வரமாட்டார்களா என்று ஏங்கி கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு துறையிலும் சிறந்து விளங்கியவர்கள் எல்லாம் தங்களுடைய வெற்றியின் இரகசியத்தை சொல்ல ஆவலுடன் காத்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வாழ்க்கையில் வெற்றி பெற்றவர் அனைவரும் புனிதமான ஒரே இடத்தில் மற்ற வர்களுக்கு உதவி செய்ய காத்து கொண்டிருக் கிறார்கள். ஒரு இடத்திலேயே அனைவரையும் சந்திக்கலாம். அவ்வாறு அவர்களை நாம் அணுகினால் அறிவுரைகளை வழங்க அவர்கள் பணம் பெறுவதில்லை கோபப்படமாட்டார்கள். நமக்கு ஏதாவது தெரியவில்லை என்றால் சிரித்து மனத்தை துன்புறுத்த மாட்டார்கள். ஓய்வில்லாமல் நமக்கு வேண்டிய அறிவை அளிப்பவர்கள். அப்பேற்பட்ட உயிர்கள் அனைத்தும் மனித வாழ்க்கையை மேம்படுத்த புத்தக வடிவிலே ஒரு புனிதமான இடத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உயிர்களின் உன்னதமான இருப்பிடம்தான் நூலகம். அந்த நூலகம் தான் ஒரு பல்கலைக் கழகமாக திகழ்கிறது. அந்த பண்பாட்டு களஞ்சியம் தான் பொது நூலகமாகவும் பிரதிபலித்து வருகின்றது.

அப்பேற்பட்ட நூலகத்தை மனிதன் சரியாக பயன்படுத்தினால் அவனுடைய வாழ்க்கையை பயனுள்ள வாழ்க்கையாக மாற்ற இயலும் என்பதில் ஐயம் இல்லை. உதாரணமாக சுவாமி விவேகானந்தர் உலகத்தில் உள்ள பல மக்களை விழிப்படைய செய்தார். குறிப்பாக இளைஞர்களை தட்டி எழுப்பியவர் இன்று அவரிடம் பழக இயலவில்லையே! அவருடைய அறிவுரைகளை பெற முடியவில்லையே என்று ஏங்க அவசியமில்லை. இன்றும் அவருடன் பழக இயலும் அவரது பொன்னான நூல்களின் மூலம் நமக்கு வேண்டிய கருத்துக்களை, அறிவுகளை பெற முடியும். இவ்விதம் நிறைவேற இன்றும் அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் நூலகத்திற்கு சென்றால் போதும் நாமும், நமது வாழ்க்கை முறையை மாற்றி அமைத்து நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் பயனுள்ளவர்களாக வாழ முடியும்.

நமது சமுதாயத்தில் பலதரபட்ட மக்கள் உள்ளனர். பலதரப்பட்ட தொழில்கள் செய்பவர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கை சிறப்பாக அமைய

பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றிய அறிவு தேவைப்படுகிறது. இல்லற வாழ்க்கையில் இருப்பவர்கள் அவர்களுடைய தாம்பத்ய வாழ்க்கை இன்பகரமாக அமையவும் ஒரு பெண் நமது சமுதாயத்திற்கு ஒரு வலுவான திடகாத்தரமான குழந்தையைப் பெற்றுத்தர, அவர்களுடைய கர்ப்ப காலத்தில் எவ்வாறு உடல் ஆரோக்கியத்துடனும், மன ஆரோக்கியத்துடனும் இருக்க வேண்டும் என்ற வழிகாட்டலைப் பெறவும், சமுதாயத்திற்கு பயன் பெறும் வகையில் நாட்டுப்பற்று மிக்க ஒரு குழந்தையை உருவாக்க போதிய அறிவை பெற்றோர்கள் பெறவும், ஒரு சிறந்த குடிமகனாக மாணவர்களை உருவாக்க ஆசிரியர் பெருமக்கள் ஆற்றலை பெறவும், ஒரு மாணவன் ஒழுக்க சீலனாகவும், பண்பாட்டுள்ள வனாகவும் திகழவும் அறிவு பொக்கிஷமாகிய நூலகம் ஒரு சிறந்த வழி காட்டியாக அமையும் என்பதில் எந்த வித ஐயமும் இல்லை.

வணிக்கத்துறையில் ஈடுபட்டவர்களாக இருந்தாலும் சரி, ஏதாவது ஒரு அமைப்பை நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, அவர்களது துறைகளிலே சிறந்து விளங்க பயனுள்ள விஷயங்களை அளிக்க வல்லது நூலகம். விவசாயத்தில் ஈடுபடுபவர்களும், அவர்கள் எந்த தருணத்தில் அதை பயிரிடுவது? மகசூலை பெருக்குவது எப்படி? போன்ற அத்தியாவசியமான விஷயங்களை நூலகம் அளிக்கிறது. இவ்வாறு அவரவர்கள் துறைகளிலே சிறந்து விளங்கி ஈட்டுகின்ற பொருட் செல்வத்தை சமுதாயத்திற்கு பயன்படும் வகையில் உபயோகப்படுத்த அறிவுச் செல்வத்தையும் நூலகம் வழங்குகிறது. இவ்வாறு வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் சமுதாயத்திற்கும். இந்த உலகத்திற்கும். இன்றியமையாத அறிவை அளிக்கும் நூல்களை விலைக்கு வாங்கி ஒரு தனிப்பட்ட மனிதன் பயன் பெறுவது என்பது மிகவும் சிரமமானதொன்றாகும். எனவே, ஒவ்வொரு சாதாரண குடிமகனும் எந்தவித வித்தியாசமின்றி அறிவு பொக்கிஷமாக நூலகத்தை பயன்படுத்த அரசு பல்வேறு வகையில் உதவி புரிந்து வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு தனிமனிதன் தன்னுடைய வாழ்கையைப்பற்றி அறிந்து, தன்னையே ஆராய்ந்து பார்த்து, வாழ்க்கையின் இரசகசியத்தை அறிந்து, நமது பாரத நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் ஏன் இந்த உலகத்திற்கும் நன்மைகள் செய்து ஒழுக்க முள்ளவர்களாக, பண்பாட்டுள்ளவர்களாக புகழுடன் வாழ நூலகம் பெரிதும் உதவும் என உறுதியாக கூறலாம். ஒவ்வொரு நூலும் ஒவ்வொரு உயிராக வாழ்த்து கொண்டிருக்கின்ற நூலகத்திலே அறிவுகள் தேங்கிக் கிடக்கின்றன. அந்த அறிவைப் பருக, பருக ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையும் ஒளிமயமான வாழ்க்கையாக அமையும். அவ்வாறு ஒவ்வொரு மனிதனும் சிறந்து விளங்கும் போது ஒரு வலுவான, அமைதியான, சமுதாயம் படைக்கப்படும் என்பதில்

பள்ளியும் நூலகமும்

அ. சுப்பையன்

மூ. நிலைநூலகர் காமராஜர் மாவட்டம்

பள்ளிக் கூடமும் நூலகமும்
படிப்பவர்க் இரண்டு கண்களென
கல்லா தாரும் அறிவாரே;
கற்கை நன்றென உணர்வாரே!

அகர முதல எழுத்தெல்லாம்
அறியச் செய்வது பள்ளியெனில்
சகலமும் அறிந்த மேதையென
சாற்றிடச் செய்வதும் நூலகமே!

ஆசான் இன்றிக் கற்றிடவும்
அனுபவ அறிவு பெற்றிடவும்
தேச நடப்பு தெரிந்திடவுன்
தினவும் உதவிடும் நூலகமே!

வய்து வரம்பு கிடையாது;
வாழ்க்கை வசதி தேவையில்லை!
சுயமாய் கற்றுத் தேர்ந்திடலாம்;
சுத்திர உணர்வு பெற்றிடலாம்!

பள்ளிகள் போலும் நூலகமும்
பரந்து விரியச் செய்திடுவோம்;
இல்லா ஊரே இல்லையென
எங்கும் நூலகம் அமைத்திடுவோம்!

With Best Compliments from:

M.C.C. BANK OFFERS

13% for 46 days Term Deposits

Dividend of 17.5% paid to the share-holders highest

in the banking sector

54 branches in the City of Chennai

First licenced C.C.B. in the State of Tamil Nadu By RBI

Net profit crossed Rs.18 crores

INVEST! EARN!! PROSPER!!!

MADRAS CENTRAL CO-OPERATIVE BANK LTD

114/1, Prakasam Salai, Broadway
Madras-600 108.

பதிவு எண் :3585/96-E (பொது நூலகச் செய்திமடல்)

With Best Compliments from:

If you want to be "seen" by businessmen don't miss advertising in TRINITY MIRROR



English daily simultaneously Published from **Madras, Coimbatore** and Madurai.

From the people who have been bringing you **Makkal Kural**, the popular Tamil daily, since 1973. Carries the **latest stock market / share prices on the same day. And news on public issues, new ventures, and economic Policy matters, every day.**

Features current events, political affairs, sports ...
In-flight newspaper on IA, BA, AI, MAS, SA, NEPC, etc.
Excellent distribution network ensures delivery even in rural areas ... and Bombay, Delhi, Bangalore and other State capitals/metros.

For details, contact :
The Advertisement Manager
TRINITY MIRROR
The National Daily for the People
1, First Main Road, United India Colony, Kodambakkam,
Madras - 600 024. Phone : (044) - 4831188/4836464
Fax : (044) - 4832833